REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 மார்ச் 10 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 59 | March 10,Wednesday, 2021 | 20பக்கங்கள் | 30/-

## கேஸ் விலைகளை அதிகரிக்க எந்த முடிவும் கிடையாது



சமையல் எரிவாயுவின் (கேஸ்) விலைகளை அதிகரிப்பதற்கு எரிசக்தி அமைச்சோ வர்த்தக அமைச்சோ எந்த முடிவும் எடுக்கவில்லையென அமைச்சர் 06

ஐ.நாவில் பொய்யான யுத்தக்குற்றச்சாட்டு;

## படையினரை பாதுகாக்க அரசு அனைத்துவிதமான நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து படையினரை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கிறதென இராணுவத் தளபதி ஜெனரல் 06

## மேல் மாகாணத்தில் தரம் 05,11,13 மட்டுமே மார்ச் 15 இல் ஆரம்பம்

ஏனைய தரங்கள் அனைத்தும் ஏப்ரல் 19இல்

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து பாடசாலைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படுமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். 06

## பாராளுமன்ற பெண் உறுப்பினர் ஒன்றிய இணையத்தளம் உதயம்

பிரதமர், சபாநாயகர் தலைமையில் அங்குரார்ப்பணம்



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (https://slwpc.org/) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சபாநாயகர் 06

## தடுப்பூசி வழங்கலில் எந்த அரசியல் தலையீடும் கிடையாது

முறைப்பாடு கிடைத்தால் உரிய நடவடிக்கை



**ஷம்ஸ் பாஹிம்**

கொரோனா தடுப்பூசி வழங்குவதில் எந்த அரசியல் தலையீடும் கிடையாது. அவ்வாறு தலையீடு தொடர்பில் முறைப்பாடு கிடைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென இணை 06

அரசியல் பழிவாங்கல், ஊழல் மோசடி;

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரு அறிக்கைகள் சபையில்



**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அமைச்சர் தினேஷினால் சமர்ப்பிப்பு

அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் நேற்று பாராளுமன்றத்தில் 06

இந்திய சீரம் நிறுவன 10 இலட்சம் ஒக்ஸ்போர்ட் செனேக்கா;

## தடுப்பூசிகள் குறித்த நேரத்தில் இலங்கைக்கு கிடைக்கும்



இந்திய தூதுவர் சுகாதார அமைச்சுக்கு உறுதிமொழி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்து இலங்கை கொள்வனவு செய்யவுள்ள 10 இலட்சம் ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ரா செனேக்கா தடுப்பூசி எதுவித தாமதமுமின்றி குறிப்பிட்ட தினத்தில் இலங்கைக்கு கிடைக்குமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் 06



இன்னும் 5 தினங்களில்...

2014 வரை இலாபமீட்டிய ச.தொ.ச

## 2015 - 2019 நல்லாட்சியில் ரூ.20 பில்லியன் இழப்பு

பாரிய நஷ்டம் குறித்து தடயவியல் கணக்காய்வு



**சபை நிருபர்கள்**

2015/ 2019 காலப்பகுதியில் கடந்த ஆட்சியில் ச.தொ.ச நிறுவனத்துக்கு 20 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று தெரிவித்தார்.

2014 வரை இலாபமீட்டும் நிறுவனமாக இருந்த ச.தொ.ச நிறுவனம், கடந்த ஆட்சியின் போது ஏற்பட்ட பாரிய நஷ்டம் குறித்து தடயவியல் கணக்காய்வு செய்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

கடந்த ஆட்சியில் விநியோகஸ்தர்களுக்கு ச.தொ.ச நிறுவனம் ரூ. 08 பில்லியன் செலுத்த வேண்டியுள்ளது. இந்த நிலைமை மிகவும் குழப்பமாக இருந்ததால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதென்றும் அவர் கூறினார். பாராளுமன்ற உறுப்பினர் நளின் பெர்னாண்டோ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பந்துல 06

சிறுமி துஷ்பிரயோகம்;

## 02 பிள்ளைகளின் தந்தைக்கு 34 வருட கடூழிய சிறை



சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த இரு பிள்ளைகளின் தந்தைக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 34 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

இந்தத் தண்டனையை 15 வருடங்களில் நிறைவு செய்ய வேண்டுமென கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த உத்தரவிட்டுள்ளார். அதற்கும் மேலதிகமாக பிரதிவாதிக்கு 10,000 ரூபா தண்டப் பணத்தையும் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். துஷ்பிரயோகத்திற்கு ஆளான 06

போலித் தகவல் வெளியிட்ட

## சுவிஸ் தூதரக அதிகாரியிடம் குற்றப்பத்திரம் கையளிப்பு



தாம் கடத்திச் செல்லப்பட்டு துன்புறுத்தப்பட்டதாக போலி தகவலை வெளியிட்ட சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அதிகாரி கானியா பெனிஸ்டர் ப்ரான்சிஸ்க்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது பிரதிவாதியான கானியாவிடம் இந்த குற்றப்பத்திரம் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆணைக்குழு விசாரணை

## அரசாங்கம் எவரையும் பாதுகாக்க முயற்சி எதனையும் மேற்கொள்ளாது

பரிந்துரைக்கமைய சம்பந்தப்பட்டோர் மீது வழக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மதரஸாக்களை ஆராய்வதற்கான பொறுப்பு கல்வி அமைச்சுக்குள்ளது

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்க முடியாதென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். அதேவேளை, அரசாங்கம் சிலரை பாதுகாப்பதற்கு 06

## மனிதவுரிமைகள் விவகாரத்தை அரசியல் மயப்படுத்த வேண்டும்

பாராளுமன்றில் சாணக்கியன் MP கோரிக்கை



**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

மனிதவுரிமைகள் விவகாரத்தை அரசியல் மயப்படுத்த வேண்டும். மனிதவுரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நாடாக இலங்கையை மாற்ற வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வெளிநாட்டு 06

## சாணக்கியமாக செயற்பட்டால் எக்காரியத்தையும் சாதிக்கலாம்

சடலங்கள் அடக்கம் குறித்து நஸீர் அஹமட் அறிக்கை



ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களின் மனதில் கறுப்புப் புள்ளியாக பதியப்பட்டிருந்த விடயம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. எனவே இதில் ஒரு அங்கமாக சிறுபான்மையினரான முஸ்லிம்கள் எவ்வாறு ஒரு பெரும்பான்மையினத்துடன் வாழ்வது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறதென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார். கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் மரணித்தவர்கள் எனக் கூறப்படுபவர்களின் சடலங்களின் நல்லடக்கத்துக்கு மட்டக்களப்பு 06

## ரஞ்சனுடன் செல்பி எடுத்த ராஜகருணா M.P

அனுமதித்த அதிகாரி பணி நீக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா செல்பி எடுத்துக்கொள்வதற்கு இடமளித்தமைக்காக சிறைச்சாலை அதிகாரி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறைத்தண்டனை 06

விக்கல் வீராச்சாமி



என்ன, ஆர்ப்பாட்டத்திற்கு புறப்பட்ட தலைவர் கடும் கடுப்பில உடனே திரும்பி வந்துட்டார்....

அது ஒண்டும் இல்ல, போட்டோ–கிராஃபர் உடம்பு சரியில்ல எண்டு லீவு எடுத்துட்டாராம், அதுதான்...!!!

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*

ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
• நிபந்தனைகளுக்கு உட்பட்டது SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது 4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்.
TRC/D/PRO/20/10
Dialog
எதிர்காலம் இன்றே.

# சர்வதேச செய்திகள்

## ஹரி, மேகனின் பேட்டி:
## அவசரமாகக் கூடுகிறது பிரிட்டன் அரச குடும்பம்

பிரிட்டன் இளவரசர் ஹரி மற்றும் அவரது மனைவி மேகன் மேர்கல் வழங்கிய பரபரப்பான தொலைக்காட்சி நேர்காணலை அடுத்து அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் பங்கேற்கும் அவசர கூட்டம் ஒன்று கூட்டப்பட்டுள்ளது.

இந்த பேட்டிக்கு பதில் அளிப்பது தொடர்பில் பக்கிங்ஹாம் அரண்மனை ஆலோசிப்பதாக கூறப்படுகிறது. எனினும் இதுபற்றி கூற அரண்மனை அவசரப்படவில்லை என்று பி.பி.சி அரச குடும்ப செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஒப்ரா வின்பரி தொலைக்காட்சி தொகுப்பாளருக்கு அளித்த பேட்டியில் ஹரி மற்றும் மேகன் இருவரும் அரச குடும்பத்திற்குள் இருக்கும் இனவாதம், மனநிலை மற்றும் ஊடகம் தொடர்பில் வெளிப்படையாக கூறியிருந்தனர்.



நவீன வரலாற்றில் பிரிட்டன் அரச குடும்பத்தில் இணைந்த முதல் கலப்பினத்தவராக மேகன் இருக்கும் நிலையில், ஒரு கட்டத்தில் அவரது குழந்தையின் தோல் நிறம் பற்றி அரச குடும்ப உறுப்பினர் ஒருவர் ஹரியிடம் கேட்டதாக மேகன் குறிப்பிட்டார்.

எனினும் மகாராணி அல்லது எடின்பரோ கோமகன் இதனைக் கேட்கவில்லை என்பதை இளவரசர் ஹரி பின்னர் உறுதி செய்துள்ளார்.

## பிரேசில் முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டில் இருந்து விடுதலை

பிரேசில் முன்னாள் ஜனாதிபதி லுலா டி சில்வா மீதான ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து உச்ச நீதிமன்றம் அவரை விடுவித்துள்ளது. இது அவர் 2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வழி ஏற்படுத்தியுள்ளது.



இடதுசாரி அரசியலில் செல்வாக்கு மிக்கவரான லுலா 18 மாதங்கள் சிறையில் கழித்த நிலையில் 2019 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டார். அரசியல்வாதிகள் மற்றும் பெரும் வர்த்தகர்களிடம் லஞ்சம் பெற்றதாகவே அவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எனினும் அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர் விடுவிக்கப்படுவதாக உச்சநீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில் 2003 தொடக்கம் 2010 வரை பிரேசில் ஜனாதிபதியாக இருந்த 75 வயதான லூலா அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் பதவியில் இருக்கும் வலதுசாரி ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோவை எதிர்த்துப் போட்டியிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து இந்தத் தீர்ப்பு பற்றி கருத்து வெளியிட்ட ஜனாதிபதி பொல்சொனாரோ, உச்ச நீதிமன்ற நீதிபதி பக்கச்சார்பாக நடப்பதாக குறிப்பிட்டார்.

## சீனர்களுக்கு தடுப்பூசி சடவுச்சீட்டு அறிமுகம்



சீனாவில் எல்லைகளைத் தாண்டிப் பயணம் செய்வோருக்கென சிறப்புத் தடுப்பு மருந்துக் கடவுச்சீட்டு ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சுகாதாரச் சான்றிதழ் என்று அழைக்கப்படும் அந்தக் கடவுச்சீட்டு சீனக் குடிமக்கள் அனைவரும் விசாட் தளம் மூலம் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

நியுக்ளிக் பரிசோதனை, நோய் எதிர்ப்புச் சக்திச் சோதனை முடிவுகள், தடுப்பூசி போடப்பட்ட விபரம் உள்ளிட்ட தகவல்கள் சான்றிதழில் இடபெறும்.

சான்றிதழின் உண்மைத்தன்மையைச் சரிபார்க்கவும் அதன் தகவல்களை வாசிக்கவும் சான்றிதழுடன் மறைச்சொல்லுடனான கியு.ஆர். குறியீடு வழங்கப்படும். தனது சுகாதாரச் சான்றிதழ் எதிர்காலத்தில் சர்வதேச பயணிகளுக்கும் அறிமுகம் செய்யப்படும் என்று சீனா தெரிவித்தது.

தனிநபர் விபரங்களைப் பாதுகாப்பதோடு சுமுகமான முறையில் பயணம் செய்ய அது வகைசெய்யும் என்று சீனா நம்புகிறது.

## மியன்மார்: சுற்றிவளைக்கப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுவிப்பு



மியன்மாரின் யங்கோன் நகரில் பாதுகாப்புப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அமைதியான முறையில் கடந்த திங்களன்று பேரணியில் ஈடுபட்டிருந்த சுமார் 200 பேர், குடியிருப்புக் கட்டடங்களில் தடுத்து வைக்கப்பட்டனர். இந்நிலையில் நேற்று அதிகாலை சுமார் 5 மணியளவில் அவர்கள் கட்டடங்களிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டதாக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

எனினும் கடந்த திங்கட்கிழமை இரவு 40 பேர் வரை கைது செய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தடுத்துவைக்கப்பட்டோரை விடுவிக்கும்படி ஐக்கிய நாடுகள் சபை தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் கேட்டுக்கொண்டிருந்தார். வன்முறையைப் பயன்படுத்தாமலும் கைது செய்யாமலும் இராணுவம் அவர்களை விடுவிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

சில வெளிநாட்டுத் தூதரகங்களும் குட்டரஸின் கருத்துகளை எதிரொலித்தன. கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ சதிப் புரட்சியை அடுத்து மியன்மாரில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வருவதோடு இந்த போராட்டங்களில் இதுவரை 54 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்களில் பாதுகாப்பு படையினரின் துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுவேளை, மியன்மார் இராணுவம், மக்கள்மீது போர் தொடுத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான மியன்மாரின் தூதர் டொக்டர் சாசா கூறியுள்ளார்.

அவர் கலைக்கப்பட்ட மியன்மார் பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்டவர். நாட்டின் இராணுவம் கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எவ்வளவு முடியுமோ அவ்வளவு வலியையும் துன்பத்தையும் ஏற்படுத்துவதாக டொக்டர் சாசா குறிப்பிட்டார்.

## இத்தாலியில் கொரோனா பலி 100,000 ஐ தாண்டியது




இத்தாலியில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 100,000ஐக் கடந்துள்ளது.

அமெரிக்கா, பிரேசில், மெக்சிகோ, இந்தியா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளை அடுத்து அந்த எண்ணிக்கையை எட்டிய 7 ஆவது நாடாக இத்தாலி உள்ளது.

இத்தாலியில் 13 மாதங்களுக்கு முன் ஆரம்பமான வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை இப்போது 100,103ஆகப் பதிவாகியுள்ளது.

உயிரிழப்பு எண்ணிக்கை 50,000ஐத் தொட 9 மாதங்கள் ஆகின. ஆனால் அந்த எண்ணிக்கை இரட்டிப்பாக வெறும் மூன்றரை மாதங்களே ஆகின.

இந் நி லை யி ல் , நிலைமை மீண்டும் மோசமடைந்து வருவதாக அந்நாட்டுப் பிரதமர் மரியோ டிராகி கூறியுள்ளார்.

வைரஸ் தொற்று இன்னும் முடியவில்லை. இருப்பினும், தடுப்பூசி போடும் திட்டத்தை விரைவுபடுத்துவதன் மூலம், நோய்த்தொற்றிலிருந்து விடுபடலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அந்நாட்டின் 60 மில்லியன் மக்கள் தொகையில் 1.65 மில்லியன் பேருக்கு தடுப்பூசி இரண்டு முறை போடப்பட்டுள்ளது.

## தடுப்பூசி பெற்றவரை சந்திக்க முகக்கவசம் தேவையில்லை



அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாட்டு, தடுப்பு நிலையம், கொவிட்–19 நோய்க்கு எதிராகத் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்குப் புதிய வழிகாட்டிகளை வெளியிட்டுள்ளது.

தங்களைப் போல் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்ட மற்றவர்களை அவர்கள் முகக்கவசம் அணியாமலும் சமூக இடைவெளி இல்லாமலும் சந்திக்கலாம். தடுப்பூசி போட்டுக் கொள்ளாத மற்ற சிலரைக் கட்டடங்களின் உட்புறத்தில் அவர்கள் சந்திக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தடுப்பூசி போட்டுக்கொண்ட அமெரிக்கர்களைப் பயணம் செய்ய அனுமதிக்காதது குறித்தும் நிலையம் விளக்கமளித்தது.

பயணங்களை அதிகரிப்பதால் கொவிட்–19 சம்பவங்கள் அதிகரிக்கக்கூடும். அமெரிக்காவில் பெரும்பாலோருக்கு இன்னமும் தடுப்பூசி போடப்படவில்லை.

அதனால் பயணங்களை அனுமதிப்பது அவர்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு, தடுப்பு நிலையம் கூறியது.

இறுதி கொரோனா தடுப்பு மருந்தை பெற்று இரண்டு வாரங்களில் வைரஸ் தொற்றுக்கு எதிராக பாதுகாப்பு கிடைக்கும் என்று கருதப்படுகிறது. இவ்வாறு இதுவரை 30 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் முழுமையான கொரோனா தடுப்பு மருந்தை பெற்றுள்ளனர்.

## சிரிய ஜனாதிபதி அஸாத்துக்கு கொரோனா வைரஸ் தொற்று



சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத் மற்றும் அவரது மனைவி அஸ்மா இருவரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி தனிமைப்படுத்தலில் இருப்பதாக அந்நாட்டு அரசு திங்கட்கிழமை அறிவித்துள்ளது.


கொவிட்–19 நோய் அறிகுறிகள் ஏற்பட்டதை அடுத்து அவர்கள் சோதனை மேற்கொண்டபோது வைரஸ் தொற்றி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தமது வீட்டில் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் சுய தனிமையில் இருப்பார்கள் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரியாவில் கொரோனா தொற்றினால் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை அங்கு சுமார் 15,000 தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக கூறப்பட்ட போதும் உண்மையான எண்ணிக்கை இதனை விட அதிகமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை சிரியாவில் கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் இருக்கும் நாட்டின் வடமேற்கு பகுதியில் 21,209 தொற்றுச் சம்பவங்களில் 632 பேர் உயிரிழந்திருப்பதாக எதிர்த்தரப்பின் உத்தியோகபூர்வ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிரியாவில் உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டு 10 ஆண்டுகளை எட்டும் நிலையில் அங்கு தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்ட போதும் அதுபற்றி குறைவான செய்திகளே வெளியாகியுள்ளன.

## கினியா பாரிய வெடிப்பு: உயிரிழப்பு 98 ஆக உயர்வு



எக்குவடோரியல் கினியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பாரிய வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 98 ஆக அதிகரித்துள்ளது.

இந்த சம்பவத்தில் மேலும் 615 பேர் காயமடைந்திருப்பதோடு 299 பேர் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டின் பிரதான நகரான பாடாவில் இருக்கும் இராணுவ முகாம் ஒன்றிலேயே இந்த வெடிப்பு இடம்பெற்றது. அந்த முகாமிற்கு அருகில் இருக்கும் வயல் நிலத்தில் வைக்கப்பட்ட தீ டைனமைட் கிடங்கில் பற்றிக்கொண்டதை அடுத்தே இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இடிபாடுகளில் தன்னார்வலர்கள் தேடுதலில் ஈடுபட்டபோதும் சடலங்களை மீட்டுள்ளனர். இதன்போது மூன்று சிறுவர்கள் உயிருடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிட்டத்தட்ட நகரில் இருக்கும் அனைத்து கட்டடங்களும் இந்த வெடிப்பினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

வீடுகள் இரவு முழுவதும் பற்றியெரிந்து சிறு சிறு வெடிப்புகளும் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காஷ்மீரில் இராணுவத்தின் சமூக வானொலி



ஜவான், அவாம் இடையேயான இடைவெளியைக் குறைக்க இராணுவம் தனது முதல் சமூக வானொலி நிலையத்தை வட காஷ்மீரில் தொடங்குகிறது.

ஊடகவியலாளர்களிடம் பேசிய இராணுவத்தின் முக்கிய தளபதி எல்.டி. ஜெனரல் பி.எஸ்.ராஜு, "இந்த புதிய முயற்சியின் முக்கிய நோக்கம் உள்ளூர் இளைஞர்களுடன் நேரடியாக இணைவதே ஆகும், மேலும் தொலைதூர பகுதிகளில் வாழும் மக்களை சென்றடையக்கூடிய திறனை ரேடியோ கொண்டுள்ளது, மேலும் அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்கள் மற்றும் திட்டங்கள் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது."

வானொலி நிலையம் வடக்கு காஷ்மீரைச் சுற்றி கவரேஜ் இருக்கும். இது 90.4 FM MHz அதிர்வெண்ணில் கிடைக்கும். இந்த சேவை பாரமுல்லா மாவட்டம் மற்றும் வடக்கு காஷ்மீரின் பிற பகுதிகளில் கிடைக்கும். "சமூக வானொலி நிலையம் முதன்மையாக காலையில் பாடல்களுடன் தொடங்கும். அனைத்து வகை பாடல்களையும் இயக்கும். மேலும் நாள் போகப் போக, இந்தி மற்றும் பஞ்சாபி கலவையுடன் பாடல்களின் சுருதியைப் பெறும்" என்று வானொலி ஜாக்கி சஜித் அகமது கூறினார்.

இந்திய இராணுவத்தின் இந்த முயற்சியை குடியிருப்பாளர்கள் மற்றும் உள்ளூர் கவுன்சிலர்கள் பாராட்டினர். இது "ஜவானுக்கும் ஆவத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க உதவும் என்று கூறியது.

## மெக்சிகோவில் மகளிர் தின ஆர்ப்பாட்டத்திலும் கலவரம்



சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி மெக்சிகோ தலைநகரில் இடம்பெற்ற பேரணியின்போது பொலிஸார் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

தலைநகரான மெக்சிகோ சிட்டியின் பிரதான சதுக்கத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் நெருங்கவிடாமல் தடுத்த பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டனர்.

பெண்கள் மீதான கொலைச் சம்பவங்கள் தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்கக் கோரியே கடந்த திங்கட்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பெண்கள் மீதான வன்முறை சம்பவங்களில் கடந்த 2020 இல் குறைந்தது 939 பெண்கள் கொல்லப்பட்டிருப்பதாக மெக்சிகோ அரசின் புள்ளிவிபரம் கூறுகிறது.

இந்நிலையில் ஆயிரக்கணக்கான பெண்கள் மற்றும் சிலர் தமது மகள்மாருடன் இந்தப் பேரணியில் பங்கேற்றிருந்தனர். 'அவர்கள் என்னை கொல்லாவிட்டாலும் உயிர் அச்சத்தில் வாழ்கிறேன்' என்று ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் பதாகையை சுமந்திருந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் சிலர் இரும்புத் தடுப்புகளை தள்ளிவிட்டு முன்னேற முயன்றனர். ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 10 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் மாசி 26

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை


யோகம்: சித்தமரண யோகம்

திதி: துவாதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பயம் |
| ரிஷபம் | நட்பு |
| மிதுனம் | தடங்கல் |
| கடகம் | களிப்பு |
| சிம்மம் | நோய் |
| கன்னி | கவலை |
| துலாம் | தாமதம் |
| விருச்சிகம் | எதிர்ப்பு |
| தனுசு | வரவு |
| மகரம் | வரவு |
| கும்பம் | சுகம் |
| மீனம் | பெருமை |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)



## தவக்கால சிந்தனை

### கற்பிப்பும்- வாழ்வும்

தவக்காலத்தில் ஆண்டவர் இயேசுவோடு பயணம் செய்து கொண்டிருக்கின்றோம். இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு ஆகியவற்றை ஆழமாக தியானிக்கும் காலமாக இந்த காலம் இருக்கின்றது. இயேசுவின் வாழ்வை தங்கள் வழியாக ஏற்றுக் கொள்ளப் போகும் சகோதர சகோதரிகள் இந்த காலத்தில் திருமுழுக்குக்காக தம்மை ஆயத்தப்படுத்தி வருகின்றனர்.

. விசேடமாக தொடக்க கால கிறிஸ்தவ சமூகத்திலே இக்காலத்தில்தான் திருமுழுக்குக்காக புது கிறிஸ்தவர்கள் ஆயத்தம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கான மறைக்கல்வி

கற்பிக்கப்பட்டதும் இக்காலத்திலே தான்.

இன்றைய நாளில் இயேசு தமது வார்த்தையின் ஊடாக "கற்பிப்பதை" பற்றியும் "வாழ்வதை" பற்றியும் பேசுகின்றார்.

இறை வாக்குகளையும் திருச் சட்டங்களையும் நிறைவேற்றவே தாம் வந்திருப்பதாக கூறும் இயேசு அவற்றைப் பின்பற்றுமாறும் கூறுகின்றார். ஆனால், அவற்றை கட்டிக் காக்கின்ற மறைநூல் அறிஞர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் நெறியை விட, வாழ்வு முறையை விட, கிறிஸ்தவர்களாகிய எமது ஒழுக்கம் சிறந்து விளங்க வேண்டும் என்று இயேசு கேட்கிறார். ஆகவே, யூத வழிமுறைகளில் இருந்து கிறிஸ்தவ சமூகம் அதன் வாழ்வு முறையில் வேறுபட்டதாகவே விளங்குகின்றது.

யூத திருச்சட்டம் உரிய முறையில் விளக்கம் காணப்பட்டு கற்பிக்கப் படாததால் கடவுளுக்குரிய வாழ்வு வாழப் படவில்லை. விண்ணரசுக்குள் நுழைவதற்கு கடவுளுக்குரிய வாழ்க்கை முறை பிரதானமானது என்று இயேசு வலியுறுத்துகின்றார்.

இயேசுவின் வாழ்வை சுவைக்க புதிதாக இயேசுவின் வழியை கற்பிக்கும் நாம் அவ்வழியில் வாழ்கின்ற கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும்.

எமது வாழ்வும் வார்த்தையும் சாட்சிய வாழ்வின் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒரு நாணயத்தின் முழுமைக்கு, இரண்டு பக்கமும் தமது இருப்பை வழங்க வேண்டும். அப்போதுதான் அதன் பெறுமதி புலப்படும். அவ்வாறே கிறிஸ்தவ வாழ்வும் தனது இருப்பை தாங்கி நிற்கின்றது. அதன் பெறுமதியானது சாட்சிய வாழ்வாக வாழப்படும்போதுதான் உலகிற்கு தெளிவாகும்.

இத் தவக்காலத்திலே எமது வாழ்வு எப்படி இருக்கின்றது?

நாம் ஜெபத்தில் ஆழமாய் உள்ளோமா?

எமது ஒறுத்தல்கள் எம்மை இயேசுவிடம் இட்டுச் செல்கின்றனவா?

நாம் பகிர்ந்து வாழ்கின்றோமா? சிந்திப்போம்.

"... கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார்." ( மத்தேயு 5,19).

அருட்சகோ.**நீகன் லோகு...**

அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய

# வெற்றிகரமான திட்டங்களை முன்னெடுக்க பிரதமர் ஆலோசனை



அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய வெற்றிகரமான திட்டங்களை முன்னெடுக்குமாறு நிதி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (08) ஆலோசனை வழங்கினார்.

எதிர்காலத்தில் இலங்கையில் அந்நிய செலாவணி ஊடாக செயற்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் தலைவர்களுடன் நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு வலியுறுத்தினார்.

வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்ளும்போது அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவது குறித்து கவனத்திற்கொண்டு வெற்றிகரமான திட்டங்களை மாத்திரம் செயற்படுத்துமாறு ஆலோசனை வழங்கிய கௌரவ பிரதமர், அத்திட்டங்களின் ஊடாக அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

கடல்வள பல்கலைக்கழகத்திற்கான திட்டம் குறித்தும் இதன்போது பிரதமர் விசேட கவனம் செலுத்தினார். அப்பல்கலைக்கழக திட்டத்தை அதனை அண்மித்த பிரதேசங்களின் அபிவிருத்தியை இலக்காக கொண்டு செயற்படுத்துமாறு கௌரவ பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இக் கலந்துரையாடலில், நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் அபேசேகர, பிரதமரின் நிதி அமைச்சின் ஒருங்கிணைப்பாளர்களான சரித் விஜேசிங்க, கெமுனு கருணாரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

க.பொ.த சா/தர பரீட்சை;

## ஆள்மாறாட்டம் செய்த மூன்று பேர் கைது

கல்வி பொது தராதர சாதாரண பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சைக்குத் தோற்றிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

தனது உறவினர் ஒருவருக்காகக் கல்வி பொது தராதர சாதாரண பரீட்சை யில் கணித பரீட்சைக்காகத் தோற்றவிருந்த 21 வயது இளைஞன் ஒருவர் அநுராதபுரம் – ஹிதொகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் திஸ்ஸமகாராம வீரவில பகுதியைச் சேர்ந்தவரென விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அத்துடன் சந்தேக நபர் நேற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்ட தாக

06

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு

# 1,000 கர்ப்பிணிகளுக்கு உலர் உணவுப் பொதிகள்

### யாழ். பாதுகாப்பு படையினர் வழங்கினர்



யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் படையினரால் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதியுதவியுடன், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் வறிய கர்ப்பிணிகள் மற்றும் விதவை பெண்களுக்கு 1,000 உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு (06) யாழ்ப்பாணம் சுன்னாகம் தெற்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் அறிவுறுத்தலின் படி யாழ். பாதுகாப்பு படைதலைமையக தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவினால் ஹேமாஸ் நுகர்வோர் பிரைவேட் லிமிடெட், நெஸ்லே லங்கா பிரைவேட் லிமிடெட், மலிபன் பிஸ்கட் பிரைவேட் லிமிடெட், 'மனுசாத் தெரன சமூக உதவித் திட்டம் மற்றும் கொழும்பு தரனா அறக் கட்டளை. ஆகியவற்றிடம் விடுத்த வேண்டுக்கோளுக்கமைய சிவில்

இராணுவ ஒத்துழைப்பு நடவடிக் கைகளுக்கு அமைய இந் நிவாரண பகிர்ந்தளிப்பு முன்னெடுக்கப்பட் டுள்ளது.

யாழ் பாதுகாப்புப் படை தலைமையக தளபதி

06

இரணைதீவில் அடக்கம்;

# இதுவரை அனுமதியில்லை அமைச்சர் ரமேஸ் பத்திரன



கொவிட் 19 தொற்று சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லையென அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

இரணைதீவில் கொவிட் 19 தொற்று சடலங்களை அடக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் (09) அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் ரமேஸ் பத்திரன, கொவிட் 19 காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்களை மட்டக்களப்பு ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்வதற்கான அனுமதி மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார். எனினும், உரிய ஆய்வின் பின்னரே சுகாதார அமைச்சு இரணைதீவில் கொவிட் 19 தொற்று சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சரவையின் இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

நாளை உலக

## சைவப் பேரவையின் கொடி தினம்

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு உலக பேரவையின் இலங்கைக் கிளை நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்திருந்த கொடி தின வைபவம் நாளை (11) இடம்பெறுகிறது.

உலக சைவப் பேரவையின் இலங்கை கிளை தலைவர் கா. தயாபரன் தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் காலை 8.00 மணி முதல் நடைபெறவிருக்கிறது. இந்நிகழ்வில் முன்னாள் பிரதம நீதியரசர் க. சிறிபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கொடி விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார். இந்து சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன், மாணிக்கப்பிள்ளையார் ஆலய

06

பெருந்தோட்டத் தொழிலாளர்களை

## பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் நோக்கில் கம்பனிகள் செயற்பாடு

### இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



தோட்டத் தொழிலாளர்களை பயங்கரவாதிகளாக அடையாளப் படுத்தும் நோக்கில் கம்பனிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாக்கிழமை நடைபெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபரண சட்டம் தொடர்பான ஒழுங்குவிதியும் வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும்

06

மாகாணங்களுக்கு இடையிலான

## பயணிகள் பஸ் சேவைகளுக்கு மார்ச்வரை சலுகை வழங்க முடிவு

கொவிட் 19 தொற்று நிலைமையில் மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து பஸ் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பஸ் உரிமையாளர்களிடமிருந்து அறிவிடப்படும் புதுப்பித்தல் கட்டணம், தாமதக் கட்டணம், விலைமனுக் கோரல் கட்டணம், நேரசூசி கட்டணம், உள்நுழைவு அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் அதிவேக நெடுஞ்சாலை தற்காலிக அனுமதிப்பத்திர கட்டணம் போன்றவற்றை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை விடுவிப்பதற்காக 2020 நவம்பர் மாதம் 09 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பஸ் சேவைகளை மீள்நிலைக்கு கொண்டு வருவதற்கு மேலும்

06



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு டுபாய்க்கு சென்றுள்ள விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நாடு திரும்ப முடியாமல் டுபாயில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர் சிலரை சந்தித்து உரையாடியுள்ளார். அவர்களது பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்ததுடன் அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையையும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எடுத்துள்ளார்.

நாளை சிவராத்திரி தினத்தன்று

## திருமலையில் சீரடி பாபா ஆலய அடிக்கல் நாட்டும் வைபவம்

கொழும்பு புதுச் செட்டித் தெருவில் அமைந்துள்ள சீரடி சாயி இலங்கை மத்திய நிலயத்தின் வழி நடத்தலில், திருகோணமலை கல்லூரி விதியில் அமைந்துள்ள ஸ்ரீ இரத்தின சிங்கம் பிள்ளையார் தேவஸ்தான வளவில் சீரடி சாயி பாபா ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா நாளை 11ஆம் திகதி வியாழக்கிழமை சிவராத்திரி தினத்தன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

சங்குஸ்தாபன பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் தலைமையில், பிரதமரின் இந்து சமய விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ பாபு இராமச்சந்திர குருக்கள், மற்றும் சீரடிசாய்

06

தினகரன்
THINAKARAN

மாணவர் கரங்களில்
'புலமைக் கதிர்'

தினகரன் இதழுடன் பிரதி வெள்ளி தோறும்
வெளிவருகின்றது 'புலமைக் கதிர்'...



தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்–கும் மாணவர்களுக்கான பயன் தரும் வினாத்தாள்கள் இலவச இணைப்பாக உங்கள் தினகரனுடன்...
கொழும்பு இந்துக் கல்லூரி ஆசிரியர்
எஸ்.ஏ. சந்திரபவன் தயாரித்து வழங்குகிறார்.

# தலை துண்டித்த சடலத்தின் DNA அறிக்கை வெளியானது

**தெப்பனாவ பகுதி 30 வயது பெண் என அடையாளம் தலையை தேடும் பணி தொடர்கிறது**





கொழும்பு – டாம் வீதியில் பயணப் பொதியிலிருந்து மீட்கப்பட்ட தலையற்ற யுவதியின் சடலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட டிஎன்ஏ பரிசோதனைகளின் பிரகாரம் உயிரிழந்த பெண் குருவிட்ட, தெப்பனாவ பகுதியைச் சேர்ந்த யுவதி என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் மாசி மாதம் 26ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்

எவ்வளவு கொடிய பகை உடையவரும் தப்பி வாழ முடியும், ஆனால் தீயவை செய்தால் வரும் தீவினையாகிய பகை நீங்காமல் பின் சென்று வருத்தும்.

## கொவிட்19 தணிந்துள்ள வேளையில் தீவிரமாக தலைதூக்கும் டெங்கு

உலகிற்கு பெரும் சவாலாக விளங்கும் கொவிட் 19 தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் கடந்த சில வாரங்களாக இலங்கையில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டிருகின்றது. இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தவென அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளின் பயனாகவே இவ்வீழ்ச்சி நிலை ஏற்பட்டிருப்பதாக பிரதம தொற்று நோயியல் நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்திருக்கின்றார்.

அத்தோடு தற்போது இத்தொற்று அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு கொவிட் 19 தவிர்ப்பு தடுப்பூசி வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நிலையில் நாட்டின் சில பிரதேசங்களில் டெங்கு நோய் மீண்டும் தலைதூக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் இவ்வருடத்தின் முதலிரு மாதங்களிலும் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளோரின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இலங்கையில் டெங்கு நோய் என்றால் வழமையாக மேல் மாகாணத்திலும் குறிப்பாக கொழும்பு மாவட்டத்திலும்தான் வருடா வருடம் அதிகரித்து காணப்படும். அதற்கு அடுத்த இடத்தில் கண்டி, குருநாகல் போன்ற மாவட்டங்கள் இருக்கும். ஆனால் இம்முறை முதற் தடவையாக மேல் மாகாணத்திற்கு வெளியில் இந்நோய்க்கு உள்ளானோரின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவில் பதிவாகி இருக்கின்றது.

அதாவது கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் முழு நாட்டிலுமே மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய்க்கு உள்ளானோரின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துள்ளது. ஜனவரி மாதத்தில் முழு நாட்டிலும்1495 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 895 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். அதேபோன்று பெப்ரவரி மாதத்தில் முழு நாட்டிலும் 1744 பேர் இந்நோய்க்குஉள்ளாகியுள்ளனர். அவர்களில் 1070 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். அத்தோடு மார்ச் மாதத்தில் நேற்று முன்தினம் வரை முழு நாட்டிலும் 284 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 155 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் தடுப்பு பிரிவின் தரவுகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பெரிதும் அதிகரித்திருப்பது தெளிவாகின்றது. இம்மாவட்டத்தின் மண்முனை வடக்கு மட்டக்களப்பு, காத்தான்குடி, வாழைச்சேனை, ஒட்டமாட்டி, கோறளைப்பற்று, கிரான், பட்டிப்பளை, ஏறாவூர், வாகரை உள்ளிட்ட எல்லா மருத்துவ அதிகாரிகள் அலுவலகப் பிரிவுகளிலும் இந்நோய்க்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதிலும் வாழைச்சேனைப் பிரதேசத்தில் ஆசிரியை ஒருவரும், தற்போது நடைபெறும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர் ஒருவரும் கூட இந்நோயினால் உயிரிழந்துள்ளனர்.

மேல் மாகாணத்திற்கும் கொழும்பு மாவட்டத்திற்கும் வெளியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்நோய் தீவிரமடைந்திருப்பது சுகாதார துறையினர் உள்ளிட்ட பல மட்டத்தினரதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

டெங்கு நோயானது நுளம்புகளால் காவிப் பரப்படும் ஒரு வைரஸ் நோய். இவ்வகை நுளம்புகள் மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் தேங்கும் இடங்களில்தான் பல்கிப்பெருகும். அதனால் இது தனியே ஒரு சுகாதார பிரச்சினையல்ல. மாறாக சுற்றுச்சூழலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையும் கூட.

அதனால் டெங்கு போன்ற நுளம்பு நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. அதாவது மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் வீட்டு சூழலிலும் சுற்றாடலிலும் தேங்க முடியாதபடி சுற்றுச்சூழலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருக்க வேண்டும். சிரமதானப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்துவது மிக அவசியம்.

மேலும் தற்போதைய சூழலில் காய்ச்சல், உடல் வலி போன்ற நோயறிகுறிகள் காணப்படுமாயின் அது தொடர்பில் அசிரத்தை மற்றும் கவனயீனம் கூடாது. இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் தாமதியாது தகுதியான மருத்துவரை அணுகி மருத்துவ ஆலோசனைகளுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தீவிரமடைந்திருக்கும் இந்நோய் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவாது என்பதற்கு உத்தரவாதமில்லை.

ஆகவே கொவிட் 19 தொற்று பரவுதல் வீழச்சியடைந்து வரும் சூழலில் மற்றொரு நோயாக டெங்கு தீவிரமடைய இடமளிக்கக்கூடாது. இதனைக் கட்டுப்படுத்துவதில் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்தி செயற்படுவதே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# சைவ கொடி தினம் நாளை அனுஷ்டிப்பு




## உலக சைவ பேரவை விரிவான ஏற்பாடு

மகாசிவராத்திரி தினம் நாளை (11ஆம் திகதி) அனுஷ்டிக்கப்படுகின்றது. சிவனுக்குரிய இராத்திரியாகப் போற்றப்படும் இந்நாள், சிவசிந்தனையுடன் புனிதமாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய உன்னத விரத தினமாகும்.

சிவனுக்குரிய வாகனமும் கொடியும் இடபம் எனப்படும் நந்தியாகும். சிவசின்னமொன்றாக பெருமை பெறுகின்ற நந்திக் கொடியின் முக்கியத்துவத்தை சிவராத்திரி நாளன்று உலகளாவிய ரீதியில் இந்து மக்களுக்கு உணர்த்தும் வகையில், கடந்த பல வருடங்களாகவே உலக சைவப் பேரவை செயற்பட்டு வருகிறது.


அந்த வகையில், வழமை போல இந்த வருடமும் மகாசிவராத்திரி தினத்தன்று நாடளாவிய ரீதியில் சைவக் கொடி தினத்தை அனுஷ்டிப்பதற்கு உலக சைவப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. உலக சைவப் பேரவையின் இலங்கை கிளைத் தலைவர் கா. தயாபரன் தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் இது தொடர்பான நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

கொடிதினம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் கலாநிதி சின்னத்துரை தனபாலா தகவல் தருகையில், "மேல் மாகாணம், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உட்பட நாடளாவிய ரீதியில் இந்து மக்கள் பெருமளவில் வாழும் பகுதிகளில் சைவக் கொடிதினம் நடத்தப் படுகிறது. சைவப் பேரவைத் தொண்டர்கள் இல்லங்களுக்கு வருகை தந்து கொடியினை வழங்கும் போது, அதனைப் பெற்றுக் கொள்ளும் இந்து மக்கள் அனைவரும் தாராள மனதுடன் நிதி அன்பளிப்புச் செய்வதன் மூலம், புனித சிவராத்திரி தினத்தன்று நற்பணிகளுக்கு உதவிய பெரும்பேற்றைப் பெறுவதாக இருக்கும். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை உலக சைவப் பேரவை எதிர்பார்க்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

### பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நாளை நிகழ்வுகள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், விழிப்புலன் செவிப்புலன் அற்றவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான மனிதாபிமான செயற் திட்டங்களுக்கும், பல வகையிலும் பாதிக்கப்பட்டு வசதி குறைந்த நிலையில் வாழும் இந்து மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கும் பயன்படுத்தப்படுவது வழக்கமாகும்.

தற்போது நாடெங்கும் பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கொடி தின நிகழ்ச்சிகள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படவிருக்கின்றன. சிவராத்திரி நாளன்று இந்து மக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களிலும், ஆலயங்கள், இந்துமத நிறுவனங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளிலும் நந்திக் கொடிகளை ஏற்றி வைத்து சைவ விழிப்புணர்வை வெளிப்படுத்துவதுடன் கொடி தினத்தையும் முக்கியத்துவப்படுத்த வேண்டும் என உலக சைவப் பேரவை சார்பாக இலங்கை வாழ் அனைத்து இந்து மக்களையும் கேட்டுக் கொள்வதாக கலாநிதி சின்னத்துரை தனபாலா தெரிவித்துள்ளார்.



அ.கனகசூரியர்...

# தன்னலமற்ற பணிகளால் மக்கள் உள்ளத்தில் என்றும் வாழும் டொக்டர் வேலாயுதபிள்ளை



வைத்திய கலாநிதி கந்தையா வேலாயுதபிள்ளை உலக வாழ்வை நீத்து ஆண்டுகள் இருபத்தைந்தை எட்டி விட்டாலும், அன்னார் ஆற்றிய மேன்மைமிகு பணிகள் என்றும் மறக்க முடியாத வண்ணம் வரலாற்றில் பதிந்துள்ளன.

யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிறந்த அன்னார் சமயப் பணி, கல்விப் பணி, தமிழ்ப் பணி, சமூகப் பணி, வைத்தியப் பணி எனப் பல் துறைகளிலும் தன்னலமற்ற ஈடுபாட்டுடன் ஆற்றிய சேவைகள் யாவரும் போற்றும் பணிகளாயமைந்தன.

இப்பெரியார் இலங்கையில் வாழ்ந்த இந்துப் பெரியார் வரிசையிலும், தமிழ்ப் பெரியார் வரிசையிலும் வைத்துப் போற்றப்படும் பேற்றைப் பெற்றுள்ளார்.

அமரர் வேலாயுதபிள்ளையின் நோக்கம், செயல், சிந்தனை, அதன் பாற்பட்ட செயற்பாடுகளை நோக்கும் போது 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற திருக்குறள் வரிகளின் அர்த்தத்தை தெளிவாக்குகின்றது.

தொழில் ரீதியில் மேற்கத்தேய வைத்தியத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அவர் வைத்தியத் தொழிலை வருவாயீட்டும் தொழிலாகக் கருதாமல், சமுதாயத்தின் நலனுக்கான பணியாகக் கொண்டு செயற்பட்டார். மிக எளிமையான வாழ்வு வாழ்ந்த அவர், செய்தொழிலைத் தெய்வமாகக் கொண்டு செயற்பட்டதுடன் ஏனையவர்களையும் தான் வகுத்து செயற்பட்ட பாதையில் பயணிக்க வழி காட்டினார், தூண்டுதல் செய்தார்.

## அன்னார் மறைந்து 25 ஆண்டுகள்

தன்னை நாடி வந்தவர்களுக்கு இலவசமாக வைத்திய ஆலோசனை வழங்கியது மட்டுமன்றி, பல வேளைகளில் தனது செலவிலேயே மருந்துகள் பெற்றுக் கொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக வைத்திய பீட விரிவுரையாளராகவும் அமரர் வேலாயுதபிள்ளை செயற்பட்டார். இக்கட்டான சூழ்நிலையில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் விரிவுரையாளர்கள் பற்றாக்குறையால் மூடப்படும் என்ற அச்சநிலை நிலவிய காலத்தில் தனது வயோதிப நிலையையும், உடல்நலக் குறைவையும் நோக்காது, போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு மத்தியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்று விரிவுரையாற்றி, யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை உயிர்ப்பிக்க வைத்தமை தமிழ் மக்களால் என்றும் மறக்க முடியாத பதிவாகும்.

தமிழ் மாணவர்களின் கல்வியில் கருத்தூன்றிச் செயற்பட்ட வேலாயுதப்பிள்ளை அவர்கள், 1983ம் ஆண்டில் இனவெறியர்களின் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிக் கரம் நீட்டி ஆற்றிய பணிகள் என்றும் மறக்க முடியாதவை. அத்துடன் குறித்த வன்முறையால் மூடப்பட்டு பின்னர் இராணுவ முகாமாக மாற்றப்பட்ட இரத்மலானை இந்து கல்லூரியை மீண்டும் திறப்பதில் உறுதியுடன் செயற்பட்டு வெற்றியும் கண்டவர்களில் முக்கியமானவராகத் திகழ்ந்தவர். அத்துடன் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியுள்ளார்.

நாட்டிலே எங்கெங்கு தமிழ் மாணவரின் கல்விக்கு இடையூறு ஏற்பட்டதோ அங்கெல்லாம் தலையிட்டு நிவாரணம் காணத் தலைப்பட்டார். இயற்கை அனர்த்தங்களாலும், இனவெறிக் கொடுமைகளாலும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட போது, அவர்களுக்கு அன்புக் கரம் நீட்டி, ஆதரவு தந்து, துயர் துடைத்த பெருந்தகை என்ற சிறப்பு இவருக்குண்டு.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத் தலைவராகவும், கல்விக் குழுத் தலைவராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றியதுடன், சமயச் சொற்பொழிவுகள் மூலம் சமுதாயத்திற்கு நல்வழி காட்டி நற்பணியாற்றினார்.

அன்னாரின் பூதவுடல் மறைந்தாலும் தன் பணியால் என்றென்றும் தமிழ் மக்கள் மனங்களில் நிறைந்தவராயுள்ள இப்பெரியாரை என்றும் நினைவில் கொள்வோம்.



த.மனோகரன்...
(துணைத் தலைவர், கல்விக்குழுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

# தமிழக தேர்தல் வெற்றியை தீர்மானிக்கப் போகும் 11 சதவீத வாக்காளர்கள்!

சட்டசபை தேர்தலில் தமிழகத்தில் மிதக்கும் வாக்குகள்தான் முடிவை தீர்மானிக்கும் வாக்குகளாக மாறும் என்கிறார்கள் அவதானிகள். அதாவது தி.மு.க, அ.தி.மு.கவிற்கு எப்போதும் வாக்களிக்கும் மக்கள் இந்த முறை மாற்றி வாக்களிக்க வாய்ப்புகள் உள்ளன.

'டைம்ஸ் நவ் சிவோட்டர்' நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் இந்த விபரங்கள் அடங்கி உள்ளன. 5 மாநிலங்களின் சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நிலையில் 'டைம்ஸ் நவ் சிவோட்டர்' சார்பாக நேற்றுமுன்தினம் தேர்தல் கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டது.

5 மாநிலங்களில் எந்த கட்சிகள் ஆட்சியை பிடிக்கும், எந்த முதல்வர் வேட்பாளர்களுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது என்று கணிப்புகளை வெளியிட்டு இருந்தது. அந்த கருத்துக் கணிப்பின்படி சட்டசபை தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணி 158 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும், அ.தி.மு.க அணிக்கு 65 இடங்கள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க கூட்டணி இந்தமுறை வெற்றியை பெறும், தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் முதல்வராவார் என்று கருத்து கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு அ.தி.மு.க தனது வாக்கு வங்கியை இழக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது . அ.தி.மு.க_ பா.ஜ.க அணிக்கு 32.1% வாக்குகள் கிடைக்கும் என்று 'டைம்ஸ்நவ்' கணிப்பு கூறுகிறது.

கடந்த தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி 43.7% வாக்குகள் பெற்றிருந்தது. தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கு 43.2% வாக்குகள் கிடைக்கும் என்று இப்போது கூறப்பட்டுள்ளது .



2016 தேர்தலில் தி.மு.க கூட்டணி 39.4% வாக்குகள் பெற்றது. அதன்படி அ.தி.மு.க கூட்டணி கடந்த வருடம் பெற்ற வாக்குகளில் 11% வாக்குகளை இழக்கிறது. அதேபோல் தி.மு.க கடந்த தேர்தலை விட 6% வாக்குகளை கூடுதலாக பெறுகிறது. அ.தி.மு.க இழக்கும் மீதம் உள்ள 5% வாக்குகள் அ.ம.மு.க, ம.நீ.ம போன்ற கட்சிகளுக்கு செல்கிறது.

ஆட்சி மீது அதிருப்தியில் இருக்கும் இந்த 11% வாக்குகள்தான் தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க, தி.மு.கவின் வெற்றியை நிர்ணயம் செய்யும். இந்த 11% வாக்குகளை மீண்டும் பெற்றால் அ.தி.மு.க.வே கவலையின்றி வென்று விடும். இவர்களை கவரும் வகையில் அ.தி.மு.க செயல் பட வேண்டும். இதில் 56%க்கு மேல் பெற்றாலே அது தி.மு.கவிற்கு சாதகமாக சென்று டும். பொதுவாக 1% வாக்காளர்கள் மிதக்கும் வாக்காளர்களானால் 45 தொகுதிகளின் முடிவில் மாற்றம் வரும்.

மாற்றம் அப்படி இருக்கும் பட்சத்தில் 11%மிதக்கும் வாக்குகள் என்பது 4550 இடங்களின் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த 11% வாக்குகளில் 5% மட்டுமே தி.மு.கவிற்கு செல்கிறது. தி.மு.கவிற்கு ஒரு பக்கம் வெற்றி வாய்ப்பு இருப்பதாக கணிப்பு சொன்னாலும் இன்னொரு பக்கம் அ.தி.மு.கவிற்கு வாய்ப்பு இருப்பதாகவே கருதவேண்டும். 11% வாக்குகளை மொத்தமாக இழக்காமல் இழுத்து பிடித்தால் அ.தி.மு.க தனது சொந்த வாக்குகளை தக்க வைக்க முடியும்.

தேர்தலுக்கு ஒரு மாதம் உள்ளது. தி.மு.க, அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையே இனிதான் வெளியாகும். 11% வாக்குகள் தேர்தலுக்கு முன் எந்த பக்கம் வேண்டுமானாலும் செல்லலாம். முறையாக திட்டங்களை வகுத்தால் மொத்தமாக 11% வாக்குகளையும் தி.மு.க அல்லது அ.தி.மு.க அள்ள முடியும்.

மிதக்கும் வாக்குகள் ஒரு பக்கத்தில் இருந்து இன்னொரு பக்கம் செல்வதே பொதுவாக தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கும். தமிழகத்திலும் இந்த தேர்தலில் அதேபோல் வாக்குகள் மாறிச் செல்ல வாய்ப்புள்ளது. இதை தி.மு.க, அ.தி.மு.க இரண்டும் எப்படி தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள போகிறது என்பதுதான் தேர்தல் முடிவை தீர்மானிக்கும் என்று கருத்துக் கணிப்பு சொல்கின்றது.

## பளை, கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள்:

# காணி பிரச்சினைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தீர்வு

**கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச செயலக மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தீர்க்கமான பல முடிவுகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டார்.**



பச்சிலைப்பள்ளி(பளை) பிரதேச செயலகத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை கடந்த வாரம் நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதனைத் தொடர்ந்து 5ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தையும் நடத்தியிருந்தார்.

பளை பிரதேச செயலகத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட காணி தொடர்பான பல்வேறு சர்ச்சைகளைச் செவிமடுத்த அமைச்சரும், ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, உடனடியாகவே அவற்றுக்கான தீர்வுகளை அந்த இடத்திலேயே பெற்றுக் கொடுத்தார்.

பச்சிலைப்பள்ளி கோவில்வயல் பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயத்தைக் காரணம் காட்டி கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பான முறைப்பாடு பொது மக்களால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போது, உடனடியாகவே வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பேசிய அமைச்சர் டக்ளஸ், காணிகளைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

காணி அமைச்சருடனும், வனவள பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் தொடர்பான அமைச்சர்களுடனும் இதுதொடர்பில் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக இதன் போது தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், விரைவில் துறைசார் அமைச்சர்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வந்து இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள் எனவும், அதுவரையில் காணிகளைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்தி வைக்குமாறும் பணித்தார்.

இது தொடர்பாக பொதுமக்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதை தற்காலிகமாக ஒத்திவைக்குமாறும், துறைசார் அமைச்சர்களின் வருகையின் பின்னர் இந்தப் பிரச்சினைகளுக்கு இறுதி முடிவை எடுக்கலாம் என்றும் இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



இதே போல், காணி சீர்திருத்த ஆணைக்குழுவினரால் கரந்தாய் பகுதியில் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு வழங்கப்பட்ட காணி வேறொருவருக்கு புதிதாக வழங்கப்பட்டிருப்பது தொடர்பான முறைப்பாட்டை ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ், உடனடியாக அந்தக் காணியை மீண்டும் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு வழங்குமாறு பணித்தார். இது தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானம் உடனடியாகவே எழுத்து மூலம் உரிய தரப்புக்களுக்கு வழங்கப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதேபோல், தென்னை அபிவிருத்திச் சபையுடன் காணப்படும் காணிச் சர்ச்சைகளுக்கும் உரிய அமைச்சருடன் பேசி விரைவில் தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், இந்திராபுரம் பகுதி மக்களின் வீதிப் பிரச்சினை மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினருடனான காணிச் சர்ச்சைக்கும் விரைவில் தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

இதேபோல், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை, ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் சகிதம் இணைந்து தலைமையேற்று நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தை அனுராதபுரத்துக்கு மாற்றும் செயற்பாட்டை காணி அமைச்சர் சந்திரசேனவுடன் தொலைபேசியில் உரையாடி தடுத்து நிறுத்தினார்.


அதேபோல், இரணைதீவு பகுதியில் முஸ்லிம்களின் ஜனஸாக்களை நல்லடக்கம் செய்யும் முடிவையும் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் உரையாடி மாற்றியமைக்க முடியும் என்று உறுதியாக நம்பிக்கை வெளியிட்டார்.

**கே. றுஷாங்கன்...**
**(கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர்)**

# தேர்தல் காலத்தில் மாத்திரம் அரசியல்வாதிகள் வருவார்கள்!

**மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பெருநிலப் பரப்பில் உள்ள விவசாயக் கிராமங்களில் ஒன்றுதான் வேத்துச்சேனை. மண்டூர் வெல்லாவெளி பிரதான வீதியின் மேற்கே இரண்டு கிலோ மீற்றர் தூரமான கரடுமுரடான ஒற்றையடி வீதியால் பயணித்தால் இந்த சிறிய கிராமத்தை அடையலாம்.**





போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இக்கிராமத்தைச் சூழ ஒருபுறம் வயல் காணிகளும் மூங்கில்ஆறும், மறுபுறம் மட்டக்களப்பு வாவியும் அமைந்துள்ளன.

மாரி காலம் வந்தாலே இந்த மக்களின் நிலைமை அவலம்தான். வருடாவருடம் வேத்துச்சேனை கிராமமே துன்பத்துக்கு உள்ளாகி விடும். இந்தக் கிராமத்தை அண்மித்துள்ள அணைக்கட்டுகள் பல தசாப்தங்களாக புனரமைக்கப்படாததால் நவகிரி ஆறு, மூங்கிலாறு, இக்கினியாகலை ஆறு ஆகியவற்றில் இருந்து மாரி காலத்தில் வெள்ளம் பெருக்கெடுக்கும். ஆற்று வெள்ளம் வேத்துச்சேனை கிராமத்தை மூழ்கடித்து மட்டக்களப்பு வாவியை சென்றடைகின்றது.

வெள்ள காலத்தில் இம் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரம் சொல்லிலடங்காது. எந்த தொழிலும் செய்ய முடியாது. வீட்டுத் தோட்டங்களும் சேனைப் பயிர்களும் வெள்ளத்தில் அழிந்து விடும்.

விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் கூலித் தொழிலையும் பிரதானமாக நம்பி வாழ்ந்து வரும் இந்த மக்களின் நிலைமை பரிதாபமானது.

மழை காலத்தில் வெள்ளத்தினால் தங்களின் ஆடு மாடுகள் இறப்பதாகவும் அங்குள்ள ஒரு பெண் கண்ணீருடன் தன் கவலையை வெளியிட்டார்.

வேத்துச்சேனையில் 103 குடும்பங்களும், இதனோடு ஒட்டியுள்ள நாதனை எனும் கிராமத்தில் 37 குடும்பங்களுமாக 140 குடும்பங்கள் இந்த அவலத்துடன் வாழ்ந்து வருகின்றன. இங்கு பனிச்சையடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் மற்றும் இந்த கிராம மக்களின் குலதெய்வமாக விளங்கும் நரசிங்க வைரவர் ஆலயமும் உள்ளன.

இங்கு மழைக் கால அவலம் ஒரு புறம் இருக்க, யானைகளின் தொல்லையும் காணப்படுகின்றது. அக் கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லை.



“காலத்திற்கு காலம் தேர்தல் வரும். தங்கள் கிராமத்தில் உள்ள வாக்காளர்களை விட அதிகளவு வேட்பாளர்கள் வருவார்கள். ஆனால் எதுவும் நடந்தபாடில்லை” என்ற ஆதங்கத்தை கிராமத்தலைவர் கே.சுதாகரன் கொட்டித் தீர்த்தார்.

“தேர்தல் காலத்தில் மாத்திரமே அரசியல்வாதிகள் இங்கு வருவார்கள். தேர்தல் முடிந்த பிறகு அவர்கள் வருவதில்லை. இக்கிராம மக்களுக்கு

## வேதனையுடன் வாழும் வேத்துச்சேனை கிராம மக்களின் துயர் தீர்ப்பது யார்?



வழங்கிய வாக்குறுதிகளை அவர்களே மறந்து விடுவார்கள். எமது மக்களுக்கு அரசியல்வாதிகளின் நடத்தைகள் நன்கு தெரிந்த விடயம்” என்கிறார் அவர்.

சீரான வீதிகள் இல்லை. போக்குவரத்து வசதி இல்லை. பொது விடயங்களுக்காக ஒரு அரச கட்டடம் இல்லை. பாடசாலையும் இல்லை.

இங்கிருந்து சுமார் நூறு மாணவர்கள் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்திற்கு தினமும் மூன்று கிலோ மீற்றர் தூரம் சென்று வருகின்றார்கள்.

சீரான வீதி இல்லாததால் எந்தவித பயணிகள் போக்குவரத்து சேவையும் இங்கு இல்லை. மழை காலம் என்றால் அனைத்து போக்குவரத்தும் முற்றாக தடைப்பட்டு கிராமமே தனித்து விடப்படும். மாணவர்கள் பாடசாலைக்கும் செல்ல முடியாத நிலைமை. இத்தனை அவலங்களை தாங்கிக் கொண்டு வாழும் வேத்துச்சேனை மக்களின் துயர் எப்போது துடைக்கப்படும்? இதற்கு தமிழ் அரசியல்வாதிகளிடம் என்ன திட்டம் உள்ளது?

இவ்வாறு கேட்கின்றனர் அங்குள்ள மக்கள்.

தினமும் பல மைல் தூரம் நடந்து பாடசாலைக்குச் சென்று வரும் இந்த மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதில்லை. இந்த மாணவர்களுக்கென இக்கிராமத்தில் மாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கு கல்வியை ஊக்குவிக்கும் அமைப்புகள் முன்வருமாக இருந்தால் அது இக்கிராம மாணவர்களுக்கு பெரிதும் பயன் மிக்கதாக அமையும்.



**வி.ரி.சகாதேவராஜா...**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

## பசுமை நகர் செயல் திட்டம்:

# கிழக்கில் நடத்தப்பட்ட போட்டியில் காத்தான்குடி நகர சபை தெரிவு

**கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களமும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமையை கட்டியெழுப்பும் செயற் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. உள்ளூராட்சி முறையை வலுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி மற்றும் அபிவிருத்தி பங்காளர்களைக் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.**

அதன் ஒரு அங்கமாக கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமையை வலுப்படுத்துகின்ற வேலைத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் நடத்தப்பட்ட தெரிவுப் போட்டியில், காத்தான்குடி நகர சபையானது பசுமை நகர் செயற் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெருந் திட்டத்தினை தயாரிப்பதற்கான ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல் காத்தான்குடியில் அண்மையில் நடைபெற்றது.


காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன், மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரகாஷ், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதயசிறீதர் மற்றும் நகரசபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட உயரதிகாரிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், துறைசார் நிபுணர்கள், நகரசபை செயலாளர், கணக்காளர், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ்வேலைத் திட்டங்கள் தொடர்பாக விரிவாக இந்நிகழ்வின் போது விளக்கமளிக்கப்பட்டதோடு, எதிர்கால வேலைத் திட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பசுமை நகரக் கோட்பாடு என்பது பிரதானமாக 4 விடயங்களை உள்ளடக்குகின்றது. செயற்திறன் மிக்க எரிசக்தி சார்ந்த பாவனை, சேவை வழங்கள் மற்றும் செயற்பாடுகள் சார்ந்த விடயங்களினாலான பசுமை பொருளாதாரம், பௌதிக அம்சம் தொடர்பான திட்டமிடல் என்பன மேற்படி விடயப்பரப்புகளாகும். இத்திட்டமானது ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகிய நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் முதலாம் கட்டம் 4 வருடங்களாகும்.

மேற்படி வேலைத் திட்டம் இலங்கையின் 4 மாகாணங்களில் போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 4 உள்ளூராட்சி சபைகளுக்கே கிடைக்கப் பெற்றுள்ளது. அவற்றில் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் காத்தான்குடி நகரசபை இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான வேலைத் திட்டங்கள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

## ஆள்மாறாட்டம் செய்த... (03ஆம் பக்கத் தொடர்)

அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் பரீட்சார்த்திகளுக்கு பதிலாக ஆள்மாறாட்டம் செய்து பரீட்சைக்குத் தோற்றிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளதாக அஜித் ரோகண மேலும் தெரிவித்துள்ளார்.

## 1,000 கர்ப்பிணிகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தலைமையிலான விநியோக விழா, மத தலைவர்களின் ஆசியுடன் ஆரம்பமானது.

ஒவ்வொரு நிவாரணப் பொதியிலும் அரிசி, பருப்பு, சர்க்கரை, பால் மா, தேயிலை , கோதுமை மா, டின் மீன், மசாலா, தானியங்கள் மற்றும் அதிக சத்துணவுகள் உள்ளடக்கியிருந்ததுடன் அதே சந்தர்ப்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு கொசு வலைகள், பால் போத்தல்கள், சுகாதார பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட குழந்தைகளின் தேவைகளும் வழங்கப்பட்டன. இங்கு உரையாற்றிய யாழ். தளபதி, நன்கொடையளர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு, பொது மக்களை பாதுகாக்க படையினர் எந்நேரமும் தயாராக இருப்பதாகக் கூறினார். நிகழ்ச்சியின் இறுதியில், யாழ்ப்பாண மகளிர் முன்னணித் தலைவி திருமதி டி தயானி, இந்த தொண்டு நிகழ்ச்சிக்கு படையினரின் பங்களிப்பைப் பாராட்டியதோடு தளபதிக்கு இராணுவத் தளபதியின் ஆசீர்வாதங்களுடன் இந்த வகையான நிவாரணப் பணிகளை மேற்கொண்டதற்கு நன்றி தெரிவித்தார்.

## பயங்கரவாதிகளாக... (03ஆம் பக்கத் தொடர்)

ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஓல்டன் தோட்டத்தில் 32 நாட்களுக்கு மேலாக தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக கடந்த 32 நாட்களாக தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள 08 பெண் தொழிலாளர்கள் போகம்பர சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தை பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளேன்.

தோட்டத்திலுள்ள துரைமார் தொழிலாளர்களை தாக்கியதிலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நிர்வாகத்தினருடன் ஏற்பட்ட முறுகல்கள் காரணமாக தொழிலாளர்கள் தொடர்ச்சியாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். உடனடியாக இந்த பிரச்சினையை தீர்த்துவைக்க முற்பட்ட போதிலும் கம்பனிகள் பேச்சுவார்த்தைக்கு வராது தான் தோற்றித்தனமாக நடந்துக்கொள்கின்றன. இந்த விவகாரம் தொடர்பில் ஹட்டன் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்திருந்த ஜனாதிபதி சட்டத்தரணியொருவர் நுவரெலியாவில் பயங்கரவாதம் தலைத்தூக்கியுள்ளதாக கூறியுள்ளார். விடுதலைப்புலிகள் இங்குமுள்ளனர் என்ற கோணத்தில் அவரது வாதம் அமைந்திருந்தது.

தொழிலாளர்களை பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் நாடகத்தை தோட்டக் கம்பனிகள் முன்னெடுப்பதை அவதானிக்க முடிகிறது.

அதன் அடிப்படையில்தான் கடந்தவாரம் தோட்ட துரைமார் ஹட்டனிலும் பண்டாரவளையிலும் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். முதல்முறையாக தொழிலாளர்களுக்கு எதிராக தோட்ட நிர்வாகத்தினர் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தோட்ட மக்களை அச்சுறுத்தி அடக்கும் வகையில் செயற்படுகின்றனர்.

வெள்ளைக்காரர்களை போன்று தோட்டங்களை கட்டுப்படுத்தி நிர்வகிக்க அரசாங்கமும் தோட்ட நிர்வாகமும் இணைந்து செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாக நிறுத்த உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றார்.

## பயணிகள் பஸ் சேவை... (03ஆம் பக்கத் தொடர்)

சில காலம் எடுக்கும் என்பதால், இம் மானியங்களுடன் கீழ்க்காணும் மானியங்களையும் 2021 மார்ச் மாதம் 31 ஆம் வரை நீடிப்பதற்காகவும் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வருடாந்த விலைமனுக் கோரல் கட்டணத்தின் 10% வீதம் அல்லது 15,000/= ரூபாய் போன்ற பெறுமதிகளில் அதிக பெறுமதி கொண்ட தொகையை அறவிடவும் , அதிவேக நெடுஞ்சாலை தற்காலிக அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் 10% வீதத்தை அறவிடவும் ,நேரசூசி மற்றும் உள்நுழைவு அனுமதிப்பத்திர கட்டணத்தை விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தலை துண்டித்த சடலத்தின்... (03ஆம் பக்கத் தொடர்)

கொழும்பு – டாம் வீதியில் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை பயணப் பொதியிலிருந்து தலையற்ற நிலையில் யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. இந்த யுவதி குருவிட்ட – தெப்பனாவ பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் , சடலத்தின் தலை கண்டுப்பிடிக்கப்படாமையினால் அதனை உறுபடுத்திக் கொள்வதில் சிக்கல் நிலைமை நிலவியது.

இந்நிலையில், சடலம் தொடர்பான மரண பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, சடலம் தொடர்பில் டிஎன்ஏ பரிசோதனைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய யுவதியின் தாய் மற்றும் சகோதரரின் குருதி மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு , டிஎன்.ஏ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அரச மேலதிக இரசாயன பரிசோதகர் டீ.எச். எல்.டப்ளியூ. ஜயமான்னவினால் இந்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது யுவதியின் இரத்த மாதிரிகள் மற்றும் குடும்பத்தினரின் இரத்த மாதிரிகளும் பொருந்தியுள்ளதுடன்,உயிரிழந்தது குருவிட்டதெப்பானம பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய யுவதியே என உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய யுவதியின் சடலம் தொடர்பான மரண மற்றும் பிரதேச பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனினும் யுவதியின் தலை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை

இதன்போது இந்த விவகாரம் தொடர்பில் அடையாளம் காணப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் , பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்று தூக்கிட்டு தற்கொலை செய்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாளை உலக சைவ... (03ஆம் பக்கத் தொடர்)

அறங்காவல் சபை தலைவர் அ. மாணிக்கவாசகர், வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலர்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ. பி. ஜெயராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். மாணிக்கப்பிள்ளையார் ஆலய அறங்காவல் சபை உறுப்பினர்களும், உலக சைவப்பேரவை இலங்கைக் கிளை உறுப்பினர்களும் நிகழ்வில் பங்குகொள்ளவிருக்கிறார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவது வழக்கமாகும்.

தற்போது நாடளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கொடிதின நிகழ்ச்சிகள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படவிருக்கிறது.

## நாளை சிவராத்திரி... (03ஆம் பக்கத் தொடர்)

இலங்கை மத்திய நிலைய பிரதம அறங்காவலர் எஸ். என். உதயநாயகன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதமரின் இந்து சமய விவகார ஆலோசகர் கலாநிதி ஜே. எம். சுவாமிநாதன், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன், திருமலை உதவி மாவட்ட செயலாளர் ந. பிரதீபன் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்வர். மேற்படி ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ இ. கனகசபாபதி சர்மா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

## தடுப்பூசிகள் குறித்த நேரத்தில்...

அசேல குணவர்தன தெரிவித்தார். அதற்கான உறுதிமொழியை இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியாவின் சீரம் நிறுவனத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ அனர்த்தம் காரணமாக இலங்கைக்கு கிடைக்கவுள்ள தடுப்பூசிகள் தாமதமாகலாமென தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் அதன்போது, இந்திய உயர்ஸ்தானிகர் எதுவித தாமதமுமின்றி உரிய காலத்தில் மேற்படி தடுப்பூசி இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்கப்படுமென்ற உறுதிமொழியை வழங்கியதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். அதேவேளை, இரண்டாவது கட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தமிழ், சிங்கள புதுவருடத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்படும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. அதற்கிணங்க முதற்கட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்ட முறைமையின் கீழ் கடந்த முறை முன்னுரிமை வழங்கப்பட்டவர்களுக்கே இம்முறையும் இரண்டாவது கட்ட தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

அதன்படி கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், முப்படையினருக்கும் மற்றும் சுகாதாரத் துறையினருக்கும் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள்வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## பாராளுமன்ற பெண் உறுப்பினர்...

மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோரின் தலைமையில் (09) பாராளுமன்றத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவி ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளேயின் அழைப்பின் பேரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோரின் தலைமையில் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் பாராளுமன்ற சபை முதல்வருமான தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரிஎல்ல, பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்றனர்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் பிரதித்தலைவர்களான திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான கீதா குமாரசிங்க, மஞ்சுளா திசாநாயக்க, டயனா கமகே, கோகிலா குணவர்த்தன, முதிதா பிரிஸான்தி, ராஜிகா விக்கிரமசிங்ஹ மற்றும் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும் பணியாட்கள் தொகுதியின் பிரதானியுமான குஷானி ரோஹனதீர ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவின்...

சமர்ப்பிக்கப்பட்டன. சபை முதல்வரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன இந்த அறிக்கைகள் இரண்டையும் நேற்று செவ்வாய்கிழமை சபையில் சமர்ப்பித்தார். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 08ஆம் திகதிக்கும் 2019 நவம்பர் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் திட்டமிட்டு அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான விசாரணைகள் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன், 2015ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்கும் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஊழல், மோசடிகள் தொடர்பில் ஊழல், மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கேஸ் விலைகளை அதிகரிக்க எந்த...

உதய கம்மம்பில நேற்று தெரிவித்தார். சமையல் எரிவாயுவின் (கேஸ்) விலைகளை உயர்த்துமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் விலை உயர்த்த முடிவு செய்துள்ளதா? என வினவப்பட்ட போதே அமைச்சர் உதய கம்மம்பில இவ்வாறு பதிலளித்தார்.

## சுவிஸ் தூதரக அதிகாரியிடம்...

கையளிக்கப்பட்டுள்ளது. சட்ட மாஅதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரம் பிரதிவாதியிடம் கையளிக்கப்பட்டதாக நீதிமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 2015 - 2019 நல்லாட்சியில்...

குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

நஷ்டத்தை ஏற்படுத்தும் நிறுவனமாக இருந்த சதொச நிறுவனம், கடந்த நாட்களில் அதன் விற்பனையை 102 சதவீதம் அதிகரிக்க முடிந்ததென்றும் அவர் கூறினார். 415 விற்பனை நிலையங்களைக் கொண்ட ச.தொ.ச வலையமைப்பில் 279 விற்பனை நிலையங்கள் நஷ்டத்தை ஏற்படுத்தும் நிலையில் இருப்பதாகவும், அந்த நிலைமையை மாற்ற சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார். கடந்த ஆட்சியில் ச.தொ.ச கிளைகளை ஆரம்பிக்கும் நடவடிக்கை எந்த வித வெளிப்படைத்தன்மையுமற்ற முறையில் இடம்பெற்றுள்ளது. வர்த்தகத்துக்கு ஏற்ற இடங்களில் கடைகள் அமைக்கப்படவில்லையென்றும் அவர் கூறினார். சம்பந்தப்பட்ட கிளைகளை வேறு இடங்களுக்கு மாற்ற திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 02 பிள்ளைகளின் தந்தைக்கு...

சிறுமிக்கு 02 இலட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டார். அந்த நஷ்டஈட்டு தொகையை செலுத்த தவறினால் பிரதிவாதிக்கு 05 வருட சாதாரண சிறைத் தண்டனையை வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

விளையாடுவதற்காக வந்த அயல் வீட்டு சிறுமியை தனது பிள்ளையை வெளியில் அனுப்பிவிட்டு இந்த நபர் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

## படையினரை பாதுகாக்க அரசு...

சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். படைவீரர் ஒருவரின் திருமண நிகழ்வில் கலந்துகொண்டவேளை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். எங்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ள படைவீரர்கள் என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடையலாமென அவர் தெரிவித்துள்ளார்.

## ரஞ்சனுடன் செல்பி...

அனுபவித்துவரும் நிலையில் அவரை பார்க்கச்சென்ற ஹர்சன ராஜகருணா எம்.பி. அவருடன் இணைந்து செல்பி எடுத்துக்கொண்டுள்ளார்.

அதற்கு இடமளித்த அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் அதிகாரியே பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குச் சென்ற ராஜகருணா எம்.பி. பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்த பின்னர் செல்பி எடுத்துக்கொண்டுள்ளார். அதுமட்டுமன்றி தாம் எடுத்த படங்களை முகநூலூடாக பிரசாரப்படுத்தியுமுள்ளார்.

ஹர்சன ராஜகருணா எம்.பி. தமது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறி செயற்பட்டுள்ள நிலையில் அவர் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சந்தேக நபரொருவருடன் செல்பி எடுத்துக்கொண்டமை தவறானதென்றும் அதே வேளை அதற்கு சந்தர்ப்பமளித்த அதிகாரி தொடர்பில் உடனடியாக ஆராயுமாறும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உயரதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதங்கிணங்கவே மேற்படி அதிகாரியை பணிநீக்கம் செய்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ)

## தடுப்பூசி வழங்கலில் எந்த...

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பதிரண கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கொரோனா தடுப்பூசி வழங்குகையில் கொழும்பு மாவடத்தில் அரசியல் தலையீடு காணப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றஞ்சாட்டு தொடர்பாக வினவப்பட்டது.இதற்கு பதிலளித்த அமைச்சர்,

கொரோனா தடுப்பூசி வழங்குகையில் எந்த வித அரசியல் தலையீடும் இடம்பெறாதவாறு செயற்படுமாறு ஜனாதிபதியும் சுகாதார அமைச்சரும் சுகாதார தரப்பினருக்கு பணிப்புரை வழங்கியுள்ளனர். கொரோனா தொற்று அதிகம் பரவியுள்ள கொழும்பு, கம்பஹ மாவட்டங்களில் தடுப்பூசி வழங்குவது பிரதானமாக மேற்கொள்ளப் படுகிறது.எவருக்கும் இதில் அரசியல் தலையீடு செய்ய முடியாது.யாராவது தலையீடு செய்ய முற்பட்டால் அதற்கு தலைசாய்க்க வேண்டாம் என்று கோருகிறோம். சுயாதீனமாக செயற்படுமாறும் நீங்கள் பாரிய பங்களிப்பு செய்துள்ளீர்கள் என்றும் சுகாதார தரப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.தலையீடு தொடர்பில் முறைப்பாடு இருந்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது நாட்டுக்கு தடுப்பூசி கிடைத்து வருகிறது. 110 நாடுகளுக்கு இது வரை ஒரு தடுப்பூசி கூட கிடைக்கவில்லை.எமது நாட்டுக்கு 1.16 மில்லியன் தடுப்பூசி கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் மேலும் கொள்வனவு செய்ய இருக்கிறோம்.இதில் சிறு தாமதம் உள்ளது. தீவிபத்தினால் இந்தியாவில் இருந்து கிடைக்கும் தடுப்பூசி தாமதமானது.

## அரசாங்கம் எவரையும் பாதுகாக்க...

முயற்சிப்பதாக விமர்சிப்பவர்களுக்கு பதிலளித்துள்ள பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், அவ்வாறு எவரையும் பாதுகாக்கவோஅல்லதுஅசௌகரியங்களுக்குஉட்படுத்தவோ வேண்டிய அவசியம் கிடையாதென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு வழங்கியுள்ள அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதில்லையென்றும் அந்தவகையில் பொதுபலசேனா அமைப்பை தடை செய்வது பொருத்தமற்றதென்றும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கை தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பவர்கள் அதனை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பல்வேறு கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, கல்வி மற்றும் வெளிநாட்டலுவல்கள் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அதற்கிணங்க அது தொடர்பில் விமர்சிப்பவர்கள் முதலில் அதனை முழுமையாக ஆராய்ந்து பார்த்து அதன் பின்னர் விமர்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சிலரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சில தரப்பினர் விமர்சிக்கின்றனர். அவ்வாறு நாம் எவரையும் பாதுகாக்கவோ அல்லது அசௌகரியத்துக்கு உட்படுத்தவோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திலிருந்தபோதே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அதனை எமது அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது. எவ்வாறெனினும் இன்று 10ஆம் திகதி முதல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் மூன்று நாள் விவாதம் நடத்தப்படும்.

அந்த வகையில் மேற்படி அறிக்கையின் பரிந்துரைக்கிணங்க பொதுபலசேனா அமைப்பு தடை செய்யப்பட மாட்டாது. எனினும் உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஏனையவற்றை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது. பரிந்துரையில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைவாத விடயங்கள் நீக்கப்பட வேண்டியவை.

முஸ்லிம்களின் மதரஸா பாடசாலைகள் தொடர்பில் கருத்து தெரிவித்தஅமைச்சர், அதற்கு முறையான ஒரு நிர்வாகம் இருப்பது அவசியம். அதற்கிணங்க மேற்படி அறிக்கையின் பரிந்துரையின்படி அது தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள கல்வியமைச்சு எதிர்பார்த்துள்ளது.

மேற்படி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பென்றும் அதேவேளை மத்ரஸா பாடசாலைகளில் என்ன கற்பிக்கப்படுகிறது? அதன் தரம் மற்றும் சமூகத்திற்கு அது பொருத்தமானதா? போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கல்வியமைச்சுக்கு பொறுப்புள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை. மேற்படி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் எந்தவித மாற்றங்களையும் மேற்கொள்ளவில்லையென்றும் குற்றவாளிகளை காப்பாற்ற வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாதென்றும் நேற்று முன்தினம் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

ஆரம்பத்தில் மேற்படி விசாரணைகள் மீது நம்பிக்கை வைத்து செயற்பட்ட பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, தற்போது அது தொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லையென்றும் குற்றவாளிகள் விரைவில் தண்டிக்கப்படுவார்களென்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## சாணக்கியமாக செயற்பட்டால்...

பிரதேசம் தேர்ந்தெடுக்கப்பட்டது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் சாணக்கியமான அணுகுமுறைகளை மேற்கொண்டு எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

விடாப்பிடியான அல்லது தீவிரவாத போக்குகளை நாம் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்கின்ற ஒரு புதுவிதமான அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதைப் பற்றி சிறுபான்மையினர் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

சிறுபான்மையினக்கெதிரான கெடுபிடிகளை, நெருக்கடிகளை புறக்கணிப்புக்களை எப்படி வெல்வது அல்லது தோற்கடிப்பது என்பதுபற்றி அவசியம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு காய்நகர்த்தல்களைச் செய்து நாங்கள் இவற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

எனது அரசியல் வாழ்க்கையில் கடந்த நான்கு மாதங்கள் மிகவும் கனதி மிக்கதாக இருந்தது.

அரசியல் யாப்பின் இருபதுக்கு வாக்களித்தமை மற்றும் கோவிட்19 வைரஸ் தொற்று மரணங்களில் முஸ்லிம்களின் சடலங்கள் எரிப்பு விவகாரம் என்பன பேசுபொருளாகி விட்டது.

அதனை வைத்தே அரசியல் அறிவில்லாத உலுத்தர்கள் அரசியல் செய்யத் தொடங்கி விட்டனர். நாங்கள் உறக்கமின்றி ஓடித் திரிந்து அடிமட்டத்திலிருந்து அதிகாரத்தின் அதியுயர் மட்டம் வரை தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுத்து வந்தோம்.

வெள்ளிக்கிழை சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தைக் கூட கடந்த டிசம்பெர் மாதம் நாமே அரசாங்கத்துக்கு தெரிவு செய்து கொடுத்திருந்தோம்.

இவையெல்லாம் திரை மறைவில் அழுத்தமாக, ஆதாரமாக, நுணுக்கமாக காய்நகர்த்தி அரசின் அனுசரணையோடு மேற்கொண்ட நடவடிக்கைகள். இவற்றுக்கான எழுத்து மூலமான ஆதாரங்கள் எம்மிடமுள்ளன.

எனவே இதில் வீணர்களின் கொக்கரிப்புக்களை நாங்கள் பொருட்படுத்த வேண்டியதில்லை.

## மனிதவுரிமைகள் விவகாரத்தை...

செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான இரண்டு கட்டளைகள் தொடர்பான விவாத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையை இலங்கைக்கு எதிரான ஓர் அமைப்பாக காட்ட முற்படுகின்றனர். இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டுமென்பதுதான் இதன் கருப்பொருள். மனிதவுரிமைகள் என்பது சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைவருக்கும் உரித்தான விடயம். இலங்கையின் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான் மனிதவுரிமைகள் பேரவையை எமக்கு அடையாம் காட்டிக்கொடுத்திருந்தார். 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்களுக்கு அப்பால் ரத்துபஸ்வல சம்பவம், வெலிகடை சம்பவம், மஹர சிலைச்சாலை சம்பவம் மற்றும் அண்மையில் பேசுபொருளாக இருந்த சடலங்களை நல்லடக்கம் செய்யும் விவகாரம் மனிதவுரிமைகள் விவகாரத்தில் பொது விடயமாகும்.

இலங்கையிலுள்ள இளைஞர்களிடம் பொதுவாக வினவினால் கனடாவுக்குச் செல்லவும், அவுஸ்ரேலியாவுக்குச் செல்லவும் அல்லது ஐரோப்பாவுக்குச் செல்ல விருப்பம் என்கின்றனர். அமைச்சர்களின் பிள்ளைகளுக்கு இலகுவாக வெளிநாடுகளில் தொழில்களை செய்ய முடியும். ஆனால், நாட்டின் சாதாரண இளைஞர்களுக்கு கனடா செல்ல விருப்பமுள்ளது. ஏன் அவ்வாறு விரும்புகின்றனர். அங்கு மனிதவுரிமைகள் உள்ளன. அந்த நாடுகள் மனிதவுரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றன. இலங்கையை கனடா போன்று அவுஸ்ரேலியா போன்றும் மாற்றியமைக்க வேண்டும்.

## மேல் மாகாணத்தில் தரம் 05,11,13...

நாட்டின் ஏனைய மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் அனைத்து வகுப்புகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக செயற்படவுள்ள நிலையில் மேல் மாகாணத்தில் 03 வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க தரம் 05 தரம் 11 மற்றும் தரம் 13 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளே எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேல் மாகாணத்தில் ஏனைய வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் 19ஆம் திகதி முதல் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேல் மாகாண பாடசாலைகளை திறப்பது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவின் எழுத்துமூல அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதனையடுத்தே நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானம் விடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இந்த வருடத்தில் தரம் ஒன்றிற்கு இணைக்கப்பட்டுள்ள புதிய மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளும் ஏப்ரல் 19ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும். ஏனைய அனைத்து பாடசாலைகளிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கல்வி அமைச்சினால் அறிவித்தல் வழங்கப் பட்டுள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றி கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் அனைத்து பாடசாலைகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார் (ஸ)




# பெண் தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## செங்கொடி பெண்கள் இயக்க செயற்பாட்டாளர் ஆனந்தி சிவசுப்ரமணியம்

(அக்குறணை குறூப் நிருபர்)

தேயிலை, இறப்பர் மலைகளில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களுக்கு நீர்வசதியுடன் கூடிய ஓய்வு அறை, மலசலகூடம் என்பன அமைக்கப்படுவது அடிப்படை உரிமையாகும் என செங்கொடி பெண்கள் இயக்க செயற்பாட்டளர் ஆனந்தி சிவசுப்ரமணியம் தெரிவித்தார்.

சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தை முன்னிட்டு செங்கொடி பெண்கள் இயக்கம் கண்டியில் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது,

பெருந்தோட்ட துறையில் பெண் தொழிலாளர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர், இன்றுவரையில் அது தீர்க்கப்படாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பாதை ஓரங்களிலும் கற்பாறைகளிலும் மரங்களுக்கு அடியிலும் அமர்ந்து சாப்பிடுகின்றனர்.

ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, காலகாலமாக அவர்கள் இவ்வாறு நடத்தப்படுதை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாது. கொட்டும் மழையில் கூரை ஏதுவும் இன்றி ஒருவரால் சாப்பிட முடியுமா? ஆனால் பெண் தோட்ட தொழிலாளர்கள் அவ்வாறு சாப்பிடுகின்றனர், சில வேளைகளில் நாய், குரங்கு, காகம் வனஜீவராசிகள் சாப்பாட்டை நாசம் செய்து விட்டு சென்று விடுகின்றன. அதன் போது சாப்பிடாமல் பட்டினியாக இருந்து பெண் தொழிலாளர்கள் வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

தண்ணீர் வசதிகள் எந்த மலையிலும் ஏற்படுத்தப்படவில்லை. குடிப்பதற்கும், கைகளை கழுவுவதற்கும் தொழிலாளர்கள் தண்ணீர் எடுத்து செல்ல வேண்டும். அவ்வாறு அவர்கள் கொண்டு செல்லும் தண்ணீர் 8 மணி நேரத்துக்கு போதுமானதாக இல்லை.



அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான மலசல கூடவசதிகள் தொழிலாளர்களுக்கு வேலைத் தளங்களில் இல்லை என்பது மேலும் ஒரு பிரச்சினையாகும். 8 மணி நேரம் வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கு நீர் வசதியுடன் கூடிய மலசல கூடங்கள் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். அவர்கள் மரங்களின் மறைவுகளையும் புதர்களையும் தேடிச்செல்கின்றனர். அவ்வாறான மறைவான இடங்களில் பூச்சிப்பட்டடைகள் தாக்குவதும், வழுக்கி விழுந்து உபாதைகளுக்கு உள்ளாவதும் அன்றாட நிகழ்வாகும். மாதவிடாய் காலங்களில் தங்களுடைய உடைகளை மாற்றிக்கொள்ளவோ, அதற்கான தேவைகளை செய்து கொள்ளவோ வாய்ப்பில்லை. மலைகளில் யாரும் பார்த்துவிடுவார்களோ என பயந்து பயந்து மன உளைச்சலுக்கு உள்ளாகி தொழிலாளர்கள் தங்களது இயற்கை உடல் கழிவுகளை வெளியேற்றுவது என்பது வேலைத்தள உடல் நல பாதுகாப்பு மற்று தொழில் உரிமை மீறலாகும்.

தொழில் அமைச்சு, பெருந்தோட்ட அமைச்சு, தொழில் ஆணையாளர்கள் என தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பதற்கான கட்டமைப்புகள் அனைத்தும் அமைதியாக இருந்துவிடுகின்றன. இது தொழிலாளர் வர்க்கத்திற்கே இழைக்கும் அநீதியாகும். இது இலங்கையின் தொழில் சட்டங்களின் தரம் தொடர்பான கேள்வியை எழுப்பும் நிலையையும் உருவாக்குகின்றது.

அதே போன்று தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க ஒன்றுபட வேண்டும். பெண் தொழிலாளர்களின் பிரச்சினையை பொதுபிரச்சினையாக அடையாளப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோட்ட மட்டத்தில் ஏனைய தொழிலாளர்களக்கு இப்பிரச்சினையின் விளைவுகளை தெளிவுப்படுத்துவதோடு, கம்பனிகள் மற்றும் அரச மட்டத்தில் இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான அழுத்தத்தை உருவாக்க வேண்டும். சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தில் செங்கொடி பெண்கள் இயக்கம் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் அநீதியை தடுத்து நிறுத்துவதற்கு தொழிலாளர்களுக்கு அறிவூட்டும் வகையிலும் அரசு மற்றும் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் சுவரோவியங்களை தீட்ட ஆரம்பித்துள்ளது.

# ஏ.டி.எம் இயந்திரங்கள் அடிக்கடி செயலிழப்பு

## மக்கள் அசௌகரியம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை நகரில் சில வங்கிகளின் தன்னியக்க பணம் பெறும் (ATM) இயந்திரங்கள் அடிக்கடி செயலிழப்பதனால் வங்கி வாடிக்கையாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

பலாங்கொடை நகரில் அமைந்துள்ள அரச தனியார் வங்கிகளின் தன்னியக்க பணம் பெறும் வங்கிகளில் அடிக்கடி இந்நிலைமை ஏற்படுவதாக வாடிக்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையால் தினமும் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் தன்னியக்க இயந்திரங்களில் பணத்தை பெறுவதற்காக இங்கு வரும் போது பணத்தைப் பெற முடியாமல் போவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் இங்கு பணம் பெறுதற்காக நீண்ட கியூ வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்நாட்களிலும் வங்கிகளில் உள்ள தன்னியக்க இயந்திரங்கள் பழுதடைந் து காணப்படும் நிலைமையையும் அவதானிக்க முடிகிறது.

# லெதண்டி 108 ஆவது மகளிர் தின நிகழ்வு



சவாலுக்கான தெரிவு எனும் தொனிப்பொருளில் 108 ஆவது சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பொகவந்தலாவ பெருந்தோட்ட கம்பனிக்குட்பட்ட லெதண்டி தோட்டத்தில் நேற்று முன்தினம் 08/03/2021 பிற்பகல் இடம்பெற்றது.

லெதண்டி குரூப் முகாமையாளர் இம்தியாஸ் தலைமையில் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் , மகளிர் தின வாழ்த்துரைகள் இடம்பெற்றதுடன் கொவிட் 19 தொற்றின் சவால்களுக்கு மத்தியில் தொழில் புரியும் பெண் தொழிலாளர்களுக்கு முகக்கவசங்களும் , சுகாதார பாதுகாப்பு உபகரணமும் வழங்கி வைக்கப்பட்டது .

நிகழ்வில் , நோர்வூட் பிரதேசசபை உறுப்பினர் எம்.ராமச்சந்திரன் கலந்து கொண்டு லெதண்டி , கார்பெக்ஸ், மால்புறோ, புரொடக் டிவிசன் தொழிலாளர்களுக்கு ஒருத்தொகுதி முகக்கவசங்களை வழங்கி வைத்தார்.

தோட்ட வைத்திய அதிகாரி மெக்ஹி, லெதண்டி தோட்ட வெளிகள உத்தியோகஸ்த்தர்கள் சிறுவர் நிலைய உத்தியோகஸ்த்தர்கள் ,தோட்ட தலைவர்கள், உட்பட பெண் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

# சொரனாதோட்ட - நூலகத்துடன் கூடிய பல்நோக்கு கட்டிடம் திறந்துவைப்பு





பதுளை, சொரனாதோட்ட பிரதேச சபையின் நூலகத்துடன் கூடிய பல்நோக்கு கட்டடம் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்திற்கு ஊவா மாகாணத்தில் சக்தியை வழங்கும் நோக்கில் மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் 8 மில்லியன் ரூபாய்கள் செலவில் குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக, மாகாண சபைகள் ஆணையாளர் மங்கள விஜயநாயக, சொரனாதோட்ட பிரதேச சபை தலைவர் டீ.எம். நதீகா பிறஷாந்தி திஸாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பசறையில் தொழிலுக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

பதுளை தினகரன் விசேட நிருபர்
பசறை நிருபர்

பசறையில் தொழிலுக்குச் சென்ற நபராரெுவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. பசறையைச் சேர்ந்த நவின் குணதிலக்க என்ற 47 வயது நிரம்பிய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பசறைப் பகுதியைச் சேர்ந்த தேவத்துர என்ற கிராமத்திலிருந்து ஏழுபேர் பெல்வத்தை சீனித்தொழிற்சாலைக்கு லொறியொன்றின் மூலம் பயணித்தனர். ஆனால் லொறி இயந்திரக் கோளாறு காரணமாக பசறையை விட்டுச் செல்ல முடியவில்லை. இதனால் லொறியிலிருந்த ஏழு தொழிலாளர்களும் வீடுகளுக்குச் சென்றனர்.

அவ் வேளையில் நவின் குணதிலக்க மலசலக்கூடம் செல்வதாக கூறி சென்றார். எனினும் அவர் வர தாமதித்தமையால் அவரை ஏனையவர்கள் தேடிச்சென்ற வேளையில் அவர் இறந்து கிடப்பதைக் கண்டனர். இச்சம்பவம் குறித்து பசறைப் பொலிஸாருக்கு ஏனையவர்கள் அறிவிக்கவே பொலிஸார் சென்று சடலத்தை மீட்டனர். சடலம் சட்ட விசாரணைகளுக்காக பசறை அரசினர் மருத்துவமனை பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது குறித்து பசறைப் பொலிஸார் தொடர்ந்தும் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பாரம்பரிய தென்னை, கித்துள் உற்பத்தி துறை வீழ்ச்சி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பாரம்பரிய தென்னை கித்துள் மரங்கள் மூலம் தயாரிக்கப்படும் கித்துள் பாணி கருப்பட்டி வகைகள் மற்றும் சாராய உற்பத்திகள் அருகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமையினால் தென்னை, கித்துள் உற்பத்தி துறை எதிர்காலத்தில் இல்லாமல் போகும் கவலைக்குரிய நிலைமை உருவாகி வருவதாக உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் புதிய தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்படாத பழைய பாரம்பரிய நடை முறையிலுள்ள ஒரே தொழிற்துறை இதுவாகும், ஏனைய மதுபான உற்பத்திகளுக்கு வழங்கும் ஒத்துழைப்பு தமக்கும் கிடைத்தால் இத்துறையை வினை திறனுள்ளதாக மாற்றியமைக்க முடியும் என இவர்க ள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# கம்பனிகளின் மிரட்டல்கள் இ.தொ.காவிடம் எடுபடாது



கம்பனிகளின் மிரட்டல்களுக்கு இ.தொ.கா அடிபணியபோவதில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களின் தொழில் சார் உரிமைகளை வழங்க முடியாதென்று பெருந்தோட்டக் கம்பனிகள் வெளிப்படுத்தி வரும் கருத்துகளுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்சார் உரிமைகளிலிருந்து விலகப் போவதாக, பெருந்தோட்டக் கம்பனிகள் வெளிப்படையாக அறிவித்து வருகின்றமையானது, கம்பனிகளின் அதிகார துஷ்பிரயோகத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது என்றும், செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

“சம்பள நிர்ணய சபையில், ஆயிரம் ரூபாய் நாள் சம்பளம் தீர்மானிக்கப்பட் பின்னர், குறைவான நாட்கள் மாத்திரமே வேலை வழங்கப்படும் என்று அறிவித்து வந்த பெருந்தோட்டக் கம்பனிகள், தற்போது தொழிலாளர்களின் நலன்சார் உ ரி மை க ளி லி ருந் து விலகப்போவதாக அச்சுறுத்தல் விடுத்து வருகின்றன. கம்பனிகளின் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு, இலங்கைத் தொழிலாளர் காஸ்கிரஸ் போன்ற மாபெரும் பிரதான தொழிற்சங்கமொன்று ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. அவ்வாறான அச்சுறுத்தல்களை, 7, 8 பேரைக்கொண்டு தொழிற்சங்கம் நடத்தி வருபவர்களிடம் வைத்துக்கொள்ளுமாறும்” அவர் எச்சரித்துள்ளார்.

“ஆயிரம் ரூபாய் சம்பள விடயத்திலும் சரி, தொழிலாளர்களின் வேலை நாட்கள் உட்பட அவர்களின் தொழில் சார் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் சரி, முன் வைத்த காலைப் பின் வைக்கப் போவதில்லை.

“வேலை நாட்களைக் குறைத்து தொழிலாளர்களின் வயிற்றிலடிக்க முயன்றால், அவ்வாறு வழங்கப்படும் வேலை நாட்களில், நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு கொழுந்தின் அளவைக் குறைத்து பதிலடி கொடுக்கவும் எமக்குத் தெரியும். ஒரு நாளில், 8 மணித்தியாலங்கள் வேலை செய்து, ஒரு கிலோகிராம் தேயிலைக் கொழுந்தைப் பறிக்கச் செய்து, முழு நாள் சம்பளத்தைப் பெற்றுக் கொடுத்த வரலாறுகூட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு இருக்கிறது. அதனால், தேவையற்ற விதத்தில் அச்சுறுத்தல்களை விடுத்து, தமக்குப் பாதகமாக நிலைமையை ஏற்படுத்திக்கொள்ளும் அளவுக்குப் பெருந்தோட்டக் கம்பனிகள் செல்லாது என நான் நம்புகிறேன். அதையும் மீறிச் செயற்பட்டால், எங்களுடைய பதிலடி, கம்பனிகளுக்குப் பாதகமாகவே அமையும். இதனால், தொழிலாளர்களைப் பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு, தங்களைத் தாங்களே பழிவாங்கும் நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன்” என்று, செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

# கனரக லொறி குடைசாய்ந்து விபத்து இருவர் படுகாயம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

பாணந்துறையிலிருந்து கம்பளை நோக்கி ( மின் இணைப்பு) கொங்றீட் தூண்களை ஏற்றிவந்த கனரக லொறியொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கினிகத்தேனை நாவலப்பிட்டி பிரதான வீதியின் பகதுலுவ பகுதியிலேயே 09/03/2021 நேற்று காலை 10.15 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தினால் கனரக லொறியின் சாரதி மற்றும் நடத்துனர் காயமடைந்து நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாரே விபத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். ஒரு வழி போக்குவரத்து இடம்பெற்று வருவதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.


படம் நுவரெலியா தினகரன் நிருபர்

நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் நீண்ட காலமாக ஆலய வளர்ச்சிக்காக தனது அளப்பரிய பங்களிப்பை செய்து இன்றுவரை ஆயுள் காப்பாளராக இருக்கின்ற முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான முத்து சிவலிங்கம் அண்மையில் ஆலயத்தில் நடைபெற்ற 49வது பொதுக் கூட்டத்தின் போது ஆலயத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் உட்பட அங்கத்தினர்களால் பொன்னாடை போர்த்தி கௌவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்

பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

கண்டி மடவளை மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் எதிர்வரும் 14 ஆம் திகதி (14.03.2021) காலை 8.30 மணிக்கு பாடசாலை அஷ்ரப் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அன்றைய தினம் பாடசாலை நலனில் அக்கறை கொண்ட சகல பழைய மாணவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என பாடசாலை நிர்வாகம் எதிர்பார்க்கின்றது. பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கத்தின் வகிபாகம் மிக முக்கியமாகும் .

இம்முறை பழைய மாணவர் சங்க நிர்வாக சபை தெரிவிற்கு பழைய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதிலிருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பழைய மாணவர்கள் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து 12.03.2021 திகதிக்கு முன்னர் பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# 'வடக்கு நோக்கிய நட்புறவு பயணம்'

சாவகச்சேரி விசேட நிருபர்

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'வடக்கு நோக்கிய நட்புறவு பயணம்' எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள ஆயர் ஜஸ்ரின் தோட்டத்தில் நேற்று காலை மாபெரும் மரநடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரித்தாஸ் அமைப்பின் யாழ் மாவட்ட இயக்குனர் அருட்தந்தை பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்துகொண்டிருந்தார்.

மேலும் நிகழ்வில் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா, கரித்தாஸ் கியூடெக் நிறுவன தேசிய இயக்குனர் மகேந்திர குணதிலக, யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் கிருசாந்தி கமலராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் மர நடுகை, சமாதானப் புறாக்களை சுதந்திரமாக பறக்கவிடல், கைப்பணிக் கைத்தொழில் பொருட்களின் கண்காட்சி நிகழ்வு ஆகியன நடைபெற்றன. மேலும் நிகழ்வில் மதகுருமார்கள், 521 மற்றும் 522 படைத் தலைமையகங்களின் தளபதிகள், கரிதாஸ் அமைப்பின் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் வவுனியா வளாகத்துக்கு விஜயம்



வவுனியா விசேட நிருபர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள வளாகத்துக்கு விஜயம் செய்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் பின் அங்கிருந்து பம்பைமடுவில் அமைந்துள்ள பீடங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

நேற்று காலை வளாகத்தில் துணைவேந்தர், பதிவாளர், வளாக முதல்வர் உட்பட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இச் சந்திப்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், வளாக முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன், பதிவாளர், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், அலுவலர்கள் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

# காணி ஆக்கிரமிப்பு தொடர்பாக அடுத்த வாரம் கலந்துரையாடல்

பருத்தித்துறை விசேட நிருபர்

வடக்கு, கிழக்கு தமிழர் தாயத்தில் முன்னெடுக்கப்படும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் அடுத்த வாரம் முக்கிய கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

இம் மாநாட்டில் முன்னாள் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட பலரும் பங்கெடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற அமெரிக்க ஒக்லண்ட் பல்கலைக்கழக முகாமைத்துவ பணிப்பாளர் அனுராதா மிட்டலுடனான காணொளி கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட அவர் இச் சந்திப்பிற்கென அனைத்து மட்டத்திலும் மக்கள் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.


இதனிடையே அமெரிக்க ஒக்லண்ட் பல்கலைக்கழக முகாமைத்துவ பணிப்பாளர் அனுராதா மிட்டல் கருத்து தெரிவிக்கையில், யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் ஆகியுள்ள போதிலும் வடக்கில் இன்னமும் ஆயிரக்கணக்கான ஏக்கர் தனியார் காணிகளை இராணுவம் தன்வசம் வைத்துள்ளதாக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது ஆய்வறிக்கை அமெரிக்க அரசிற்கும் ஐ.நா ஆணையாளரிற்கும் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவித்ததுடன் இணை அனுசரணை நாடுகளிற்கும் வழங்கப்படும்.

ஆயினும் நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான தமது போராட்டத்தை தமிழ் மக்கள் தொடரவேண்டும். ஊடகவியலாளர்கள் தமது பணியை தளரவிடாது முன்னெடுக்கவும்.

பொத்துவில் முதல் பொலிகண்டி பேரணியின் வெற்றியானது சர்வதேசத்திற்கு தமிழ் மக்களது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறது. அதனை முன்னின்று செயற்படுத்தியவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.





# அம்பிகையின் போராட்டமும் தமிழர் அரசியலும்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனிதவுரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது.

இலங்கை தொடர்பில் 47 அங்கத்துவ நாடுகளும் இரண்டு அணிகளாக செயற்பட்டு வருகின்றன. இந்நிலையில் பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு கடும் அழுத்தம் கொடுக்கும் வகையில் பிரேரணையை நிறைவேற்ற முனைப்பு காட்டி வருகின்றன.

இந்நிலையில் ஐ.நா மனிதவுரிமை பேரவையின் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் புலம்பெயர் நாடுகளிலும், இலங்கையிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசிற்கு மேலும் கால அவகாசம் வழங்க சர்வதேசம் முனைந்துள்ளமையை எதிர்த்தும், இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தக்கோரியும் நான்கு அம்சக்கோரிக்கைகளை பிரித்தானிய அரசிடம் முன்வைத்து பிரித்தானியாவில் அம்பிகை செல்வகுமாரினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அகிம்சை வழியிலான உணவு தவிர்ப்பு போராட்டம் தொடர்கின்றது.

தனது கோரிக்கையை பிரித்தானிய அரசு நிறைவேற்றும் வரை உணவை உண்ண மறுத்துவரும் அம்பிகையின் உடல் நிலை மிகவும் சோர்வுற்று குரல் தளர்வடைந்துள்ள நிலையிலும் அவரது போராட்டம் தொடர்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை விசாரணை செய்வதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் வேறு பொருத்தமான மற்றும் பயனுள்ள சர்வதேச பொறுப்புக்கூறல் வழிமுறைகளை பரிசீலிக்கவும் இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயங்களை எடுத்துக் கொள்ள ஐ.நா.பாதுகாப்புக் குழு மற்றும் ஐ.நா பொதுச் சபைக்கு பரிந்துரைத்தல்.

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட மிகக் கடுமையான சர்வதேச குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்களின் சான்றுகளை சேகரிப்பதற்கும் குற்றவியல் வழக்குகளுக்கு கோப்புகளைத் தயாரிப்பதற்கும் ஏதுவாக மியான்மருக்காக அல்லது சிரியாவிற்காக நிறுவப்பட்டதைப் போன்ற ஒரு சர்வதேச, சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையை நிறுவுதல்.

ஒரு அர்த்தமுள்ள சர்வதேச சுயாதீன புலனாய்வு பொறிமுறையானது பாதிக்கப்பட்ட தமிழர்களிடமிருந்து சான்றுகளை சேகரிக்க வேண்டியதுடன், செப்டம்பர் 2015 ஆம் ஆண்டு OISL இன் அறிக்கையில் உள்ள தகவல்களையும் ஆதாரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

அத்துடன் இவற்றிற்கு வரையறுக்கப்பட்ட கால அவகாசம் இருக்க வேண்டும்.

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மீறல்கள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கவும் மற்றும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கள இருப்பினை நாட்டில் வைத்திருப்பதற்கு ஏதுவாகவும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் விசேட பிரதிநிதியை நியமித்தல்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்ற அடிப்படையிலும் தமிழர்களுக்கு உரிய சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்மானிக்க ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்பை பரிந்துரைத்தல்.

ஆகிய நான்கு கோரிக்கைகளில் ஒன்றையாவது பிரித்தானிய அரசு நிறைவேற்ற வேண்டும் எனவும், அதுவரை தனது போராட்டம் தொடரும் என தெரிவித்துள்ளதுடன் உலகெங்கிலுமுள்ள அனைத்து தமிழ் மக்களையும் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் கோரிக்கைகளை நிறைவேற்ற தத்தம் நாட்டு பிரதிநிதிகளுக்கு அழுத்தங்களை கொடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

இப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணம், நல்லூர் ஆலயம் முன்றலில் வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் சிவில் அமைப்புக்கள் மற்றும் தமிழ் தேசிய கட்சிகளின் பங்களிப்புடன் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் 10 ஆவது நாளைக் கடந்தும் தொடர்கின்றது. மட்டக்களப்பிலும் சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் மாமங்க பிள்ளையார் ஆலய முன்றலிலும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை காரணமாகவும், தொடரும் திட்மிட்ட அடக்குமுறை தொடர்பிலும் அரசாங்கத்திற்கு எதிரான அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைளையும், அபிலாஷைகளையும் அரசாங்கம் புரிந்து கொள்ள தவறியதன் விளைவே இன்று சர்வதேச விவகாரமாக மாறியுள்ளது.

ஐ.நா நெருக்கடியை இலங்கை ஒரு புறம் எதிர்கொண்டாலும், இனியாவது இதய சுத்தியுடன் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசணை காட்டுமா? என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.



மதிவண்ணன் கௌசிகன்

# துளிர்

பவதாரணி ராஜசிங்கம்



**“பட்டங்கள் ஆழ்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் ”.**

மனித நாகரிகத்தில் அதீத செல்வாக்கினை செலுத்துவது கல்வி வளர்ச்சி. இந்த பூமியில் வாழும் மனிதர்கள் அனைவரும் கல்விகற்பதற்கான உரிமை உடையவர்கள். ஆண்,பெண் என்ற வேறுபாடுகள் இல்லை. அனைவரும் தமக்கான அறிவை வளர்த்துக்கொள்ள முடியும். ஆனாலும் ஒப்பீட்டளவில் ஆண்களைவிடவும் பெண்கள் கல்வி கற்பதற்கான உரிமையினை பெற்றுக்கொள்வதில் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

மேம்போக்காக பார்த்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை. இதனை கூர்ந்து நோக்கினால் வறுமை, பெண்ணுக்கு கல்வி தேவையற்றது போன்ற மனநிலை உட்பட மேலும் பல இன்னல்கள் அவர்களின் மீது அழுத்தைத்தை பிரயோகிக்கின்றன.

தெற்காசிய நாடுகளை பொறுத்தளவில் இலங்கையின் கல்வியறிவு சதவீதமானது மற்றைய நாடுகளுடன் ஒப்படுகையில் அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளின் கல்வியறிவு சதவீதத்துக்கு மிக நெருக்கமான தன்மை கொண்டது.

பெண் கல்வி என்பது மிகவும் வேண்டிய ஒன்றாகும். ஒரு பெண் கல்வி கற்பதென்பது அந்த சமூகமே பயன்பெறுவதற்குச் சமனானது என்பர். பெண்கள் நாட்டின் கண்கள் என்கிறோம். ஆனால் அந்த கண்களிற்கான அறிவை, அழகை கொடுக்காமல் விடுவது நாட்டினையே நாம் பின்தள்ளும் முயற்சி என்பேன்.

மனிதர்கள் அனைவருக்குமே கல்வி என்று பேச வேண்டிய தளத்தில் இருந்துகொண்டு பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்து இன்னுமே தனித்து பேசிக் கொண்டே இருக்கின்றோம் என்றால் நாம் எம்மீதே வெட்கம் கொள்ள வேண்டும். இன்றைய காலகட்டத்தில் பெண்கள் எத்தனையோ துறைகளில் தமக்கான அடையாளத்தை பதித்திருக்கின்றார்கள்.

நமது நாட்டின் முதல் பெண் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களை இங்கு குறிப்பிட்டுக் கொள்கின்றேன். ஆக அத்தனை உயரங்களை ஆள பெண்கள் புறப்பட்டு விட்டார்கள். இருந்தும் ஆங்காங்கு சில இடையூறுகள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டுள்ளன. சமூக,பொருளாதார மற்றும் பண்பாட்டுக் காரணிகளால் பெண்களின் பாடசாலைக் கல்வி பாதியிலேயே நின்றுவிடுகின்ற நிலையினைக் காணலாம். திருமணம்,பெண்கள் மீதான குடும்பத்தினுடைய பல்வேறுபட்ட திணிப்புக்கள்,வேறுபட்ட கலாசாரக் கொள்கைகள் என்பன அவர்களின் கல்வி அறிவினை பெற்றுக்கொள்வதற்கு இடையூறாக அமைகின்றன.

சாதாரணமாக வீட்டின் அத்தனை பொறுப்புக்களையும் மிகச் சாதுரியமாக கையாளும் பெண்ணுக்கு அறிவை வளர்த்துக் கொள்வது சிரமமில்லை. அவளிலிருந்தே குழந்தைகள் அறிகின்றன. பெண்களுக்காய் குரல்கொடுத்த பெரியவர்கள் ஏராளம்.

நம் தமிழ் மரபில் சங்ககாலத்தில் ஏராளம் பெண்பாற்புலவர்களை காணலாம். அவர்கள் நமக்கு தந்துள்ள ஏராளமான செய்யுட்களை பாருங்கள். அவற்றின் அர்த்தையும் ஆழத்தையும் பார்த்த எவரேனும் பெண் கல்வியையும் அதன் உயர்வையும் மறுக்க முடியாது. நம் வரலாற்றில் போர் புரிந்த வீர மங்கையரை காணலாம். நாட்டினை நல்லாட்சி புரிந்த அரசிகளை காணலாம். இப்படி சகலதுறைகளிலும் சாதனை படைத்தவர்கள் பெண்கள்.

"ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டின் பெண் மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறதென்பது எவரும் ஏற்கத்தக்க உண்மை. பெண் மக்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, இடுக்கணுமின்றிப் பிறப்புரிமை இன்பத்தை எங்கே நுகர்கிறார்களோ அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரிக நுட்பம் உணர்ந்தவர்களாகிறார்கள். அந்நாடே நாகரிகம் பெற்றதாகும்” என்கிறார் திரு.வி.கலியாணசுந்தரனார்.

நாடும் அதன் சமுதாயம் எப்படி முன்னேற்றமடைகின்றது என்பதனை அந்நாட்டில் பெண்களின் கல்வியும் அக் கல்வி மூலமும் பெண்கள் சமூகத்திற்கு செய்கின்ற பணிகளையும் வைத்து அறிந்து கொள்ள முடியும். நாடு முன்னேற்றமடைய பெண்ணுக்கு கல்வி புகட்டுவது அத்தியாவசியமானது. அது அவளது உரிமையும். நீங்கள் அறிந்தவர்களுக்கு இந்த உண்மையை எடுத்துரையுங்கள். நாளைய நம் சமுதாயமாவது இன்னும் செழிப்புடன் வாழட்டும்.

---

தொகுத்து எழுதுபவர்
**வெற்றி துஷ்யந்தன்**




# வாத்தியக் கலைஞனாய் வலம் வரும் கிற்றார் ராயு

இசையென்னும் பேரின்பத்தை நுகர்கின்ற மனங்களில் இசையோடு சேர்ந்து அதனை இன்புற தருகின்ற நம் கலைஞர்களும் இதயங்களில் இடம் பிடித்து விடுகின்றமை வழமையான ஒன்று.

இப்படியான வெளியில் கடந்த பதின்நான்கு ஆண்டுகளாக ஒரு கிற்றாரிஸ்டாக வடபுலத்தின் அநேக இசைக் குழுக்களினூடாக மக்களால் நன்கு அறியப்பட்ட ஒரு கலைஞனாக திகழ்கிறார் கிற்றாரிஸ்ட் ராயு.

சுன்னாகம் மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது தாய் தந்தையரான இராமலிங்கம் இராஜேஸ்வரி ஆகியோர் இவருக்கான கலைத்துறை ஆர்வ மேலீட்டை வளர்த்தவர்களாக இருக்கின்றனர். ஆசிரிய அலோசகராக பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் இவரது தாயாரான இராஜேஸ்வரி அவர்கள் பாடல்களை எழுதிப் பாடக் கூடியவராகத் திகழ்ந்திருக்கிறார்.

அதன் காரணமாக சிறுவயது முதலேயே ராயுவுக்கு இசைத் துறை நாட்டம் மேலோங்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் வாய்ப் பாட்டு, மிருதங்கம், வீணை, வயலின் போன்றவற்றைக் கற்றுக் கொண்ட இவர் கிராமியப் பாட்டு, வில்லுப்பாட்டு போன்றவற்றிலும் ஈடுபாடு கொண்டு தனது பாடசாலைக் கால கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றியிருக்கிறார்.

2004 ஆம் ஆண்டில் கிற்றார் வாத்தியத்தின் பேஸ், லீட் போன்றவற்றை இசையாசிரியர் வாசுகி ரங்கனிடமிருந்து கற்றுக் கொண்ட கடினமான வாத்தியத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் ஸ்டைலிஷிற்காகவுமே கிற்றாரை தேர்வு செய்ததாகவும் சொல்லிக் கொள்வார்.

வாசுகி ரங்கன் புலம் பெயர் நாட்டிற்குச் சென்ற பின்னர், அவருடைய இசைக் கற்கை நிறுவனத்தை சிலகாலம் இவரே நடத்தியும் வந்திருக்கின்றார். ஒரு முழுமையான வாத்திய இசைக் கலைஞராக எல்லாவற்றையும் கற்றுக்கொண்ட இவர் 2007 ஆம் ஆண்டு முதன் முதலில் அருணா இசைக் குழுவில் ஒரு லீட் கிற்றார் வாத்தியக் கலைஞராக அறிமுகமானார்.

ஆயினும் ஒரு சுவாரசிய சம்பவம் மூலமாக இவர் அன்றிலிருந்து இற்றை வரை வலம் வருகிறார். அதாவது இசைக் கோகுலம் அருணாவின் மகனான ஜெகதீஸ் அருணா இவரது கையில் பேஸ் கிற்றாரை ஒப்படைத்த அன்றிலிருந்து தான் பேஸ்கிற்றாரிஸ்ட் ஆக மாறிய தான ஒரு சம்பவத்தை நன்றி கலந்த நெகிழ்ச்சியோடு கூறியிருந்தார்.

அன்றைய நாளிலிருந்து இன்று வரை தாயகத்தின் பல இசைக் குழுக்களிலும் தனது இசைப் பங்களிப்பை வழங்கி வருகிறார். தனது இசைத் துறை நண்பர் ட்ரம்ஸ் மயூரனுடன் இந்தப் பயணத்தில் காலடி வைத்ததையும் சொல்லிக் கொண்டார் என்னிடத்தில்.

இவரது கிற்றார் இசைப் பயணத்தில் கிற்றார்களை கொள்வனவு செய்து இவரை ஊக்கப்படுத்துபவர் இவரது சகோதரரான ராமேஸ். அடிப்படையில் ஒரு சிவில் பொறியியலாளரான ராயு இன்று கட்டட ஒப்பந்தம், நிர்மாணம் போன்ற பணிகளை செய்து கொண்டே இசைத்துறையிலும் இயங்கி வருகிறார்.

தாயகத்தின் பெயர் சொல்லும் அத்தனை இசைக்குழுக்களினதும் இசையாற்றுகைகள், ஒலிப்பதிவுகள் என பெயர் பெற்ற பேஸ்கிட்டாறிஸ்ட் ஆக வலம் வரும் ராயு, மேலும் பல சிறப்புக்களை பெற்று இசைச் சாதனைகளை புரிகின்ற ஒருவராக திகழ்வார் என ஆணித் தரமாகக் கூறமுடிகிறது.



---

# எமது உளத்தினை நேர் பார்வையில் வைத்திருப்போம்

விமலி

**நான் சமூக வலைத்தளத்தில் பார்த்த இரண்டு விடயங்களை முன் வைக்க விரும்புகிறேன்....**

ஒரு குழந்தை தனது தாய் மூலமாகவே உரிமை மீறலுக்கு உட்பட்டுள்ளது. அந்த குழந்தைக்கு எட்டு மாதங்கள் தான் ஆகியிருக்கும். ஏன் இந்த தாய் இப்படி ஆகிவிட்டாள்?

எங்களது காலங்களில் இப்படி நடந்தது இல்லையே. எங்களிற்கு சிறு வயதில் கொடுமைகளாக எதுவுமே நடந்தது இல்லை. நாங்கள் அடி வாங்கிய காலங்களாக பள்ளிப்பருவ நாட்களாகவே இருக்கும்.

அப்போதைய அடிகள்தான் இன்று சமூகத்தில் எம்மை சொந்த காலில் நிற்க வைத்திருக்கிறது. ஆனால் இன்றைய நிலை, எட்டுமாத குழந்தை; பால்குடி கூட மறந்திடாத பிஞ்சு; ஏன் இப்படியான கொடூரத்தை அதன் அம்மாவினால் அனுபவிக்க வேண்டும்?

நினைக்கும் போது மனது வலிக்கிறது. ஒரு தாய் எப்படி இருக்க வேண்டும் என்பதையே இன்றைய பல செய்திகள் தலைகீழாக மாற்றி விட்டன. காரணம் உலக மாற்றமும் தொலைத்தொடர்பு சாதன பயன்பாடும் வேற்று தொடர்புகளும் தான்.

மனது வேதனை அளிக்கிறது. சமூகத்தின் பார்வையையும் தாண்டி ஒரு குழந்தைக்கு நடந்த அநீதியானது ஒரு தாய் மூலமாக என்று நினைக்கும் போது இன்னும் மனது கனமாகிறது. எப்போது மாற்றம் வரும் என்பது கேள்வியாகி விட்டது என்றே சொல்வேன்.

அடுத்து ஒரு பெண்ணை கொலை செய்து ஒரு பெட்டியினுள் வைத்து கொண்டு வந்த செய்தியையும் படித்தேன். காலம் முற்றுப் பெற போகிறது போலும். மனிதம் செத்து விட்டது.

கொலைகளும், வன்முறைகளும் தலைக்கு மேலாக இருப்பதாகவே உள்ளன. இதனை எவ்வாறு தடை செய்வது என்பதனை சிந்திக்க தொடங்கும் போதே, மனிதன் தனது உளவியல் பூர்வமான சிந்தனையை சிதைத்து விட்டான் என்பேன். உளவியல்தான் இனி நம் மனிதர்களிற்கு மிகவும் தேவையான ஆயுதமாகும்.

எவ்வளவு பெரிய மனித கொடூரம் நடந்து கொண்டிருக்கிறது என்பதனை நினைக்கும் போது வேதனை அளிக்கிறது. மாற்றம் தேவை; அதனை விட மனித உளம் சார்பான பல மாற்றங்கள் அவசியம்.

இந் நாட்டினில் ஓரிரு நாட்களில் நடந்த வன்முறைகள் இன்று மிகவும் ஆழமாக சிந்திக்க வைக்கிறது. ஒரு தாய் தன் தாய்மையை இழந்து விட்டாள்.

ஒரு தாயின் கடமையை தவற விட்டு இன்றைய விஞ்ஞான நவீன உலகிற்கு அடிமையானதே காரணமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மாற்றம் வர வேண்டியது ஒவ்வொரு தனிமனித சிந்தனையிலிருந்து என்பதனை மறக்க முடியாது; மறுக்கவும் முடியாது. அடுத்து ஒரு மனித நேயம் செத்து விட்டது என்பேன். ஒரு பெண்ணை கழுத்தை அறுத்து சிதைக்க முடியுமாயின் அங்கு அந்த செயல் மனித செயற்பாட்டிற்கு அப்பாற்பட்டது தானே ?.

மாறுமா சமூகம்; மாறித்தான் ஆக வேண்டும். அது தனிமனித சிந்தனையிலிருந்தும், சுய ஒழுக்கத்தில் இருந்துமே மாற்றம் பெற முடியும். சரியான நோக்கோடு நேரான பார்வையில் உளம் சார் செயற்பாடு செல்லுமாயின் இங்கு மனது இளமையாகி விடும். மனதிற்கு அனைத்தும் பொறுமையைக் கற்றுத்தந்து விடும்.

எனவே மனித நேயமும் மனித விழுமியங்களும் தடைப்படுமாயின் இங்கு உளம் சரியாக செயற்படவில்லை என்றே கூறுவேன்.

எனவே மனிதன் தனது உளத்தினை நலமாக்க அவன் தனது மனதினை நேர்கோட்டில் வைத்திருப்பதற்காக பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

தியானம், வாசித்தல், வெவ்வேறு மனித நடத்தைகள் பற்றிய சிந்தனைகளை தெரிந்து நல்லவற்றை தெரிவு செய்து நமது வாழ்வியலில் செயற்படுத்தும் போது இவ்வாறான தவறான உளப் பாதிப்புகளில் இருந்து மீள்வதோடு மகிழ்வான வாழ்வியலில் வாழ்க்கையை தொடர முடியும்.

மனிதன் பலவீனமானவன் என்பதனை விட உளத்தினால் பலவீனப்படுத்தப்படுகிறான். அந்த உளத்தினை நேர் பாதையில் வைத்திருப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.



படைப்பாளிகள் உலகம் காதலர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டிருந்த காணொளி பாடலே 'ஸ்மைலி'. இந்த பாடலின் வரிகள் மற்றும் இசையமைத்திருக்கிறார் அருணன். பாடலில் நடித்திருக்கிறார்கள், வளர்ந்து வரும் இளம் நடிகை கிருஸ்ணநளினி. அவருடன் இணைந்து சரன், அரோன் மற்றும் அபிசன் ஆகியோரும் நடித்திருக்கிறார்கள்.

---

# வாழ்வியலை பதிந்து நிற்கும் 'ஆறாம் நிலம்'

## திரைப்படத்தின் ஓர் இரசனைக் குறிப்பு

தமிழ் மக்களின் வாழ்வியல் சார் கலை முயற்சி என்பது மிகக் காத்திரமானது. மிக நீண்ட பரப்பாக விரிந்து வியாபகம் பெற்றிருக்கின்ற இந்த கலைப்பரப்பை குறுகிய வடிவில் எழுதுவதுவும் சாத்தியமில்லை.

எங்கள் கதைகளும், எங்கள் பிரச்சினைகளும் திரைமொழிக்கூடாக காண்பியமாகின்ற போது அவை எம் மத்தியில் ஏற்படுத்துகின்ற தாக்கம் அளப்பரியது. இவ்வாறு எங்கள் மண்ணின் மிக முக்கியமான ஒரு பிரச்சினையை தளமாக கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் வெளியாகி அநேகர் விருப்பை பெற்ற நம்மவர் படைப்பு இயக்குனர் ஆனந்த ரமணனின் 'ஆறாம் நிலம்' திரைப்படம்.

இப்போது மீண்டும் கலைப் பரப்பில் ஆறாம் நிலம் திரைப்படம் குறித்த பேச்சுக்களும் கருத்துருவாக்கங்களும் சமூக ஊடகங்கள் வாயிலாக பேசப்பட்டு வருகின்றமைக்கு ஒரு காரணமாக அண்மையில் தமிழகத்தில் இத் திரைப்படம் சிறப்புத் திரையிடலுக்கூடாக அநேகருக்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதன் வாயிலாக தென்னிந்திய திரைத்துறை சார் பலரும் தங்கள் வாழ்த்துக்களையும் கருத்துக்களையும் கூறி வருகின்றனர். குறிப்பாக நடிகர் மன்சூர் அலிகான் தன்னுடைய கருத்தாக சிறப்பானதொரு கருத்தை பதிவுசெய்திருக்கின்றார். அடுத்து மிக முக்கியமாக திரைப்படத்தின்




நாயகி நவயுகா ராஜ்குமாரின் நடிப்பையும் அந்த பாத்திரத்தின் வாழ்வியல் குறித்தும் கவிஞர் வைரமுத்து அவர்கள் வாழ்த்தி பேசியிருக்கின்ற காணொளி ஒன்றும் சமூக வலைத்தளங்கள் வாயிலாக வைரலாகியிருக்கிது.

இது, இந்த திரைப்படம் அவர்களின் மனதில் எவ்வளவு தாக்கத்தை செலுத்தியிருக்கின்றது என்பதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. போருக்குப் பின்னரான தாய் தமிழ் தேசம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் மிக முக்கியமானதொன்று வலிந்து காணாமலாக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள்.

கடந்த பத்தாண்டுகளாக இந்த அவலநிலை தமிழர் தாயகத்தில் நீண்டு விரிகின்ற தொடர்கதையாக சென்று கொண்டிருக்கின்றது. நாளும் பொழுதும் ஏதோவொரு மூலையில் எம் உறவுகள் சார் பிரச்சினைகள் நெஞ்சத்தை அதிரச் செய்தபடி இருக்கிறது.

அதிலும் உறவுகளை தேடும் உறவுகளை துண்டாட நினைக்கும் அதிகார வர்க்கத்தின் பாலியல் துன்புறு நிலையியலையும் எங்கள் பெண் சமூகம் எதிர்நோக்கி வருகின்ற சூழலில்தான் இன்று ஆனந்த ரமணன் என்னும் நம் இளவல் ஆக மிளிரும் ஒரு திரைத்துறை படைப்பாளியின் காத்திரமான முயற்சியை 'ஆறாம் நிலம்' என்னும் ஒரு மக்கள் வாழ்வு காண்பியமூடாக தரிசிக்க முடிகிறது.

உண்மையில் இதனை திரைப்படமென்னும் அடைமொழிக்குள் கொண்டு வர முடியவில்லை. இது நிதர்சன வாழ்வியல்; புனைவின்றிய யதார்த்தம்; இங்கு எல்லாமே யதார்த்தம். குறிப்பாக "நிலம் மீட்கதான் இதனை புதைத்தோம். ஒரு வகையில் இதுவுமொரு நில மீட்புதான்" என்ற வசனம் நெஞ்சை உருக்கியது.

ஆனந்த ரமணன் ஈழத்து திரைத்துறை கலைஞர்களில் மிக முக்கியமான படைப்பாளி. அவருடைய ஒவ்வொரு படைப்புக்களும் மிக முக்கியமானவை. ஐவகை நிலங்களோடு பின்னிப்பிணைந்த தமிழர் வாழ்வியலில் ஆறாம் நிலமாய் உருக்கொண்டு நிற்கும் ஒரு நிலத்தின் புத்துருவாக்கத்தை அழகுற சித்தரித்துள்ளார் இயக்குனர்.

இயல்பான பேச்சு நடைக்கூடான ஒவ்வொரு வசனங்களும் எங்கள் வாழ்வியலோடு எல்லாவற்றையும் பின்னிப்பிணைக்கின்றது. குறிப்பாக மன்மதன் பாஸ்கியின் இயல்பான பேச்சுநடை ஒரு கால வாழ்வை இரசிக்கக்கூடியதாய் மீள்நினைவிற்கு சிலவற்றை கொண்டுவந்தது. இந்தப் படைப்பின் நாயகி நவயுகா பாத்திரமாகவே வாழ்ந்திருக்கின்றார்.

நிறைய இடத்தில் முகபாவங்களூடே ரசிக்க வைக்கின்றார். சோகம், ஏக்கம், வலிமை என ஒவ்வொரு உணர்வினையும் மிக அழகாக வெளிப்படுத்துகின்றார். தமிழ் செல்வி என்ற அந்த பாத்திரம் கண்களுக்குள் இன்னுமின்னுமாய் பல கதைகளை வெளிப்படுத்தியிருந்தது. ஒரு இனப் பரம்பலின் வாழ்வியலில் ஆயிரமாயிரம் வலிகள் பிரச்சினைகள் நிரம்பியிருக்கும்.

ஆனால் போருக்கு பின்னைய கால வாழ்வியலையும், நெருக்குவாரங்களையும் ஆறாம் நிலம் என்ற ஒரு கட்டுருவாக்கத்தினூடே இப்படியொரு வாழ்வியலுக்குள் எங்கள் சனங்கள் சிக்குண்டு கிடக்கிறார்கள் என்பதை மிக சிறப்புற காட்டியிருக்கின்ற வகையில் ஈழ சினிமாவில் ஒரு மிகமுக்கியமான படைப்பாக ஆறாம் நிலம் அமையும் என்பதில் ஐயமில்லை.

# கிழக்கின் குரல்



# கொவிட் தொற்று காலத்திலும் கிழக்கில் மக்களுக்கான சேவைகள் முன்னெடுப்பு

## அட்டாளைச்சேனையில் கிழக்கு அளுநர் அனுராதா யஹம்பத்



**ஒலுவில் விசேட, ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு சௌபாக்கிய திட்டத்தின் கீழ் எமது நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதாக, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் அம்பாறை மாவட்டத்திற்கான எந்திரவியல் திரவிய பரிசோதனை ஆய்வு கூட காரியாலய திறப்பு விழா அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (09) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் தவிசாளர் ஜெ. ஜெனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஆளுநர் தொடர்ந்து உரையாற்றுகையில், அரசாங்கத்தினால் மக்களின் நலன் கருதி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்கொண்டு செல்லப்படுகின்றது.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்திலும் கொவிட்19 தொற்று காலத்திலும் தொடர்ச்சியாக மக்களுக்கான சேவைகள் முன்கொண்டு செல்லப்படுகின்றது. இவ் அபிவிருத்தி திட்டங்களை முன்கொண்டு செல்வதற்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே கொள்கையுடன் பயணிக்க வேண்டும். அப்போதுதான் எமக்கான அபிவிருத்திகளை பெற்றுக் கொள்ள முடியும்.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு வீடு மற்றும் மலசல கூடங்கள் கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் எந்திரவியல் திரவிய பரிசோதனை ஆய்வு கூடம் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக் காரியாலயத்தை இங்கு கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இந் நிகழ்வில் முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளர் இரா. நெடுஞ்செழியன், கிழக்கு மாகான வீடமைப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் றிஸ்லி முஸ்தபா மற்றும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் மகளிருக்கு விசேட வீடுகள் கையளிப்பு

**(சாய்ந்தமருது தினகரன் நிருபர்)**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட சௌபாக்கியா மகளிருக்கான விசேட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (08) இடம்பெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியொதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட ஏழு வீடுகள் மகளிருக்கு கையளித்து வைக்கப்பட்டன.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீடுகளை கையளித்து வைத்தார்.

இந்நிகழ்வுக்கு உதவிப் பிரதேச செயலாளா எம்.ஐ முவஃபிகா, சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் ஏ.எல்.யூ. ஜூனைதா, திட்ட முகாமையாளர் ஏ.எம்.ஏ. கபூர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆளுமை மிக்க பெண்கள் கௌரவிப்பு

**(வெல்லாவெளி தினகரன் நிருபர்)**

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளுமை மிக்க பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (8) இடம்பெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் மாற்றத்திற்கான வலையமைப்பு மற்றும் *Leo club of Cecilian's* ஆகியன இணைந்து "ஆளுமை மிக்க தலைமைத்துவம்" எனும் தொனிப்பொருளில் நிகழ்வு நடாத்தப்பட்டது. ஆளுமை மிக்க தலைமைத்துவத்துடன் பல துறைகளில் தலைமைத்துவத்தில் உள்ள பெண்களை கௌரவிப்பதும், பெண்பிள்ளைகளை ஊக்குவிப்பதும் இந் நிகழ்வின் முக்கிய நோக்கமாக உள்ளது.

இதன் அடிப்படையில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் ந. சத்தியானந்தி, மாவட்ட அபிவிருத்தி இணைப்பு குழு செயலாளர் மங்களேஸ்வரி சங்கர் ஆகிய இருவருக்கும் ஆளுமை மிக்க தலைமைத்துவம் எனும் பாராட்டு சின்னம் இவ் வலையமைப்பினரால் வழங்கி வைக்கப்பட்டது.

# பொத்துவில் செங்காமத்தில் நடைபெற்ற மகளிர் தின விழிப்புணர்வு நிகழ்வு

**(திருக்கோவில் தினகரன் நிருபர்)**

சர்வதேச மகளிர் தினமான திங்கட்கிழமை (08) பொத்துவில் பிரதேச செயலாளர் பிவுக்குட்பட்ட செங்காமம் கிராமத்தில் விழிப்புணர்வு பேரணி மற்றும் அரங்க நிகழ்வுகள் என்பன மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

இந் நிகழ்வு பொத்துவில் பிரதேச செயலக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரேகா அருள்நிதி தலைமையில் இடம்பெற்றது.

இவ் சர்வதேச மகளிர் நிகழ்வுகளானது பொத்துவில் பிரதேச செயலக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு மற்றும் பொத்துவில் பிரதேச மகளிர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் செங்காமம் ரொட்டரிக் கழக கட்டடத்தில் இடம்பெற்றது.

இதன்போது முதல் நிகழ்வாக மகளிர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு பெண்கள் அமைப்புக்கள் வீதி பேரணி ஒன்றினை முன்னெடுத்து இருந்தனர். இதனைத் தொடர்ந்து சர்வமத குருமார்கள் மற்றும் அதிதிகள் வரவேற்கப்பட்டு நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின.

இதனைத் தொடர்ந்து பொத்துவில் பிரதேச செயலக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரேகா அருள்நிதி பெண் விடுதலை பற்றிய விசேட உரை இடம்பெற்றதுடன், தொடர்ந்து அதிதிகளான பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துருபன் அனுரூத்த, உதவிப் பிரதேச செயலாளர் வை.றாசீத், தவிசாளர் எம்.எச்.ரஹீம் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் விசேட உரைகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சாதனைப் பெண்கள் பலர் பொன்னாடை போர்த்திப் பாராட்டி கௌரவிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# டொமினிக் ஜீவாவுக்கு அஞ்சலிக் கூட்டமும், நினைவுப் பகிர்வும்

**திருமலை மாவட்ட விசேட, அன்பு வழிபுரம் தினகரன் நிருபா்கள்**



ஈழத்து எழுத்தாளர் டொமினிக் ஜீவாவுக்கு அஞ்சலி கூட்டமும், நினைவுப் பகிர்வும் ஞாயிற்றுக்கிழமை (07) ஸ்ரீ சண்முகா ஆண்கள் இல்ல கிருஸ்ணதாசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈழத்து எழுத்தாளர்களின் மிக முக்கியமானவரான நந்தினி சேர்வியர் மற்றும் ஈழத்தின் மிக பிரபல்யமான சஞ்சிகையான நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றியிருந்தனர். இதன் போது எஸ்.ஆர். தனபாலசிங்கம் உரையாற்றும் பொழுது மானிடம் சார்ந்த விடயங்களை தாங்கி நிற்பதால் இலக்கியத்திற்கு அழிவு இல்லை.

இதனால் தான் டொமினிக் ஜீவா போன்றோர் இலக்கியமுள்ளவரை வாழ்ந்துகொண்டு இருபார், தமிழரசுக்கட்சியின் பத்திரிகையான சுதந்திரம் பத்திரிகையில் இவரது முதல் கதை வெளிவந்தது இலங்கையில் உள்ள அனைத்து எழுத்தாளர்களுக்கும் சுதந்திரம் களம் அமைத்துக் கொள்ள இடம் கொடுத்ததை இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புவதாகவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து நந்தினி சேர்வியர் உரையாற்றுகையில் 1962 களில் இவரது தண்ணீரும் கண்ணீரும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றமைக்கு, 1966 இல் மல்லிகை என்ற மாத இதழை ஆரம்பித்து நடத்தி 401 இதழ்களை தனிமனிதனாக இலங்கையில் எல்லாபாகங்களிலும் கிடைக்ககூடியதாக இருந்தமைக்கு அவருடைய முயற்சியே காரணம்.

இவருடைய ஆய்வு நூல்களை மேமன்கவி, லெ. முருகபூபதி மற்றும் திக்குவல்லை கமால் ஆகிய பிரபல எழுத்தாளர்கள் எழுதியது குறிப்பிடதக்கது.

இவ் நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் வீ.கோனேஸ்வரன், புழுதி அமைப்பினர்களான தி.கோபகன், லலிதகோபன், மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கந்தளாயில் பயறு செய்கை அறுவடை

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் சீனித்தொழிற்சாலை பகுதியில் முப்பது வருடங்களின் பின்னர் செய்கை பண்ணப்பட்ட பயறு செய்கையின் அறுவடை தற்போது நடைபெற்று வருகின்றது.

கந்தளாய் சீனித்தொழிற்சாலை பகுதியில் காடுகளாக கிடந்த பகுதிகளை துப்பரவு செய்து ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வீதம் மானிய அடிப்படையில் வழங்கி செய்கை பண்ணப்பட்ட பயறு அறுவடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் முப்பத்தைந்து ஏக்கர் நிலப்பரப்பில் பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திய ஜனாதிபதிக்கும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கும் விவசாயிகள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# சேவையிலிருந்து ஓய்வு

**(நிந்தவூர் குறூப் நிருபர்)**



வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அம்பாறை பிராந்திய பிரதம பொறியியலாளராக கடமையாற்றிய என்.ரீ.எம். சிராஜுடீன், தனது 26 வருட அரச சேவையிலிருந்து நேற்றுமுன்தினம் (08) ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த 1995 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பொறியியலாளராக இணைந்து கொண்ட இவர், பல்வேறு சேவைகளைப் புரிந்துள்ளார்.

இவர் கடமை புரிந்த காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் திட்ட முகாமையாளராகவும், மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சுக்களிலும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்புப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிய இவரால், பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தனது ஓய்வு நிலையைக் கருத்திற்கொண்டு கடந்த இரண்டு வருடங்களாக அம்பாறை பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளராகக் கடமையாற்றிய நிலையிலேயே சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ரஹ்மத் சமூகசேவை அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

**(கல்முனை விசேட நிருபர்)**




கல்முனை ரஹ்மத் சமூக சேவை அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது, மாவடிப் பள்ளி, இஸ்லாமாபாத் மற்றும் வீரமுனை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு நேற்று திங்கட்கிழமை கல்முனை மாநகர சபையின் பிரதி மேயரும் அமைப்பின் தலைவருமான ரஹ்மத் மன்சூரின் இல்லத்தில் நடைபெற்றது.

இதில் பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர் கலந்து கொண்டு குறித்த மாணவர்களுக்கான உபகரணப் பொதிகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நவ்பர் ஏ.பாவா, முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான பி.ரி. ஜமால்தீன், ஏ.சி.சமால்தீன் உள்ளிட்ட பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதற்கு முன்னர் அம்பாறை மாவட்டத்திலுள்ள வேறு சில பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ரஹ்மத் சமூக சேவை அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வமைப்பினால் வசதி குறைந்த குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதுடன், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் கோவில்களுக்கு நீர்த்தாங்கிகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏழு வீடுகள் கையளிப்பு



**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தில் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சமுர்த்தி பயனாளிகளான ஏழு குடும்பங்களுக்கு சௌபாக்கிய வீட்டுத் திட்டத்தின்கீழ் வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி. தலைமையில் திங்கட்கிழமை (08) இடம் பெற்றது.

இவ் வீடுகள் காக்காமுனை, நடுத்தீவு, பைசல் நகர், அண்ணல் நகர், ஆலங்கேணி மற்றும் கச்சக்கொடு தீவு போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளில் வறுமையிறுள்ள வீடற்றவர்களை தெரிவு செய்து வழங்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.றியாத், தலைமையக சமுர்த்தி முகாமையாளர் ஏ.முஹ்சீன் குறிஞ்சாக்கேணி சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஏ.எம். றிஸ்வி, மகளிர் உத்தியோகத்தர் என்.பானு மற்றும் சமுர்த்தி உத்தியோக்தர்கள் என பலர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

# இமாம்களுக்கு சுய தொழில் விழிப்புணர்வு செயலமர்வு

**(புதிய காத்தான்குடி விசேட நிருபர்)**

இமாம்கள் மஸ்ஜித் ஊதியம் இல்லாமல் கௌரவமாக இமாமத் செய்யும் நிலைமை உருவாக்கப்படுவதற்கு சுய தொழில் மூலம் விழிப்புணர்வை ஸம்ஸம் பவுண்டேசன், கதீப்மார் இமாம்கள் சம்மேளன உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு ஸம்ஸம் பவுண்டேசன் ஸ்தாபகத் தலைவர் அஷ்ஷெய்க் முப்தி யூசுப் ஹனிபா காத்தான்குடி போரம்ஸ் பவுண்டேசன் மையத்தில் இடம்பெற்ற செயலமர்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

இச்செயலமர்வில் 50 தெரிவு செய்யப்பட்ட இமாம்கள் கலந்து கொண்டனர்.

சுய தொழிலில் ஆர்வமுள்ள இமாம்கள் குறைந்த முதலீட்டில் கூடியவருமானம் பெறும் யுக்திகள், இலகுவான தொழிலுக்கு வழிகாட்டும் செயல் முறை காணொளி மூலம் விழிப்புணர்வு, சிறு கைத்தொழில் போன்ற தலைப்பில் செயலமர்வு இடம்பெற்றது.

இச்செயலமர்வு கதீப்மார் இமாம்கள் சம்மேளன ஸதாபக செயலாளர் மௌலவி எஸ்எம்எம் முஸ்தபா பலாஹியின் நெறிப்படுத்தலில் அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல் (IFB)

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | மனு காப்புறுதிப்பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|
| RDA/DC/WP/IR-GOSL/2021/18 | இராஜகிரிய - மாதினாகொட வீதியில் மாதினாகொட பாலத்தினை புனரமைத்தல் (வீ.அ.ச.அல்லாத) | 345.8 | 4.5 | 546 |

02. இக் கட்டுமான பணியில் பாலத்தின் தூண்களை மீள்புனரமைப்பு செய்தல் அணுகுமுறைகள் மற்றும் ஏனைய இதர பணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தரத்தில் **C1** அல்லது **C2 பாலக்கட்டுமானத்துறையில்** நிபுணத்துவத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **12.03.2021** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

(அ). மாகாணப் பணிப்பாளர் (மேல் மாகாணம்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
முதலாம் மாடி, "செத்சிரிபாய" பத்தரமுல்லை
தொலைபேசி : 011-2876600 பெக்ஸ் :- 011-2877226

(ஆ). பணிப்பாளர் (கட்டுமானம்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
மூன்றாம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர"
டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை
தொலைபேசி - 011-2864388 மற்றும் பெக்ஸ் :- 011-2861821

06. மனு தொடர்பான கூட்டம் **19.03.2021** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு மாகாணப் பணிப்பாளர் (மேல் மாகாணம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் மாடி, "செத்சிரிபாய" பத்தரமுல்லையில் இடம்பெறுவதுடன் தேவையேற்படின் வேலைத்தள பரீட்சிப்பும் இடம்பெறும்.

07. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **12.03.2021** ஆம் திகதியிலிருந்து **02.04.2021** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான "மகநெகும மஹமெதுர" 3 வது மாடியில் அமைந்துள்ள பணிப்பாளருக்கு (கட்டுமானம்) மீள் செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மீளச்செலுத்தப்படாத **ரூபா.37,800/-** (வட் வரிகளுக்கு உட்பட்ட) கட்டணத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

**அ. கணக்கின் பெயர் : பொது முகாமையாளர்- RDA**
**ஆ. கணக்கு இலக்கம் : 0000001943**
**இ. வங்கி : இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை**

மனுதாரர், **ரூபா.13,800/-** (வட் வரிகளுக்கு உட்பட்ட) கட்டணத்தை செலுத்திய அசல் / செல்லுபடியாகும் ரசீதை டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான "மகநெகும மஹமெதுர" 3 வது மாடியில் அமைந்துள்ள பணிப்பாளரிடம் (கட்டுமானம்) சமர்ப்பிக்க வேண்டும்.

1987 இலக்கம் 03 ஆம் ஒப்பந்தச் சட்டத்தின்படி, மனுவினைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

08. அனைத்து மனுக்களும், **29.08.2021** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதிப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. மனுக்கள் **01.08.2021** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

10. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **05.04.2021** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் **தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பணிப்பாளர், வழங்கல் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரியில் கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
**அமைச்சின் கொள்முதல் குழு,**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு, கொள்முதல் பிரிவு**
ஏழாம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு

# கேள்வி அறிவித்தல்

(தேசிய போட்டி கேள்வி கோரல்)

# மாதுருஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம்

கீழ்க்காணும் வேலைகளுக்கு 2021 மார்ச் 30ம் திகதி 11.00 மணி வரை வெலிக்கந்த, மாதுருஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம், திட்டப் பணிப்பாளரால், நீர்ப்பாசன அமைச்சு, மாதுரு ஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம் திட்டப் பெறுகைக் குழு (PPC) சார்பாக பெற்றுக்கொள்ளப்படும்.

| உருப்படி இல. | விபரம் | ஒப்பந்த இல. | விலைமனு ஆவணத்தின் ஓர் தொகுதிக்கான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | பதிவிற்குத் தேவைப்படும் CIDA/ ICTAD தரம், துறை |
|---|---|---|---|---|
| 01 | மாதுரு ஓய வலது கரை பிரதான கால்வாய் 7+000km முதல் 7+500km வரை நிர்மாணித்தல் (மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 12800 மில்லியன் VAT நீங்கலான ஆகும். ஒப்பந்த காலம் 301 நாட்களாகும். | MORBDP/Con/MC/2021-15 | ரூபா 25,000.00 | C4 & C3 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகால அமைப்பு |
| 02 | மாதுருஓய வலது கரை பிரதான கால்வாய் 7+500km முதல் 8+000km வரை நிர்மாணித்தல் (மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 165.00 மில்லியன் VAT நீங்கலாக மற்றும் ஒப்பந்த காலம் 336 நாட்கள் | MORBDP/Con/MC/2021-16 | ரூபா 30,000.00 | C3 & C2 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |
| 03 | மாதுருஓய வலது கரை பிரதான கால்வாய் 8+000km முதல் 8+500km வரை நிர்மாணித்தல் (மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 134 மில்லியன் VAT நீங்கலாக மற்றும் ஒப்பந்த காலம் 301 நாட்கள் | MORBDP/Con/MC/2021-17 | ரூபா 25,500.00 | C4 & C3 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |
| 04 | மாதுருஓய வலது கரை பிரதான கால்வாய் 8+500km முதல் 9+173km வரை நிர்மாணித்தல் (மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 171.00 மில்லியன் VAT நீங்கலாக மற்றும் ஒப்பந்த காலம் 336 நாட்கள் | MORBDP/Con/MC/2021-18 | ரூபா 31,000.00 | C3 & C2 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |
| 05 | மாதுருஓய வலது கரை பிரதான கால்வாய் 10+800km முதல் 11+483km வரை நிர்மாணித்தல் (மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 175.00 மில்லியன் VAT நீங்கலாக மற்றும் ஒப்பந்த காலம் 336 நாட்கள் | MORBDP/Con/MC/2021-19 | ரூபா 31,000.00 | C3 & C2 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |

மேற்படி அட்டவணையில் வேலைக்கு எதிராக குறிப்பிடப்படும் பதிவுத் திட்டத்தின் CIDA/ ICTAD இன் கீழ் தரம் மற்றும் துறையைக் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக் கோருவதற்கு தகைமை பெறுவர் விலைமனு மதிப்பீட்டிற்காக 2021 ஜனவரி 11ம் திகதிய 03/2020(i)/ 2020 ஒக்டோபர் 09ம் திகதிய சுற்றுநிருப இல. 03/2020 பொது நிதி சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் பொருந்தும்.

ஒவ்வொரு விலைமனுவிற்கான, மேலே தரப்பட்டுள்ள ஒரு தொகுதி விலைமனு ஆவணத்திற்காக ஓர் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், வேலை நாட்களில் 2021 மார்ச் 09 முதல் 2021 மார்ச் 29ம் திகதி 9.00 மணி முதல் 15.00 மணி வரை வெலிகந்த, நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம் - திட்டப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டு, ஓர் கம்பனி/ நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் ஓர் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்து உத்தேச மனுதாரர்களை கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

2021 மார்ச் 09 முதல் 2021 மார்ச் 29 வரை 9.00 முதல் 15.00 மணி வரை சாதாரண வேலை நாட்களில் வெலிகந்த, நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம், திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

நகல்களுடனான பொறியிடப்பட்ட விலைமனுக்களை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சமர்ப்பித்தற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பு வெலிகந்த நீர்ப்பாசன அமைச்சு மாதுருஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம் திட்டப் பணிப்பாளருக்கு நேரில் கையளிக்கலாம். விலைமனுக்கள் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இரண்டு (02) இற்கு மேற்படாதவர்கள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து திட்டப் பணிப்பாளர், மாதுருஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம், வெலிகந்த தொ.பே. 027-2259298 ஊடாக தொடர்பு கொள்ளவும்.

**திட்டப் பணிப்பாளர்**
**மாதுருஓய வலது கரை அபிவிருத்தித் திட்டம்**
**நீர்ப்பாசன அமைச்சு**
**வெலிகந்த**
**(தொ.பே. 027-2259298)**


**08.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 783,175**
**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 29,205,740.00**
**ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 30**
NLB NATIONAL LOTTERIES
www.nlb.lk



சீட்டிழுப்பு இலக்கம் 4420 உத்தியோகபூர்வ முடிவுகள்

**மஹஜன சம்பத**

திகதி: 08-03-2021

வெற்றி எழுத்து L வெற்றி இலக்கங்கள் 7 8 9 7 3 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 7 8 9 7 3 7 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 8 9 7 3 7 | ரூபா. 100,000/- | 14 |
| 3ஆம் பரிசு | 9 7 3 7 | ரூபா. 10,000/- | 137 |
| 4 ஆம் பரிசு | 7 3 7 | ரூபா. 1,000/- | 1,288 |
| 5ஆம் பரிசு | 3 7 | ரூபா. 100/- | 12,854 |
| 6ஆம் பரிசு | 7 | ரூபா. 20/- | 127,770 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 7 8 9 7 3 | ரூபா. 10,000/- | 14 |
| 8ஆம் பரிசு | 7 8 9 7 | ரூபா. 1,000/- | 142 |
| 9ஆம் பரிசு | 7 8 9 | ரூபா. 100/- | 1,365 |
| 10ஆம் பரிசு | 7 8 | ரூபா. 50/- | 12,690 |
| 11ஆம் பரிசு | L | ரூபா. 20/- | 51,112 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,974,040.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,161,528.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk



**தன நிதானய**
உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 08/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 457

E (ஆங்கில எழுத்து) 06 14 27 73 (வெற்றி இலக்கங்கள்)

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 102 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 225 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,413 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,659 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 91,436 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 17,172 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,664,000.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 118,009

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை
ரூ. 86,872,356.80

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD



**கொவிசெத**
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2715 சீட்டிழுப்பு திகதி 08 / 03 / 2021

ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 14 51 60 68

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 195 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 421 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,292 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,759 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 167,866 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30,674 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 216,214

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை
ரூ. 6,781,360.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 71,901,396.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk



**வாசனா சம்பத**
වාසනා සම්පත Vasana Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1670
திகதி 2021.03.08

வெற்றி இலக்கங்கள் V
அன்றும் இன்றும் வீரன்
வெற்றி இலக்கங்கள் 27 29 39 53

| Prize | Prize Structure | Prize Money | No. of Winners |
|---|---|---|---|
| 01 Prize | 4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 500,000/- | - |
| 02 Prize | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000/- | 03 |
| 03 Prize | 3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 1,000/- | 59 |
| 04 Prize | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 200/- | 186 |
| 05 Prize | 2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 100/- | 4,641 |
| 06 Prize | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40/- | 3,767 |
| 07 Prize | 1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின் | 20/- | 94,859 |
| 08 Prize | ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின் | 20/- | 21,597 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,340,100.00

அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு
ரூ. 26,926,873.90

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
ஐந்து இலட்சத்துக்கு அதிகமான பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் வரை மட்டுமே செல்லுபடியாகும்.



**Mega POWER** மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 784
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 08.03.2021

ஆங்கில எழுத்து E சுப்பர் இலக்கம் 08 வெற்றி இலக்கங்கள் 02 26 36 39

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 105 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 213 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,471 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,722 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 90,319 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 16,619 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 121,131,072.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 32,869,777.60

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,446,240.00

தேசிய லொத்தர் சபை
இணையம்: www.nlb.lk
ஐந்து இலட்சம் அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டு. மாவட்டத்தில் நிகழ்வுகள்



*(கல்லடி குறூப்நிருபர்)*

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில்அண்மையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. சுயாதீன அபிவிருத்திக்கான பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்றலில் பெண்கள் உரிமைகளை வலியறுத்தும் முகமாக மூன்று கோரிக்கைகளை முன்நிறுத்தி கவனயீர்ப்பு ஊர்வலமும் இடம்பெற்றது.

நாட்டில் 52 சதவீதம் பெண்கள் உள்ள நிலையில் பாராளுமன்றம் போன்ற உயர் தீர்மானங்களை மேற்கொள்ளும் சபையில் பெண்கள் பிரதிநித்துவம் வெறுமனே 5.3 வீதமாகவே உள்ளது.

இவற்றை மாற்றி, சட்டவாக்கல் சபையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்தல், தற்போது இராஜாங்க அமைச்சின் கீழுள்ள மகளிர் விவகார அமைச்சை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சாக உருவாக்கல், இவ்வாறு உருவாக்கப்படும் அமைச்சை பெண் ஒருவருக்கு வழங்குதல், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பெண்களுக்கான உரிமைகளை பாதுகாத்தல் போன்ற கோரிக்கைகளை முன்நிறுத்தி இந்த கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதனைத் தொடந்து கவனயீர்ப்பு நிகழ்வுக்கு வருகை தந்திருந்த உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரனிடம் மேற்குறித்த கோரிக்கைகள் அடங்கிய மகஜருமம் கையளிக்கப்பட்டது.



சுபீட்சத்தின் நோக்கிற்காக மக்கள் கேந்திர அறிவிப்பு நூல் வெளியீட்டு விழா நூலக சேவை சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நூலின் பிரதியை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்குவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ஏறாவூர்பற்று பிரதேச செயலாளரின் செயற்பாடுகள் கவலையளிக்கின்றன

*(பாலமுனை விசேட நிருபர்)*

ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட உறுகாமம் கிராம சேவகர் பிரிவின், பதுளை பிரதான வீதியில் அமைந்துள்ள தற்காலிக அனுமதிப்பத்திரக் காணிகள் நில அளவை செய்யப்பட்டு, உரிமையாளர்களுக்கு காணிகளின் உறுதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது. இதன்பொருட்டு குறித்த காணிகளை நில அளவை செய்வதற்காக ஏறாவூர் பற்று பிரதேச செயலாளரினால் நில அளவைத் திணைக்களத்திற்கு பெயர்ப் பட்டியலொன்றும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பிரதேச செயலாளர் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைத்துள்ளதாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டு, மாவட்ட தலைவருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.



ஏறாவூர் பற்று பிரதேச செயலாளரின் இச்செயற்பாடுகள் குறித்து (07) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட உறுகாமம் கிராம சேவகர் பிரிவு 185 பதுளை பிரதான வீதியில் உள்ள, காணிகளுக்கு முதற்கட்டமாக காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கென, அப்பிரதேச செயலாளரினால் நில அளவைத் திணைக்களத்திற்கு பெயர்ப் பட்டியலும் அனுப்பப்பட்டிருந்தது. குறித்த பட்டியலில் முஸ்லிம் நபர்களுடைய பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில், குறித்த பிரதேச செயலாளர் தற்பபோது மற்றுமொறு பெயர் பட்டியலை தயாரித்து நில அளவைத் திணைக்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த புதிய பட்டியலில் ஏற்கனவே பெயர் குறிப்பிடப்பட்டிருந்த முஸ்லிம் நபர்களுடைய பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இந்த செயற்பாடானது இனரீதியானதும் பக்கச்சார்பானதுமாகும்.

பொறுப்புடன் செயற்பட வேண்டிய அரச அதிகாரியான பிரதேச செயலாளர், ஒரு இனத்திற்கு சார்பாக பணியாற்றுவது கன்டிக்கத்தக்கதாகும். இந்தப் பிரதேச செயலாளரின் பக்கச் சார்பான நடவடிக்கைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கும் அவர் கொண்டு சென்றுள்ளார். பிரதேச செயலாளரினால் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத் தருமாறும், அவர் கோரியுள்ளார்.

பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட முஸ்லிம்களுடைய பெயர்களை இணைத்து, அவர்களுடைய காணிகளையும் நில அளவை செய்து காணி அனுமதிப்பத்திரம் வழங்குமாறும் உயர் அதிகாரிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

## கேள்விகளுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவர் கோருகிறார்.

| | வேலையின் பெயர் | மதிப்பீட்டுச் செலவு (ரூபா மில்லியன்) | நிர்மாணக் காலம் (நாட்கள்) | விலைமனு பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | அரலகன்விலயிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் 09ஆம் இலக்கக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 12.8 | 126 | 150,000.00 |
| 2. | அரலகன்விலயிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் 10ஆம் இலக்கக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 12.8 | 126 | 150,000.00 |
| 3. | அரலகன்விலயிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் 11ஆம் இலக்கக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 12.8 | 126 | 150,000.00 |
| 4. | அரலகன்விலயிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் 12ஆம் இலக்கக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 12.7 | 126 | 150,000.00 |
| 5. | அரலகன்விலயிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் 31ஆம் இலக்கக் கட்டிடத்தின் (பகுதி A) புதுப்பித்தல் வேலைகள் | 14.2 | 154 | 160,000.00 |
| 6. | அரலகன்விலயிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் 31ஆம் இலக்கக் கட்டிடத்தின் (பகுதி B) புதுப்பித்தல் வேலைகள் | 13.0 | 154 | 150,000.00 |

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (ii) மற்றும் 03/2020ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்பபடும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிடத் நிர்மாணத் துறைக்காக C6 அல்லது C5 தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு, பிரதேச செயலகம், கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 4), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4..00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 065-2229801 தொலைநகல்: 065-2229807
5. மீளளிக்கப்படாத கட்டணமாக நான்காயிரம் ரூபாவை (ரூபா 4000.00) 2021-03-09ஆம் திகதி முதல் 2021-03-22ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு, பிரதேச செயலகம், (வலயம் 4) பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2021-03-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடத் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்லை, செத்சிறிபாய, கட்டிடங்கள் திணைக்களத்தின் 2ம் மாடியின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் தெரிவுசெய்யட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது ஏதாவது நீடிக்கப்பட்ட நாள் முதல் 91 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு
   * 2021 ஜூலை 19ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2 வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட

   கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கேள்விகள் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ''செத்சிறிபாய'' வளவுக்குள் வந்துவிடுமாறு கேள்விதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பொறி. எம்.எச்.எம். இஸ்மாயில்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**



## வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

(துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு)

## வெற்றிடங்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரஜைகளிடமிருந்து, பின்வரும் தகைமைகளை மற்றும் முன் அனுபவங்களைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. பொது முகாமையாளர் - HM 2-3 (வெற்றிடம் 01)

**தகைமைகள்** :

**வெளிவாரி பரீட்சார்த்திகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வணிக நிர்வாகம், வணிக மேலாண்மை, பொது நிர்வாகம், சந்தைப்படுத்தல் மேலாண்மை, வர்த்தகம், பொறியியல், அறிவியல் அல்லது கணிதத்தில் இளமாணிப் பட்டமொன்று

அத்துடன்

தொடர்புடைய துறையில் முதுகலை பட்டம் அல்லது கடல்சார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தின் பெருநிறுவன உறுப்பினராக இருத்தல்

அத்துடன்

நிர்வாக மட்டத்தில் குறைந்தது 18 வருடகால சேவை அனுபவத்துடன் உரிய துறையில் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது பிரசித்தமான வர்த்தகத் தாபனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிநிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவை.

**உள்வாரி பரீட்சார்த்திகள்**

உரிய துறையில் கனிஷ்ட முகாமைத்துவ பதவி நிலையில் (HM 2-2) அல்லது அதனிலுங்கூடிய பதவியில் குறைந்தது ஐந்து (03) வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத்திட்டம்** : HM 2-3 – 2016 : ரூபா. (98,215 – 12x2700 – 130,615). திருத்தப்பட்ட சம்பளத்திற்கு அமைவாக தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தியானவர் (HM 2:3) எனும் வகுதியின் ஆரம்ப சம்பளம் ரூபா. 98,215/- படிநிலையில் அமர்த்தப்படுவார்.

இச் சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும்.

**வயதெல்லை** : 35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் நடாத்தப்படும்

**இதர நன்மைகள்** :

1. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F.) / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.)
2. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்பீடு
3. முழுமையான தனிநபர் மற்றும் விபத்துக் காப்பீடு
4. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளை காசாக்குதல்
5. ஏற்புடையதான வருடாந்த மிகையூதியம்
6. சலுகை நியதிகளின் பேரில் வீடமைப்புக் கடன்கள்
7. ஏனைய அலுவலர் கடன்கள்
8. MSD சுற்றறிக்கை எண்: 5/2017 இன் படி தொழில்முறை கொடுப்பனவு
9. PED சுற்றறிக்கை எண்: 1/2015 (i) இன் படி போக்குவரத்து சேவை வழங்கப்படும்

**பொது அறிவுறுத்தல்கள்** :

- பிறப்புச் சான்றிதழ், உரிய ஏனைய சான்றிதழ்கள் மற்றும் உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து உண்மைப் பிரதியென விண்ணப்பதாரியினால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி / தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும் பதிவுத் தபால் மூலம் அல்லது hr@cscl.lk எனும் மின்னஞ்சல் மூலமாக **2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுக.
- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களிற்கூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்க.

**மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.**

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்,**
**இல : 27, MICH கட்டடம்,**
**சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி)**
**கொழும்பு 01**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : 071 4452898**

# இலங்கை திரிபோஷ லிமிட்டட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 150,000 எண்ணிக்கையான அச்சடிக்கப்பட்ட நெளிவுள்ள பெட்டிகளை (Corrugated Boxes) (750g Master Packing) வழங்குதல் 2021/2022**

### விலைமனு இல. SLTL/MKT/02/2021

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 150,000 எண்ணிக்கையான அச்சடிக்கப்பட்ட நெளிவுள்ள பெட்டிகளை (750g Master Packing) ஒப்பந்தம் கையளிக்கப்படும் நாள் முதல் 2021/2022 வருடத்தின் ஒரு வருட காலத்திற்கு நடைமுறையாகும் வகையில் வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்களத்தின் (மேல்நிலை) பெறுகைக் குழுத்தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: +94-0112236588) மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பெறுகையில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ள இலங்கைச் சந்தைக்கு அச்சடிக்கப்பட்ட நெளிவுள்ள பெட்டிகளை வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது ஏக நியமன முகவர்கள்/ உற்பத்தியாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வெளிநாட்டு முதன்மையாளர்களினால் நியமன முகவர்கள்/ அங்கீகரிக்கப்பட்ட இலங்கை முகவர்களாக நியமிக்கப்படாதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சகிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,700.00 ரூபா ரொக்கப் பணத்தை ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்வதன் பேரில் 2021-03-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2021-03-30ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2021-03-30ஆம் திகதி முதல் 2021-06-29ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 225,000.00 இலங்கை ரூபா தொகைக்கான 2021-03-30ஆம் திகதி முதல் 2021-07-27ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2021-03-30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**

---

எனது இலக்கம்:- B/ACQ/RDM/2018/21
உமது இலக்கம்:- 4-3/19/2015/IR/102

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி கையகப்படுத்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தங்களுக்கமைய காணி கையகப்படுத்தல் சட்டம் (460வது அத்தியாயம்) 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்**

**மொறாண நீர்த்தேக்க திட்டத்திற்காக காணி கைப்பற்றிக்கொள்ளல்.**

மேற்கூறியவிடயம் தொடர்பாக அரசு கைப்பற்றவுள்ள காணித் துண்டுகளுக்கான உரிமை மற்றும் நட்டஈடு தொடர்பான பரிசீலனை 22.02.2021ஆம் திகதி ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தில் இடம் பெறும். மேலதிக விபரங்களுக்கு 2209/9 இலக்க மற்றும் 4/01/2021 திகதியிலான அரச அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | ஊவா |
| மாவட்டம் | : | பதுளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | ரிதிமாலியத்த |
| வரைபட இலக்கம் | : | வரைபட இலக்கம் 710021, வலய இலக்கம் 05, பத்திர இலக்கம் 02. |
| | | வரைபட இலக்கம் 710021, வலய இலக்கம் 08, பத்திர இலக்கம் 02. |
| | | வரைபட இலக்கம் 58, மேலதிக வரைபட இலக்கம் 445, பத்திர இலக்கம் 374 |
| | | வரைபட இலக்கம் 58, மேலதிக இலக்கம் 55, பத்திர இலக்கம் 370 |
| | | வரைபட இலக்கம் 58, மேலதிக இலக்கம் 56, பத்திர இலக்கம் 371 |
| | | வரைபட இலக்கம் 58, மேலதிக இலக்கம் 57, பத்திர இலக்கம் 372 |
| | | வரைபட இலக்கம் 58, மேலதிக இலக்கம் 58, பத்திர இலக்கம் 373 |
| | | வரைபட இலக்கம் 72, மேலதிக வரைபட இலக்கம் 289, பத்திர இலக்கம் 170. |
| | | வரைபட இலக்கம் 72, மேலதிக வரைபட இலக்கம் 290, பத்திர இலக்கம் 171 |
| | | வரைபட இலக்கம் 710009, வலய இலக்கம் 04, பத்திர இலக்கம் 03. |
| | | வரைபட இலக்கம் 710011, வலய இலக்கம் 04, பத்திர இலக்கம் 04. |
| | | வரைபட இலக்கம் 72, மேலதிக வரைபட இலக்கம் 287, பத்திர இலக்கம் 168 |
| | | வரைபட இலக்கம் 710021, வலய இலக்கம் 09, பத்திர இலக்கம் 02. |

காணித் துண்டுகளின் எண்ணிக்கை : 357

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**டி.எம்.எல்.எச். திசாநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**ரிதிமாலியத்த**
**2021.02. மாதம் 25ஆம் திகதி**
**ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தில்.**

---

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

**N - 72**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 31.03.2021ஆந் திகதி பி.ப. 2 மணி வரையாகும். விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்த விலைமனுக்கள் திறக்கப்படும்.

**01. White Printing Paper - 17" - 70 GSM**

| | | |
|---|---|---|
| Material | : | White Printing Paper |
| Quality | : | Wood Free & Surface Sized |
| Substance | : | 70 ± 2.5% GSM |
| Width | : | 17" |
| Quantity Required | : | 300 ± 10% Metric Tons |
| Bid Reference No. | : | S.I. 2021/25 |
| Bid Fee | : | Rs. 13,000.00 |

**02. White Printing Paper -35" - 70 GSM**

| | | |
|---|---|---|
| Material | : | White Printing Paper |
| Quality | : | Wood Free & Surface Sized |
| Substance | : | 70 ± 2.5% GSM |
| Width | : | 35" |
| Quantity Required | : | 100 ± 10% Metric Tons |
| Bid Reference No. | : | S.I. 2021/28 |
| Bid Fee | : | Rs. 5,500.00 |

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்துடன் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி. ப. 2 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத்திணைக்கள வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி. ப. 3 மணி வரை உரிய விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்

மேலதிக விபரங்களை கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்காணி லியனகே**
**பொருட் கொள்வனவுக் குழுத் தலைவர்,**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**

**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளங்கள்:** **www.documents.gov.lk**
**www.npa.gov.lk**

03.03.2021

---

# விலை கோரலுக்கான அழைப்பு

## மேல் மாகாண சபை

## பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிராந்தியப் பொறியியலாளரின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(ii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியனுக்குக் குறைவாக இருப்பதனால் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
   II. 03/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், ''அரசுரிமை தொழில்முயற்சி (SOE) விலைகளைக் கோருகையில் 15 வீதமான முன்னுரிமை வழங்கப்படும்.''
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவர்கள் அல்லது ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தங்களை கைவிட்டவர்களாகவும் மற்றும் பூர்த்தி செய்யதாதவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் செல்லுபடியாகும் CIDA பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | ஒப்பந்தத்தின் இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை / விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் | விலைமனு ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
| 1 | WP/DB/ CON/21/83 | லுனாவ – மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் எல்லைச் சுவர் மற்றும் படலையின் மேம்பாட்டு வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு 25,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை, இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை, இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517 |
| 2 | WP/DB/ CON/21/84 | கொரலவெல்ல ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகின் திருத்தவேலைகள் மற்றும் நிர்மாணத்தின் தெரிவு செய்யப்பட்ட வேலைகள் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு 10,000.00 | | |
| 3 | WP/DB/ CON/21/85 | மில்லேவயிலுள்ள தாய் மற்றும் சேய் சுகாதார சிகிச்சையகத்தின் புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 3,000.00 | விலைமனுப் பிணை முறி **100,000.00** (105 நாட்கள்) அல்லது ரொக்கப் பண வைப்பு 50,000.00 ரூபா | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹொரண, பல்லபிட்டிய, ஹொரண. தொலைபேசி இல. 034-2261019 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹொரண, பல்லபிட்டிய, ஹொரண. தொலைபேசி இல. 034-2261019 |
| 4 | WP/DB/ CON/21/86 | இங்கிரிய - ஹல்வத்துர தமிழ் வித்தியாலத்தில் இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | ஆம் | C5 மற்றும் C4 | 5,000.00 | விலைமனுப் பிணை முறி 350,000.00 (119 நாட்கள்) | | பணிப்பாளர் (கட்டிடங்கள்), பொறியியல் அமைப்பு (மே.மா), 5ஆம் தளம், **#204,** டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொலைபேசி: 011-2092525 |
| 5 | WP/DB/ CON/21/87 | பாணந்துறை - ஆதார வைத்தியசாலை தாதியர் பொறுப்பாளர் (Nursing – in –Charge) ஓய்வு அறையை நிர்மாணித்தல் | இல்லை | C9 மற்றும் C8 | 1000.00 | ரொக்கப் பண வைப்பு 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பாணந்துறை, ஸ்ரீ மகா விகார வீதி, பாணந்துறை. தொலைபேசி இல. 038-2234774 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பாணந்துறை, ஸ்ரீ மகா விகார வீதி, பாணந்துறை. தொலைபேசி இல. 038-2234774 |
| 6 | WP/DB/ CON/21/88 | மத்துகம - இஹல ஹேவாஸ்ஸ க. வித்தியாலயத்தில் 40'x20' புதிய ஒற்றை மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | இல்லை | C8 மற்றும் C7 | 2000.00 | ரொக்கப் பண வைப்பு 25,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. ஆனந்த சிராஸ்தலாய, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. ஆனந்த சிராஸ்தலாய, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082 |
| 7 | WP/DB/ CON/21/89 | உடுபில - மருத்துவ பொறுப்பதிகாரி (MOIC) விடுதியின் புதுப்பித்தல் வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுப்பில வீதி, மாகோல, பியகம. தொலைபேசி இல. 0112-963524 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுப்பில வீதி, மாகோல, பியகம. தொலைபேசி இல. 0112-963524 |
| 8 | WP/DB/ CON/21/90 | வத்தளை - டொன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு 25,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, B/25/1, மகுல்பொக்குண வீதி, ராகம. தொலைபேசி இல. 0112952126 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, B/25/1, மகுல்பொக்குண வீதி, ராகம. தொலைபேசி இல. 0112952126 |
| 9 | WP/DB/ CON/21/91 | பமுனுகம - மாவட்ட வைத்தியசாலையின் அத்தியாவசிய திருத்தவேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு 10,000.00 | | |
| 10 | WP/DB/ CON/21/92 | ஜா-எல - சுகாதார மருத்துவ அதிகாரி (MOH) அலுவலகத்தின் புதுப்பித்தல் வேலைகள் | ஆம் | C7 மற்றும் C6 | 3,000.00 | விலைமனுப் பிணை முறி **100,000.00** (105 நாட்கள்) அல்லது ரொக்கப் பண வைப்பு 50,000.00 ரூபா | | |

04. கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
05. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைகூறுநர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் அந்த அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. மீளளிக்கப்படாத கட்டணத்தை 2021-03-08ஆம் திகதி முதல் 2021-03-29ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாணம் - மாகாண சபை கட்டிடப் பணிப்பாளருக்குச் (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் (மே.மா) அவர்களுக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை கட்டிடப் பணிப்பாளர் / இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2021-03-30ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
08. சகல விலைக் கோரல்களுடனும் (மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) மீளளிக்கப்படும் பண வைப்பு பற்றுச்சீட்டு / விலைக்கோரல் பிணை முறியை இணைத்தல் வேண்டும்.
09. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 04ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**தலைமை,**
**பெறுகைப் பிரிவு,**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**

**01-02-2021**
**தொலைபேசி: 0112-092504**
**தொலைநகல்: 0112-092505**

# சிறு விளம்பரம்

## வேலைவாய்ப்பு

318

### வெற்றிடங்கள்
### டிரைவர்கள்

சியம்லாகொட, பொல்கஸ் ஓவிட்ட போக்குவரத்து சேவை வழங்கும் நிறுவனத்திற்கு வயது 25-45 இற்கு இடைப்பட்ட சாதாரண சிங்கள அறிவுள்ள சாரதி மற்றும் சாரதி உதவியாளர் தேவை. விபரங்களுக்கு அழையுங்கள். 0776125998, 0706125998

018507

## காணி/தோட்டம்

641

### வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

32, செப்பல் லேன், கொழும்பு02, வீடு குத்தகைக்கு உண்டு. 077 1 222 26 6

018392

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**லூபோர்துன் இன்வெஸ்ட்மன்ட் (பிறைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: **PV 106362**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: **17.06.2015**

பதிவு முகவரி:
**20, டின்ஸ்டோன் பிளேஸ், கொழும்பு - 03**

**www.agsarma.com**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

ஒப்பந்த இலக்கம்: **P&D/UAADPIII/GOSL/BW/2020/01**

### அம்பாறை மாவட்டத்தின் சீராக்கப்படாத பிரதேசங்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் - படிநிலை III செயற்றிட்டம்

### 06 எண்ணிக்கையான நீர்த்தாங்கிக் கோபுரங்கள், பொறுப்பாளர் கட்டிடம் என்பவற்றின் மிகுதி நிர்மாண வேலைகள் மற்றும் துணை வேலைகளுக்கான விலைமனு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. அம்பாறை மாவட்டத்தின் சீராக்கப்படாத பிரதேசங்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் - படிநிலை III செயற்றிட்டம் மற்றும் 06 எண்ணிக்கையான நீர்த்தாங்கிக் கோபுரங்கள், பொறுப்பாளர் கட்டிடம் என்பவற்றின் மிகுதி நிர்மாண வேலைகள் மற்றும் துணை வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (தேநீவவச) சார்பில் இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, இல. 35, ''லக்திவமெதுர'' நீர் வழங்கல் அமைச்சின், அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக இடம்பெறும்.
3. மாற்றுவழியிலான விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறைக்கான C2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. இந்த விலைக்கோரலுக்கான மதிப்பீட்டுக் கிரயம் 336 மில்லியன் ரூபாக்கள் என்பதுடன் ஒப்பந்தக் காலம் 548 நாட்களாகும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை, இரத்மலானை, தேநீவவச (கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள்) உதவிப் பொது முகாமையாளரிடமிருந்து 011-2635885 அல்லது 011-2638999 நீடிப்பு 1750 அல்லது தொலைநகல் 011-2635885 இலக்கங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இலங்கை, இரத்மலானை, தேநீவவச (கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள்) உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 60,000.00 ரூபாவை ஏற்புடைய பெசேவ சகிதம் ரொக்கப் பணமாக 2021-03-10ஆம் திகதி முதல் 2021-04-06ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் செலுத்துவதன் பேரில் இலங்கை, இரத்மலானை, தேநீவவச (கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள்) உதவிப் பொது முகாமையாளருக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
8. விலைமனுக்களை 2021-04-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, நீர் வழங்கல் அமைச்சு, இல. 35, ''லக்திவ மெதுர'', புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல, இலங்கை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. சகல விலைமனுக்களுடனும் 5,000,000.00 ரூபாவுக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது 2021-09-04ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலை மனுக்கோரல்

### இரத்து செய்வதற்கான அறிவிப்பு

**ஊர்கொடவத்தை - அம்பத்தளை B 435 வீதியில் 3/1 இலக்க பாலத்தினை அகலப்படுத்தல்**
**(ஒப்பந்த இலக்கம் RDA/DC/WP/IR-GOSL/2021/05)**

01. RDA/DC/WP/IR-GOSL/2021/05 ஒப்பந்த இலக்கத்தின் **2021.02.10** மற்றும் **2021.03.01** பிரசுரமான "ஊர்கொடவத்தை - அம்பத்தளை B 435 வீதியில் 3/1 இலக்க பாலத்தினை அகலப்படுத்தல்" மனுக்கோரலானது இரத்து செய்யப்பட்டுள்ளது.

02. அவ் மனுக்கோரல் விளம்பரத்தில் வெளியான ஏனைய செயற்திட்டங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**01 ஆம் மாடி, 'மகநெகும மஹமெதுர', 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**

---

## விலைமனுக் கோரல் (IFB)

### பாதுகாப்பு அமைச்சு

**இலங்கை விமானப்படை உபயோகித்த BELL 206 JET RANGER B3 நான்கு (04) ட்ரேனர் ஹெலிகொப்டர் விமானங்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்**
**(விலைமனுக்கோரலுக்கான கால எல்லை நீடிப்பு)**

1. இவ்விளம்பரமானது 2020 டிசம்பர் 13ஆம் திகதி சிலுமின, தினகரன் மற்றும் சன்டே ஒப்சேவர் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகைக்கான அறிவித்தல் விளம்பரம் தொடர்பானதாகும். இது தொடர்பிலான விலைமனுக்கோரலில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

| பெறுகைக்கான இல | விபரம் | விலைமனுக்கோரலுக்கான திகதி மற்றும் நேரம் | |
|---|---|---|---|
| | | முந்தைய திகதி | திருத்தம் |
| AHQ/20/FS/BEL/1064 | உபயோகப்படுத்திய BELL 206 JET RANGER B3 நான்கு (04) ட்ரேனர் ஹெலிகொப்டர் விமானங்களை கொள்வனவு செய்தல் | 2021 மார்ச் 16, 11.00 மணி | 2021 ஏப்ரல் 21, 11.00 மணி |

2. விலைமனுக்கள் **20.04.2021** ஆம் திகதி வரை வழங்கப்படும்.
3. மேலே முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விளம்பர அறிவிப்பில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை.
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள **பிரதான கொள்முதல் அதிகாரி (கொள்முதல் பிரிவு) தொலைப்பேசி : 011-2325468, 011-2441044, நீட்டிப்பு : 23550** அல்லது **கொள்முதல் அதிகாரி டென்டர் (தொலைப்பேசி : 011-2441553** அல்லது **011-2441044 நீட்டிப்பு : 23569 பெக்ஸ் : 011-2441553** மற்றும் **011-2347694)** அழைக்கவும்.

**இலங்கை விமானப்படை தலைமையகம்**
**த.பெ இலக்கம் 1592**
**கொழும்பு 02.**

**விமானப்படை தளபதி**

---

## மேல் மாகாண சபை

## பொறியியல் நிறுவனம்

## உள்ளக ஆலோசகர்களுக்கான ஆர்வத்தை வெளிப்படுத்துதல்

கீழ்க்காணும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மேல் மாகாண சபையினால் வைத்தியசாலைகளின் கட்டிட சேவைகள் மற்றும் விசேட கட்டிடங்களின் முகாமைத்துவத்திற்காக உள்ளக ஆலோசகர்களிடம் இருந்து ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

01. மத்திய ஏ/சீ அமைப்புக்கள்
02. எலிவேட்டர் அமைப்புக்கள்
03. தீ பாதுகாப்பு அமைப்புக்கள்
04. சாக்கடை சுத்திகரிப்பு தொகுதிகள் மற்றும் நீர்க்குழாய் திருத்தம்
05. மருத்துவ காஸ் அமைப்புக்கள்

### தேவைப்படும் தகைமைகள்

(1) பட்டய தகைமையைப் பெற்றபின்பு பட்டய இயந்திரவியல் பொறியியலாளராக குறைந்தபட்சம் 10 வருட அனுபவம்

(2) கட்டிட சேவையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அத்துடன் ஆகக் குறைந்தது 5 வருட பட்டத் தகைமை அனுபவம் மேலே குறிப்பிடப்படும் கட்டிட சேவைகள் அமைப்பின் வடிவமைப்பு மற்றும் பராமரித்தல்

மேலே குறிப்பிடப்படும் சேவைகளை வழங்குவதற்கு தேவைப்படும் தகைமைகளை கொண்டிருப்பவர்கள் சகல தகவல்களையும் உள்ளடக்கிய முழுமையான சுயதரவு (CV) உடனான விண்ணப்பங்களை ஆர்வமுள்ள ஆலோசகர்கள் அனுப்புதல் வேண்டும்.

தகைமையுள்ள விண்ணப்பதாரர்களின் பட்டியலுக்கு/மேலே தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையிலான விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை சேவைகளுக்கான "ஆலோசனைகளைக் கோருதல்" மற்றும் நியதிக் குறிப்புகள்" உள்ளடக்கிய முழுமையான தொகுதி விலைமனு ஆவணம் அனுப்பப்படும்.

ஒருவருட காலத்திற்கு ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதி பிரதான செயலாளர் (பொறியியல்) கீழ் ஓர் ஆலோசகர் நியமிக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டின் பின்னர் திறமையான பொறுப்பான ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்படுபவர் நியமிக்கப்படும் ஆலோசகர் தேவைப்படும் சேவையின் அடிப்படையில் கடமையாற்றுதல் வேண்டும்.

தேவைப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள தகைமையான தொழில்சார்ந்தோர் அவர்களது கல்வி கற்கை மற்றும் தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்தை குறிப்பிட்டு அவர்களது முழுமையான சுயதரவு (CV) உடனான விண்ணப்பமொன்றை தாங்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உள்ளக ஆலோசகர்களுக்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல்" என்ற தலைப்பை குறிப்பிட்டு, 2021.03.22ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) பெறுகைக்குழு,**
**பொறியியல் நிறுவனம்,**
**5ஆம் மாடி, 204,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.**
**08.03.2021**

**தொ.பே - 0112092504**
**பெக்ஸ் - 0112092505.**

---

### பெயர் மாற்றம்

வெலம்பொட, வட்டதெனிய, அப்பல்லகொட தெற்கு, இல.219 ஐச் சேர்ந்த சுப்ரமணியம் ராணி ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை மொஹம்மது காஸிம் சுமையா என மாற்றம் செய்கிறேன். இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

**மொஹம்மது காஸிம் சுமையா**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனியின் பெயர்:
**வெசல்ஸ் குளோபல் (பிவீடி) எல்டிடீ**

பதிவிலக்கம்: **PV 00233509**

பதிவு முகவரி:
**இல.112/1, ஸ்ரீ விமல ரோடு, வாலான, பாணந்துறை**

கூட்டிணைப்புத் திகதி:
**23 ஜனவரி 2021**

**கம்பனிச் செயலாளர்**

---

### பிழை திருத்தம்

வர்த்தக அமைச்சு

**கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்**

வாடகை அடிப்படையில் அலுவலக வளாகங்கள் மற்றும் களஞ்சியங்களை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்

மேற்படி தலைப்பில் கடந்த 2021.03.07ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை 22ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் அட்டவணையின் **தொ.இல.07 மாத்தறை சதொச, இல-16, குட்செட் வீதி, மாத்தறை** என்று திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**கூட்டுறவுமொத்த விற்பனை தாபனம்,**
**இல-27, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02**

---

### காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: ஏச்டிஎஸ்/காணி/10/எப்/1/5

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 19.02.2021 ஆம் திகதிய 2215/46 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தென் |
| மாவட்டம் | : ஹம்பாந்தோட்டை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : ஹம்பாந்தோட்டை |
| சிறு பிரிவு | : மகம்பத்துவை |
| கிராம சேவகர் பிரிவு | : இல.91 - கலியபுர, இல.95 - கொன்னொருவ |
| கிராமம் | : கொன்னொருவ மற்றும் கலியபுர |
| வரைபட இல. | : எப்.ரீ.பீ. 4/278/645 |
| துண்டு இல. | : ௬3352 - ௬3430 (துண்டுகள் 61) |
| விஸ்தீரணம் | : 3.7214 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**ஹம்பாந்தோட்டை.**

**பிரதேச செயலகம்,**
**ஹம்பாந்தோட்டை.**
**03.03.2021.**

---

## மீள் விலைமனுக்களுக்கான அழைப்பு

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத உணவுகளை வழங்கல் - 2021 திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பின்வரும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத உணவுகளை வழங்குவதற்காக, கிழக்கு மாகாணத்திலிருந்து தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| தொ. இல | நிறுவனத்தின் பெயர் | மீளளிக்கும் வைப்புத் தொகை (ரூபா) | சொத்துச் சான்றிதழின் பெறுமதி |
|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை, கிண்ணியா | 35,000 | 100,000 |
| 02 | ஆதார வைத்தியசாலை, மூதூர் | 35,000 | 100,000 |
| 03 | ஆதார வைத்தியசாலை, புல்மோட்டை | 6,000 | 75,000 |
| 04 | பிரதேச வைத்தியசாலை, கோமரங்கடவல | 8,000 | 75,000 |
| 05 | பிரதேச வைத்தியசாலை, சேருவில | 6,000 | 75,000 |
| 06 | பிரதேச வைத்தியசாலை, கிளிவெட்டி | 9,000 | 75,000 |
| 07 | பிரதேச வைத்தியசாலை, சேருநுவர | 6,000 | 75,000 |
| 08 | பிரதேச வைத்தியசாலை, நிலாவெளி | 5,000 | 75,000 |
| 09 | பிரதேச வைத்தியசாலை, தம்பலகாமம் | 4,000 | 75,000 |
| 10 | பிரதேச வைத்தியசாலை, தோப்பூர் | 7,000 | 75,000 |

01. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக இலவசமாக 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.

02. திருகோணமலை நீதிமன்ற வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்தில் 10.03.2021 ஆம் திகதியிலிருந்து 25.03.2021 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையும் தலா ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்தி விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்கோரும் ஆவணங்களை கொள்வனவு செய்யும் பொழுது பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் G 170 படிவத்தில் மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்துச் சான்றிதழுக்கான தொகைக்காக, உரித்தான வைத்தியசாலை அமைந்திருக்குமிடத்து அல்லது ஒப்பந்தக்காரர் வசிக்குமிடத்து பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ். இச்சான்றிதழானது வழங்கப்படும் திகதியில் இருந்து 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஆ. விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக உரிய நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் கோரிப்பெறலாம்

இ. வியாபார பதிவுச் சான்றிதழ்

03. விலைமனுக்கள் 26.03.2021ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை என்று முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின்/ உறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான வைத்தியசாலையின் பெயர் தனித்தனியாக குறிப்பிடப்படல் வேண்டும்.

முடிவுத்திகதியன்று உடனடியாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் மாநாட்டு மண்டபத்தில் கூறுவிலைதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

04. மேலதிக விபரங்களை திருகோணமலை, நீதிமன்ற வீதி 120ஆம் இலக்கத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலும் மற்றும் 026-2220103 என்ற தொலைபேசி எண்ணூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

06. விலைமனுக்களை வழங்குவதற்கான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமை பெறுகைக்குழுவுக்கே உரியது.

**தலைவர்**
**திணைக்களப் பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்**
**120, நீதிமன்ற வீதி,**
**திருகோணமலை.**

# நகர்வலம்



### கொரோனா காலத்திலும்

# நாட்டில் பாரிய அபிவிருத்திகள் தடையின்றி முன்னெடுப்பு

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் கொவிட் தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் மட்டும் இருந்துவிடாமல் நாட்டில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தற்போது முன்னெடுத்து வருவதாக பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ ஞாயிற்றுக்கிழமை (7) தெரிவித்தார்.

வென்னப்புவ பிரதேச சபை பிரிவுக்கு உட்பட்ட தங்கொட்டுவ, எட்டியாவெல தும்மலகொட்டுவ கிராமிய வீதியை அபிவிருத்தி செய்வதற்கான அடிக்கல் நடும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பின்னர் அங்கு இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.



வென்னப்புவ பிரதேச சபையின் உறுப்பினர்களான ஜுட் உடுகம்பொல, அமல் சுரங்க மற்றும் தீப்த நாமல் பெர்ணான்டோ ஆகியோர் உட்பட பிரதேசவாசிகளும் இதில் கலந்து கொண்டனர்.

மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் 270 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இராஜாங்க அமைச்சர் அருன்திக பெர்ணான்டோ அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதும் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான தொழில் வழங்கும் திட்டமான ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டது. அது மட்டுமல்லாமல் வேலையற்ற 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களையும் எமது அரசாங்கமே வழங்கியுள்ளது. ஜனாதிபதி அவர்கள் நாட்டில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார். எமது அரசாங்கம் பலம் மிக்கது. நாம் விமர்சனங்களுக்கு அச்சம் அடைவதில்லை. நாட்டில் ஐயாயிரம் இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வென்னப்புவ தேர்தல் தொகுதியில் மாத்திரம் ஏழு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எமது அரசாங்கம் வழங்கியுள்ளது. சீரான பஸ் போக்குவரத்து சேவை வசதிகளையும் கிராமப் புற மக்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமப் புற அபிவிருத்திகளை மாத்திரமின்றி நகரப் பிரதேசங்களையும் நாம் அபிவிருத்தி செய்வோம். மக்களின் குரலுக்கு நாம் செவி சாய்ப்போம். தேர்தல் காலத்தில் எமது கட்சி வழங்கியுள்ள அபிவிருத்திக்கான வாக்குகளை நாம் நிறைவேற்றி வைப்போம். இதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை என்றார்.

### ஹபரன நகரை

# சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்ய ஆளுநர் ஆலோசனை

**திறப்பனை தினகரன் நிருபர்**

ஹபரன நகரை உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் ஒரு இடமாக மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது ஒரு முன்மாதிரி சுற்றுலா நகரமாக அபிவிருத்தி காணப்படவுள்ளது.

வட மத்திய மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் இத் திட்டத்தை முன் கொண்டு செல்ல யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. நகரத்தில் பொருத்தமில்லாது அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுதல், நகரை அழகு படுத்தல், சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் வீதி அமைப்பை சீர்படுத்தல், அடிப்படை சுகாதார வசதிகளை மேலும் விரிவு படுத்துதல், தற்போதுள்ள ஹோட்டல்களின் வசதியை மேலும் அதிகரித்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் இதன் ஊடாக மேற் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கெக்கிராவ பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாகாண சபை ஆகியன இணைந்து இவ் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

# வட மத்திய மாகாணத்தில் மின்வெட்டு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மின் உப நிலையத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் தொழில் நுட்ப கோளாறு காரணமாக நேற்று முன்தினம் வட மத்திய மாகாணத்தின் சில பிரதேசங்களில் ஏற்பட்ட மின் தடை சுமார் 02 மணித்தியாலங்களில் வழமைக்கு திரும்பியதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். மின்சார சபை எடுத்த துரித நடவடிக்கையால் சுமார் 02 மணி நேரத்தின் பின் வழமைக்கு கொண்டுவர முடிந்ததாக மின்சார சபை தெரிவிக்கின்றது.

அநுராதபுரம், ஹபரன, பொலன்னறுவை, வவுனியா, வாழைச்சேனை ஆகிய உப மின் நிலையம் அமைந்துள்ள பிரதேசங்களில் மின் தடைப்பட்டிருந்ததாக தெரிய வருகின்றது.

### முஸ்லிம்கள் வீண் பேச்சுக்களை விடுத்து

# அரசாங்கத்தின் மூலம் எமது சமூகத்துக்கு பெற வேண்டியவை பற்றி சிந்திப்பது அவசியம்

### பிரதமரின் இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார்

**(மாவத்தகம நிருபர்)**

இலங்கை முஸ்லிம் சமூகம், விதண்டாவாதங்களையும் வீண் பேச்சுக்களையும் விட்டுவிட்டு யதார்த்தத்தை உணர்ந்து, ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய சேவைகள் சம்பந்தமாக சிந்திக்க வேண்டிய முக்கிய காலமிது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளரும் ஸ்ரீலங்கா பொதுஜன முஸ்லிம் முன்னணியின் பொதுச் செயலாளருமான அப்துல் சத்தார் தெரிவித்தார்.

குருநாகல் நகரில் சிங்கள மொழிமூல பாடசாலைகளுக்குச் செல்லும் முஸ்லிம் மாணவிகளின் சீருடை சம்பந்தமாக அம்மாணவிகளின் பெற்றோர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

கடந்த காலங்களில் முஸ்லிம் அரசியல்வாதிகளின் பிழையான வழிநடத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட முஸ்லிம் சமூகம் இன்று நாட்டில் பாரிய சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு துரதிருஷ்டமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. விசேடமாக முஸ்லிம்கள் கிழக்கிற்கு வெளியே சிறுபான்மையாக வாழும் பிரதேசங்களில் அன்றாடம் மிகவும் சங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.



இந்த நாட்டின் பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் கூடுதலானவர்கள் முஸ்லிம் சமூகத்துடன் மிகவும் இணக்கப்பாட்டுடன் வாழ்ந்தாலும் எதிர்க்கட்சியைச் சார்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் இனவாதப் பேச்சுக்கள் மற்றும் அரசியல் இலாபத்திற்கான நடவடிக்கைகளானது முஸ்லிம்கள் மீது வீண் குற்றம் சுமத்த அல்லது சந்தேகப்படுவதற்கு வசதியை அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த நிலையில் இருந்து மீள்வதற்கான நல்லெண்ணத்தை முஸ்லிம்களாலேயே உருவாக்க முடியும். முஸ்லிம்கள் வாக்களிக்கா விட்டாலும் இன்று ஆட்சியிலுள்ள அரசாங்கம் மிகவும் ஸ்திரத் தன்மையில் உள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக இருப்பதன் மூலம் எங்களுக்குரிய காரியங்களை செய்து கொள்ள முடியாது. விசேடமாக எங்கள் மனதில் வேதனையைத் தந்த கொவிட் தொற்றின் மூலம் மரணித்த முஸ்லிம்களின் எரிப்பு விடயம் அரசியல் விடயமாக காட்டப்பட்டாலும் இன்று சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளது. இதை பிரச்சினை ஏற்படாதவாறு நல்ல முறையில் தீர்த்துத் தருவதாக இது சம்பந்தமாக ஆரம்பத்திலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எம்மிடம் உறுதியளித்திருந்தார்.

இருந்தாலும் சிலரின் அரசியல் நடவடிக்கைகளால் இந்த விடயம் காலம் கடத்தப்பட்டது. என்றாலும் இந்த விடயத்தை மிகவும் நல்ல முறையில் தீர்த்துத் தந்து முஸ்லிம் சமூகத்தை கௌரவப்படுத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட, விசேடமாக நீதி அமைச்சர் அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீழ், அதாவுல்லாஹ் உட்பட அனைவருக்கும் நன்றி சொல்ல வேண்டியது எங்கள் கடமையாகும்.

இதேபோன்று இன்று ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் என்ற கையில் இந்த நாட்டின் முஸ்லிம்களின் நல்வாழ்வுக்காக கௌரவத்திற்காக நாங்கள் உங்களோடு இருப்போம் என்பதை உறுதியாக கூறிக் கொள்வதுடன் தேர்தலின்போது முஸ்லிம் சமூகம் எங்களை மாற்றுக் கண்ணுடன் பார்த்தாலும் நானும் எமது அரசாங்கமும் மக்களின் பிரச்சினைகளின் போது அரசியல் பேதம் பார்க்க மாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களை விழிப்பூட்டும் அமைப்பும், புத்தளம் பொலிஸ் நிலையத்தின் மகளிர் பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்த வீதி நாடக நிகழ்வுகள் புத்தளம் பஸ் தரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். (படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

# கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களை அமைச்சர் அருந்திக சந்திப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ் மாவட்டத்தில் தென்னை சார் பொருட்கள் மூலம் கைத்தொழில் ஈடுபடும் மகளிர் அமைப்பினரை இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணாண்டோ சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாண பிரதேச செயலகர் பிரிவுற்குட்பட்ட கொழும்புதுறை பகுதியில் பெண்கள் சுயதொழில் அமைப்பினால் செய்யப்படும் தென்னைசார் உற்பத்தி சிறு தொழிற்சாலைக்கு சென்று இராஜாங்க அமைச்சர் அவர்களது உற்பத்திகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினரும் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதனும் பங்குபற்றியிருந்தார். இவ் உற்பத்திகளுக்கு தேவையான சகலவிதமான உதவிகளையும் பெற்றுக் கொடுக்க தாம் தயாராக இருப்பதாக இதன்போது அமைச்சர் உற்பத்தியாளர்களுக்கு உறுதியளித்தார்.

### அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

# மாத்தறை மாவட்ட கிளைக்கான புதிய நிர்வாக சபை தெரிவு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மாத்தறை மாவட்ட கிளைக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு வெலிகம பழைய தெரு மீரா ஸாஹிப் ஜும்ஆப் பள்ளிவாசலில் (மர்கஸ்) இடம்பெற்றது.

இதில் வெலிகம மத்ரஸதுல் பாரீ அறபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் ஹாபிழ் (மழாஹிரி) தலைவராகவும், வெலிகம அறபா மத்திய கல்லூரி ஆசிரியர்களான அஷ்ஷேக் எம்.எம்.எம். முன்திர் (நளீமி) செயலாளாராகவும், அஷ்ஷேக் எம்.யூ.எம். வாலிஹ் (அல்அஸ்ஹரிஃ பாரி) பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவர்களாக அஷ்ஷேக் முப்தி நஜ்முத்தீன் (ஹிழ்ரி), அஷ்ஷேக் எம்.எஸ்.எம். இஹ்ராஸ் (தீனி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் உப செயலாளராக அஷ்ஷேக் எம்.ஜே.எம். ஜஸாஇர் (ரஷாதி) தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் வெலிகம பிரதேச கிளைக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது. அதில் தலைவராக அஷ்ஷேக் எம்.எஸ்.எம். பாயிஸ் (ஹிழ்ரி) செயலாளராக அஷ்ஷேக் எம்.என்.எம். ஷிஹான் (முர்ஸி) பொருளாளராக அஷ்ஷேக் ஏ.ஸி. அப்துல்லாஹ் (முர்ஸி) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் உபதலைவர்களாக அஷ்ஷேக் எம்.ஏ.ஏ.எம்.பிஷ்ர் (பஹ்ஜி) மற்றும் மற்றும் எம்.எம்.எம். நாஜிஹ் (முர்ஸி) ஆகியோரும் உப செயலாளராக அஷ்ஷேக் எம்.எம்.ஆர்.முஹம்மது (அஸ்ஹரி) தெரிவானார்.

மேலும் மாத்தறை பிரதேச கிளை உறுப்பினர்கள் தெரிவு மாத்தறை முஹியித்தீன் பள்ளிவாசலில் இடம்பெற்றது. இதில் தலைவராக அஷ்ஷேக் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் ஹாபிழ் (மழாஹிரி), செயலாளராக அஷ்ஷேக் எம். அனஸ் (ஹாஷிமி), பொருளாலராக அஷ்ஷேக் எம்.எஸ்.எம். இஹ்ராஸ் (தீனி) ஆகியோர் தெரிவாகினர். உப தலைவர்களாக அஷ்ஷேக் எம்.ஐ.எம். ரிழ்வான் (ரஷாதி), அஷ்ஷேக் எம்.எம்.எம். ரஸீன் (பாரி) ஆகியோரும் உப செயலாளராக எம். அர்ஷத் (ஹிழ்ரி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# யுத்தத்தில் அங்கவீனமான சிப்பாய்க்கு இராணுவ சம்பிரதாயங்களுக்கமைய கோலாகல திருமணம்

கடந்த 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மனிதாபிமான நடவடிக்கைகளின் போது, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு எதிராக கம்பீரமாக நின்று போராடிய சந்தர்ப்பத்தில் தனது இடது காலை பறிகொடுத்த பெலும்மார உடுகமவில் வசிக்கும் கொமாண்டோ படையணியின் சிப்பாய் கோப்ரல் டயிள்யூ.பி.பி. சம்பத்தின் திருமணம் இராணுவ சம்பிரதாயங்களுக்கு அமைவாக திங்கட்கிழமை (08) இடம்பெற்றது.

கம்பஹா பெலும்மஹர செனெத்ம மண்டபத்தில் இத்திருமணத்தின் போது மணமகனின் திருமண பதிவின் சாட்சியாக பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும்இராணுவ தளபதியும்கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வா கையொப்பமிட்டார்.

இத்திருமணம் இராணுவபுனர் வாழ்பு பணிப்பக பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஷிரான் அபேசேகரவின் ஆலோசனையின் பேரில் சியனேவ அபி எனும் அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோப்ரல் சம்பத் 2007 ஆம் ஆண்டில் இராணுவத்தில் இணைந்து கொண்டதுடன், மனிதாபிமான நடவடிக்கைகள் உச்சகட்டத்தை அடைந்திருந்த போது 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ம் திகதி குண்டுத் தாக்குதலுக்கு



இலக்காகி தனது இடது காலை இழந்தார்.

இத்திருமணத்தின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஜெனரல் ஷவேந்திர சில்வா, அங்கவீன இராணுவ வீரர் சார்பில் கலந்து கொண்டார். சுகாதார அறிவுறுத்தல் காரணமாக மணமக்கள் சார்பில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களுடன் திருமண நிகழ்வு நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி பிரதம விருந்தினர் பெறுமதியான பரிசும் வழங்கி வைத்தார். கோப்ரல் சம்பத் 2017ல் இத்தாலியில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் போட்டிகளிலும் படகோட்டுதல் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

'காதல் அனைவரையும் வெல்லும்' என்ற வகையில், செல்வி நிலுஷா குமுதுனி தனது தாயிடமிருந்தும் பெரியவர்களிடமிருந்தும் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர், தனது வருங்கால கணவனை வாழ்நாள் முழுவதும் சிறப்பாக கவனித்துக்கொள்வதாக அவரது பெற்றோருக்கு உறுதியளித்தார். இத்திருமணத்தில் பாரம்பரிய சடங்கு சம்பிரதாயங்களும் இடம் பெற்றன.

# பரீட்சையில் ஆள்மாறாட்டம்; ஒருவர் கைது

**திறப்பனை தினகரன் நிருபர்**

ஹிதோகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிதோகம களுவில சேன மகா வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்கு தோற்றிய ஒருவர், வேறு நபர் ஒருவருக்காக பரீட்சை எழுதியமை கண்டு பிடிக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திஸ்ஸமகாராம பிரதேசத்தை சேர்ந்த 41 வயது நபர் கணித பாடத்திற்கு விடை எழுதும் போது பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிக்கு ஏற்பட்ட சந்தேகத்தில் உரிய நபரின் ஆள் அடையாளத்தை பரிசோதித்த போது இவர் வேறு நபர் ஒருவருக்காக பரீட்சை எழுதுபவர் என தெரிய வந்துள்ளது. பின்னர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி திணைக்களம் தெரிவிக்கின்றது.

அவுஸ். - நியூசி. ரி-20 தொடர்:

## 3–2 என கைப்பற்றியது நியூசிலாந்து அணி



மார்டின் கப்டிலின் அதிரடி ஆட்டத்தால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி ரி-20 போட்டியை 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து வென்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடியது. இதில் இரு அணிகளும் தலா 2 ஆட்டங்களில் வென்று தொடர் சமனிலையில் இருந்தது.

இந்நிலையில், அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நேற்றுமுன்தினம் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 8 விக்கெட்டுக்கு 142 ஓட்டங்கள் சேர்த்தது. வேட் 29 பந்துகளில் 3 பவுண்டரி, 2 சிக்சருடன் 44 ஓட்டங்கள் பெற்றார். அவ்வணியின் தலைவர் ஆரோன் பிஞ்ச் 36 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து களம் இறங்கிய நியூசிலாந்து 15.3 ஓவர்களில் 143 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. மார்டின் கப்டில் அதிரடியாக ஆடி 46 பந்துகளில் 4 சிக்சர், 7 பவுண்டரியுடன் 71 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கான்வே 36 ஓட்டங்களும், பிலிப்ஸ் 34 ஓட்டங்களும் எடுத்துள்ளனர்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியவுக்கு எதிரான ரி-20 தொடரை 3-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து.

ஆட்ட நாயகன் விருது மார்டின் கப்டிலுக்கும், தொடர் நாயகன் விருது இஷ் சோதிக்கும் வழங்கப்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட்:

# டெஸ்ட் அணியில் பெதும் நிஸ்ஸங்க



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான 17 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், உள்ளூர் போட்டிகளில் அண்மைக்காலமாக பிரகாசித்து வரும், தற்போது மேற்கிந்திய தீவுகள் அணியுடன் நடைபெற்று வருகின்ற இருபதுக்கு 20 தொடரில் துடுப்பாட்டத்தில் பிரகாசித்து வருகின்ற 22 வயதான வலதுகை துடுப்பாட்ட வீரரான பெத்தும் நிஸ்ஸங்க இலங்கை டெஸ்ட் அணிக்கு முதல்முறையாக அழைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, இலங்கை அணிக்காக அண்மைக்கலாமாக விளையாடி வருகின்ற குசல் மெண்டிஸ், குசல் பெரேரா மற்றும் டில்ருவன் பெரேரா உள்ளிட்ட வீரர்கள் டெஸ்ட் அணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி, அந்நாட்டு அணியுடன் மூவகைப் போட்டிகளும் (20க்கு 20, ஒருநாள், டெஸ்ட்) கொண்ட கிரிக்கெட் தொடர்களில் விளையாடி வருகின்றது.

இதில், இருபதுக்கு 20 போட்டிகள் நிறைவுக்கு வந்துள்ளன. 2-1 என்ற புள்ளியடிப்படையில் மேற்கிந்திய தீவுகள் அணி தொடரை கைப்பற்றியது.

இந்த நிலையில், மேற்கிந்திய தீவுகள் அணியுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணி (06) இலங்கை கிரிக்கெட்டால் வெளியிடப்பட்டுள்ளது.




திமுத் கருணாரத்ன தலைமையில் அறிவிக்கப்பட்டிருக்கும் இலங்கை அணிக் குழாமில் 7 துடுப்பாட்ட வீரர்கள், 3 சகலதுறை வீரர்கள், 3 சுழல் பந்துவீச்சாளர்கள் மற்றும் 4 வேகப் பந்துவீச்சாளர்கள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடவுச்சீட்டினை தவறவிட்ட காரணத்தில் இருபதுக்கு 20 தொடரில் விளையாட முடியாமல் போன சகலதுறை வீரரான தசுன் ஷானக்க இலங்கை டெஸ்ட் அணியில் பெயரிடப்பட்டுள்ளார்.

இறுதியாக மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் பிராகாசித்து 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1க்கு 1 என சமநிலைப்படுத்த முக்கிய காரணமாக விளங்கிய குசல் பெரேரா உபாதையினாலும், வேகப் பந்துவீச்சாளர் லஹிரு குமார கொவிட் 19 வைரஸ் தொற்றிலிருந்து பூரண குணமடையாததன் காரணத்தினாலும் இலங்கை டெஸ்ட் குழாத்தில் இடம்பெறவில்லை.

இலங்கை டெஸ்ட் அணிக்காக அண்மைக்காலமாக தொடர்ந்து விளையாடி வந்த அனுபவ சுழல் பந்துவீச்சாளரான டில்ருவன் பெரேரா, உடற்தகுதி பரிசோதனையில் தகுதிபெறாத காரணத்தினால் மேற்கிந்திய டெஸ்ட் தொடரில் இடம் பெறவில்லை.

இலங்கை தேர்வாளர்களால் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து சற்று ஓய்வு அளிக்கப்பட்டுள்ள குசல் மெண்டிஸுக்கும் டெஸ்ட் குழாத்தில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

குசல் மெண்டிஸின் இடத்தில் இளம் வீரர் பெதும் நிஸ்ஸங்க களமிறங்குவார் என கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை டெஸ்ட் குழாத்தில் இடம் பெற்றுள்ள லஹிரு திரிமான்ன, தனன் ஜய டி சில்வா, விஷ்வ பெர்னாண்டோ, ரொஷேன் சில்வா மற்றும் லசித் எம்புல்தெனிய உள்ளிட்ட வீரர்கள் இன்று (06) இரவு மேற்கிந்திய தீவுகள் நோக்கி புறப்பட்டுச் செல்வார்கள் என இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

**இலங்கை டெஸ்ட் அணி**

திமுத் கருணாரட்ன (தலைவர்) தசுன் ஷானக்க, பெதும் நிஸ்ஸங்க, ஓசத பெர்ணாண்டோ, லஹிரு திரிமான்ன, தினேஷ் சந்திமால், அஞ்செலோ மெதிவ்ஸ், நிரோஷன் டிக்வெல்ல, ரொஷேன் சில்வா, தனன்ஜய டி சில்வா, வனிந்து ஹஸரங்க, ரமேஷ் மெண்டிஸ், விஷ்வ பெர்னாண்டோ, சுரங்க லக்மால், அசித பெர்னாண்டோ, துஷ்மந்த சமீர மற்றும் லசித் எம்புல்தெனிய.

## தென்னாபிரிக்காவை இலகுவாக வீழ்த்திய இலங்கை லெஜண்ட்ஸ்



வீதி பாதுகாப்பு தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்று வரும், வீதி பாதுகாப்பு உலக ரி20 தொடரில், தென்னாபிரிக்க லெஜன்ட்ஸ் அணியை இலகுவாக வீழ்த்திய இலங்கை லெஜன்ட்ஸ் அணி அரையிறுதிக்கான வாய்ப்பை அதிகரித்துக்கொண்டுள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை லெஜன்ட்ஸ் அணி, தென்னாபிரிக்க லெஜன்ட்ஸ் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதன்படி, களமிறங்கிய தென்னாபிரிக்க லெஜன்ட்ஸ் அணிக்கு, இலங்கை லெஜன்ட்ஸ் அணியின் பந்துவீச்சாளர்கள் கடும் நெருக்கடி கொடுத்தனர். ஆரம்பத்திலிருந்து நெருக்கடியை சந்தித்த தென்னாபிரிக்க லெஜன்ட்ஸ் அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் 89 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. தென்னாபிரிக்க அணிசார்பாக அதிகபட்சமாக என்ரு புட்டிக் 39 ஓட்டங்களையும், ஷெண்டர் டி ப்ரைன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இலங்கை லெஜன்ட்ஸ் அணியின் பந்துவீச்சில், நுவான் குலசேகர, சனத் ஜயசூரிய மற்றும் ரங்கன ஹேரத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், அஜந்த மெண்டிஸ், திலகரட்ன டில்ஷான் மற்றும் தம்மிக்க பிரசாத் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை பகிர்ந்தனர்.

தென்னாபிரிக்க அணி நிர்ணயித்த இலகுவான வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி 13.2 ஓவர்கள் நிறைவில், ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சனத் ஜயசூரிய மாத்திரம் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில், திலகரட்ன டில்ஷான் மற்றும் உபுல் தரங்க ஆகியோர் இணைந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

திலகரட்ன டில்ஷான் அதிகபட்சமாக 50 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க, உபுல் தரங்க 27 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். தென்னாபிரிக்க லெஜன்ட்ஸ் அணி சார்பில் கார்னெட் க்ரூகர் ஒரு விக்கெட்டினை வீழ்த்தினார்.

இலங்கை லெஜன்ட்ஸ் அணி, இந்த ஆண்டு ஆரம்பித்த வீதி பாதுகாப்பு உலக ரி 20 தொடரின், இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று, புள்ளிப் பட்டியலில் 12 புள்ளிகளுடன் இந்திய அணியை சமப்படுத்தியுள்ளது. அதேநேரம், இலங்கை லெஜன்ட்ஸ் அணி அடுத்தப்போட்டியில் பங்களாதேஷ் லெஜன்ட்ஸ் அணியை இன்று 10ம் திகதி எதிர்கொள்ளவுள்ளதுடன், அரையிறுதிக்கான வாய்ப்பையும் அதிகரித்துக்கொண்டுள்ளது

தேசிய படகோட்ட சம்பியன்ஷிப் 2021

## பிரதான அனுசரணையாளராக SLT–MOBITEL இணைவு

இலங்கையின் விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஆதரவளித்து மேம்படுத்தும் இலக்குக்கமைய, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் தொலைத் தொடர்பாடல் சேவைகள் வழங்குநரான SLTMOBITEL, தேசிய ரொவிங் சம்பியன்ஷிப் 2021 இன் பிரதான அனுசரணையை வழங்க முன்வந்துள்ளது. 2021 இம் மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் தியவன்னா ரொவிங் சென்ரரில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டிகளை Amateur Rowing Association of Sri Lanka (ARASL) ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த காலங்களில் படகோட்டம் என்பது துரிதமாக புகழ்பெற்றுள்ளதுடன், தேசிய மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் அதிகளவு விளையாடப்படும் விளையாட்டாகவும் அமைந்துள்ளது. பெருமளவான படகோட்ட ஆர்வலர்களும் பங்குபற்றுநர்களும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் படையணிகளைச் சேர்ந்தவர்களாக அமைந்துள்ளனர். 14 வயதுக்குட்பட்ட, 16 வயதுக்குட்பட்ட, 18 வயதுக்குட்பட்ட, இடைநிலை மற்றும் திறந்த பிரிவுகளாக படகோட்ட போட்டிகள் இடம்பெறுகின்றன. சிரேஷ்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் அதிகளவு பங்கேற்கும் பெருமளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த போட்டியாக திறந்த சம்பியன்ஷிப் போட்டி அமைந்துள்ளது.

இலங்கையில் காணப்படும் மிகவும் பழமை வாய்ந்த நீர் சார்ந்த விளையாட்டாக படகோட்டம் அறியப்படுகின்றது. மேல் மாகாணத்தின் சில முன்னணி




நிறுவனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இந்த விளையாட்டு அமைந்துள்ளது. எவ்வாறாயினும், இந்த விளையாட்டின் மீது அதிகரித்துச் செல்லும் ஆர்வம் மற்றும் ஏற்பாட்டாளர்களின் அர்ப்பணிப்புடனான கவனம் செலுத்தல் போன்றவற்றினூடாக நாட்டிலுள்ள பாடசாலைகள் மட்டத்தில் இந்த விளையாட்டை பிரபல்யமடையச் செய்ய முடிந்துள்ளதுடன், பெருமளவான இளம் பராயத்தைச் சேர்ந்தவர்களை இந்த விளையாட்டில் ஈடுபடுத்த முடிந்துள்ளது.

1964 ஆம் ஆண்டு ARASL நிறுவப்பட்டதுடன், இலங்கையில் படகோட்ட போட்டிகளுக்கான தேசிய விளையாட்டு சம்மேளனமாக அறியப்படுகின்றது. இலங்கையில் படகோட்ட விளையாட்டை ஒழுங்குபடுத்தி, ஊக்குவித்து மற்றும் கட்டியெழுப்பும் பணிகளை மேற்கொள்ளும் ஒரே விளையாட்டு அமைப்பாக இந்த சம்மேளனம் திகழ்கின்றது. நாட்டில் விளையாட்டை மேம்படுத்தும் பிரதான இலக்கை ARASL கொண்டுள்ளது. அதனூடாக, நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த பங்குபற்றுநர்களை ஈடுபடுத்தி, அவர்களுக்கு இந்த விளையாட்டு தொடர்பான பயிற்சிகளைப் பெற்று, இலங்கையை உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் படகோட்ட சம்பியன்ஷிப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. நாடு முழுவதிலும் படகோட்ட போட்டிகளை ஏற்பாடு செய்யும் பணிகளை ARASL மேற்கொள்வதுடன், சர்வதேச படகோட்ட போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களையும் கொண்டுள்ளது.

## 2020ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண ஆண் அழகன் போட்டி

**கந்தளாய் தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு உள்ளக அரங்கில் 2020 ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண ஆண் அழகன் போட்டி சனிக்கிழமை(6) நடைபெற்றது.

இதில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து வீரர்கள் பங்கு பற்றினார்கள்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட ஆண் அழகனுக்கான சான்றிதழ்களை கிழக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் வழங்கி வைத்தார்.





இதில் விளையாட்டு அதிகாரிகாரிகள் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்தப்போட்டியில் கலந்து கொண்வர்களூள் அனைவரும் சிறப்பாக தமது உடல் கட்டமைப்பை வெளிப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

## நிந்தவூர் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தராக றப்சான்

**நிந்தவூர் குறூப் நிருபர்**



நிந்தவூர் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தராக ஆர். ரப்சான் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இறக்காமம் பிரதேச செயலகத்தில் விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றிய இவர், நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டு கடந்த வாரம் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

சிறந்த கிரிக்கெட் பயிற்றுவிப்பாளரான இவர், கடந்த 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இடம்பெற்ற தேசிய மட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் கிழக்கு மாகாணத்தை தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற பெரிதும் பங்காற்றியிருந்தார்.

இந்த நிலையில் தற்போது நிந்தவூர் பிரதேசத்திற்கு விளையாட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளமையானது இப்பிரதேச விளையாட்டு வீரர்கள் மத்தியில் பெரும் உவகையினை ஏற்படுத்தியுள்ளது.

அது மாத்திரமல்லாமல் எதிர்காலத்தில் கிரிக்கெட், உதைபந்து, பூப்பந்து, கரப்பந்து, கபடி, எல்லே உள்ளிட்ட மெய்வல்லுனர் விளையாட்டுகளில் தாங்கள் சிறந்த திறமைகளை வெளிக்காட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் இப்பிரதேச விளையாட்டு வீரர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை நிந்தவூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றிய ஏ.இம்றுபஸ்கான் இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 10ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## *விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதியை நீடித்தல்*

## 2021ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### பொருட்கள் மற்றும் சேவைகள்

2020-10-07ஆம் திகதி மற்றும் 2020-11-25ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது.

மேற்படி விலைகோரலுக்கான முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் 2021 மார்ச் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தேநீவவச வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவப் பிரிவில் (SUP&MM Section) 2021ஆம் திகதி மார்ச் மாதம் 31ஆம் திகதி கேள்விகள் முடிவுறுத்தப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## அறிவித்தல்

### மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
### கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண பொதுச் சேவையின் விவசாய போதனாசிரியர், தரம்-III இற்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2021

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் - III பதவிக்கு மாகாண ரீதியாக பெறப்படும் புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளுக்காக தகைமைகளை பூர்த்தி செய்த, கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.03.31 ஆகும்.

சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பப் படிவத்தினை அனுப்புவதற்கு முன்னர் கீழ் குறிப்பிட்ட கிழக்கு மாகாண இணையதளத்தில் மேலதிக தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு, மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். முறையாக பூர்த்திசெய்யப்படாது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

www.ep.gov.lk → Exams & Results →Recruitment Exam

**எம்.வை.சலீம்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

2021.03.10

afc
## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.12.2019 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 25.03.2021 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி மற்றும் வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:
**722, கோட்டை வீதிஇராஜகிரிய**
**25.03.2021**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
நம்பிக்கையினால் கட்டியெழுப்பப்பட்ட புத்தாக்கச் சக்தி

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பிடப்படும் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | பஸ்யால பிரசேத்தில் 1500m³ நீர்த் தாங்கிக் கோபுரத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) மற்றும் பரிமாற்றம் மற்றும் விநியோகத்திற்காக DI/uPVC குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள், CI/DI வால்வுகள், மேன்ஹோல் மூடிகள் மற்றும் மேற்புர பெட்டிகளைப் பதித்தல்<br>ஒப்பந்த இல. **P&D/C/GAMIWSS/PASYALA/2020/03** | 100,000/- +VAT ** | ரூபா 7.0 மில்லியன் | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C1 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 673.0 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 07/04/2021<br>மு.ப. 10.00 மணி |
| 02 | கட்டுகஸ்தோட்டையிலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு Pile அத்திவாரத்தை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல. **KNPIWSP/WORK/ PC-03/2020-75** | 20,000/-+VAT ** | ரூபா 780,000/- | **Geotechnical Pilling Precast** துறையில் GP-B2 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 78.4 மில்லியன் | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tele: 081-2492287<br>Fax: 081-2492286 | 31/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| | **M&E கேள்விகள்** | | | | | | |
| 03 | மடு நீர் வழங்கல் திட்டத்திற்கு போர்ஹோல் பம்பிகள், மின்பிறப்பாக்கி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல. **RSC/N/DGM/CAPITAL BUDGET/PUMP/ MADU/2019/008R** | 12,500/-+VAT ** | ரூபா 270,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | பி.ஓ.நி. (வடக்கு), தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2225719 Fax:024-2225088 | 24/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| 04 | Ice Plant, Cold Room, Solar Panels என்பவற்றை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் அது சார்ந்த சிவில் வேலைகள்<br>ஒப்பந்த இல. **PD/JKWSSP/ICE FACTORY/M&E/2019/01** | 12,500/-+VAT ** | - | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி WS & SP, தேநீவவச, MPCS கட்டிடம் (முதலாம் தளம்), இல. 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.<br>Tele:0212220256 Fax:0212220257 | 31/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| 05 | களுத்துறை பிராந்திய முகாமையாளர் பிரதேசத்திலுள்ள தஹம்பஹன நீர் வழங்கல் திட்டத்திற்கு End Suction Vertical Delivery Back Pull – Out Centrifugal பம்பித் தொகுதிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல. **W-S/M&E/S/EQU(01)/DGM/ RH/2021/06** | 12,500/-+VAT ** | ரூபா. 300,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | பி.ஓ.நி. (WS), தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, அங்குலான, மொரட்டுவ.<br>Tele/Fax: 0112730341, 0112224888<br>பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேற்கு தெற்கு) அலுவலகத்தில் 2021-03-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விக்கு முன்னரான நிகழ்நிலை (**Online**) கூட்டம் இடம்பெறும். | 25/03/2021<br>மு.ப. 10.00 மணி |
| 06 | 2021-02-17ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. பெத்தேகம - கலகெதர பிரதான பரிமாற்றங்களுக்கு நிலைக்குத்தாக பொருத்தும் பம்பித் தொகுதிகள் in Line Booster மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் - ஒப்பந்த இல. **RSC(S)/M&E/S/BOOSTER PUMPS/BADDEGAMA-GALAGODA/RH/2020-01**. இந்த ஒப்பந்தத்தின் முடிவுத் திகதி 2021-03-17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| 07 | 2021-01-27ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. மாரஸ்ஸன நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை பெரிதாக்குதல் - ஒப்பந்த இல. **RSC-C/P&D/CIVIL/CB/MARASSANA/2020/21** - இந்த ஒப்பந்தத்தின் முடிவுத் திகதி 2021-03-24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **இயந்திராதிகளை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 08 | நிர்மாணப் பிரிவின் பிநிஓ (W/N) அலுவலகத்திற்கு பெக்லோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல. **RSC(W/N)/SS/HIRING/ CONS. (REC)/2021/47** | 4,000/-+VAT | ரூபா. 6,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 24/03/2021<br>மு.ப. 10.00 மணி |
| 09 | முகாமையாளர் (கம்பஹா) பிராந்தியத்திற்கு 02 எண்ணிக்கையான பெக்கோ லோடர்களை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல. **RSC(W/N)/SS/ HIRING/ GAM(O&M)/2021/39** | 6,000/-+VAT ** | ரூபா 6,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 24/03/2021<br>மு.ப. 10.00 மணி |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 10 | பிஓநி (தெற்கு) அலுவலகத்தின் ஹிக்கடுவ சாக்கடைத் திட்டத்திற்கு முச்சக்கரவண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/HIKKADUWA/ SEW/ HIRING/THREE WHEELER/O&M/2021-17** | 500/-+VAT | ரூபா 2,500/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 24/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| 11 | ஹம்பாந்தோட்டை O&M அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/HIRING/ VAN/ HAMBANTOTA OFFICE/O&M/2021-20** | 500/-+VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 24/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| 12 | அஹங்கம நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/HIRING/CREW CAB/ AHANGAMA/O&M/2021-16** | 500/-+VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 24/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| 13 | அம்பலந்தொட்ட நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/HIRING/CREW CAB/ AMBALANTOTA/O&M/2021-19** | 500/-+VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 24/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| 14 | மாளிம்பட நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/HIRING/CREW CAB/ MALIMBADA/O&M/2021-18** | 500/-+VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 24/03/2021<br>பி.ப. 2.00 மணி |
| | **மண் பரிசோதனை (SOIL INVESTIGATION)** | | | | | | |
| 15 | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், வலயம் 02 இன் கீழுள்ள சேவை நீர்த்தேக்கங்கள் மற்றும் பம்பி இல்ல வேலைத்தளத்திற்கான மண் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.<br>ஒப்பந்த இல. **NWSDB/C/CP/A4-11/GOSL/2021/01** | 6,000/-+VAT ** | ரூபா 70,000/- | பொறியியல் வேலைகளுக்கான மண் பரிசோதனையில் அனுபவம் வாய்ந்த இலங்கையின் மண் பரிசோதனை நிறுவனங்கள் | | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tele: 081-2492287 Fax: 081-2492286<br>2021 மார்ச் 25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். | 31/03/2021<br>பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள www.drc.gov.lk இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். (“**” எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

பிச் தரப்படுத்தல் AA- (LKA)

# மக்கள் வங்கி

## நிதிக் கூற்றுக்கள்

### வருமானக் கூற்று

டிசெம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

| | வங்கி | | | வங்கி தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2019* (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | வளர்ச்சி % | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2019* (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | வளர்ச்சி % |
| **மொத்த வருமானம்** | **190,981,708** | **199,728,985** | (4.4) | **223,898,429** | **238,218,731** | (6.0) |
